
ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம்



பிரேமா பிரசுரம்



ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம்

தயாரிப்பு :

ரவி ராமநாதன்

எழுதியவர் :

துர்க்காதாஸ் எஸ்.கே. சுவாமி

பிரேமா

பிரசுரம்

35, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைபேசி : 24800325, 24833180.

Fax : 044-24811755
E-mail : aruram@md2.vsnl.net.in

பிரேமா பிரசுரம் - 358

முதற் பதிப்பு : டிசம்பர் 2002

இரண்டாம் பதிப்பு : ஜனவரி 2004

Tamil - Sri Kanchi Kamakoti Puranam - Rs. 25/-

நூல் வெளியீடு விவரணம்

நூலின் பெயர் :	ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம்
எழுதியவர் :	துர்க்காதாஸ் எஸ்.கே. சுவாமி
பதிப்பாண்டு	இரண்டாம் பதிப்பு ஜனவரி 2004
உரிமை :	பதிப்பகத்தாருக்கு
தாள் :	11.6 கி.கி வெள்ளைத் தாள்
நூலின் அளவு :	1X8 கிரவுன்
பக்கங்கள் :	144
எழுத்து :	12.5 புள்ளி
கட்டு :	கார்டுபோர்டு - பர்பக்ட் பைண்டிங்
வெளியீடு :	பிரேமா பிரசுரம் 35, ஆற்காடு சாலை, சென்னை - 24.
கணிப்பொறி வடிவமைப்பு :	ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை-24.
அச்சிட்டோர் :	காரிஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 29.
விலை :	ரூ. 25/-



பொருளடக்கம்



ஊன் ஆனாய்! உயிர் ஆனாய்
உயிரில் ஊறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம்பூத
வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க் கொன்றைச்
சிவம் என்னும் பொருள் ஆனாய்!
நான் ஆனாய்! உயிர்க்கு உயிரே
ஞானப் பேரொளி உமையே

1. காஞ்சிபுர வரலாறு

இந்தப் பூலோகமானது ஒரு கோடி கோடி யோசனை பரப்பளவுள்ளது. இதனுள்ளே பல மாத்ருகாகணங்களின் பீடங்கள் இருக்கின்றன. அவற்றில் சிறந்து விளங்குவது **காமராஜ பீடம், ஜாலந்தரபீடம்,** ஒட்யாணபீடம் என்பதாகும்.

இந்த மூன்று பீடங்களையும் பூஜித்து வழிபட்டவர்கள் ஹயக்கிரீவர், பிருகு முனிவர், வியாசமுனிவர் ஆவர்.

இவர்களில் காமராஜ பீடத்தில் வாக்பவ கூடத்தைப் பூஜித்தவர் ஹயக்கிரீவர். ஜாலந்தர பீடத்தில் மத்திய கூடத்தைப் பூஜித்தவர் பிருகுமுனிவர். ஒட்யாண பீடத்தில் பராசக்தி சொரூபமான காமரூபத்தைப் பூஜித்தவர் வியாசமுனிவர். இவற்றுள் முதலில் கூறிய காமராஜ பீடம் காஞ்சி நகரில் இருக்கிறது.

காஞ்சி நகரத்தின் எல்லைகள் :

கங்கை நதிக்குத் தெற்கு திசையில் உள்ள சமுத்திர கட்டமே காஞ்சியின் கிழக்கு எல்லையாகும். அந்தக் கிழக்குச் சமுத்திரத்திற்கு நிருதியில் உள்ள தட்சிணயே அதன் தெற்கு எல்லையாகும். அதற்கு வாயுவில் சிலாஹ்ருதமே அதன் மேற்கு எல்லையாகும். அதற்கு ஈசானத்தில் உள்ள புஷ்கரணியே அதன் வடக்கு எல்லையாகும்.

கிழக்கு எல்லையின் மகிமை :

சரஸ்வதிதேவி முன்னொரு காலத்தில் தனக்கு ஏற்பட்டிருந்த ஒரு பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக நதி உருவம் எடுத்தாள். பின்னர் இந்துமாக் கடலில் வந்து சங்கமமாகிப் பரிசுத்தமடைந்தாள். உடனே அவள் தன் கணவரோடு சேர்ந்து வந்து சமுத்திர ராஜனை நோக்கி, "இந்தச்

சமுத்திரத்தில் யாராக இருந்தாலும், எந்தக் காலத்தில் ஸ்நானம் செய்தாலும், அவர்கள் தாங்கள் செய்த பாபவினைகளிலிருந்தும் விடுபட்டுப் புண்ணிய சீலர்களாக மாறுவார்கள். இறுதியில் திருமாலின் திருவடித் தாமரைகளில் ஐக்கியமாவார்கள்!" என்று வரமளித்தாள். இப்படிப்பட்ட மகத்துவம் பெற்றிருப்பதாலும், காஞ்சி நகரின் கிழக்கெல்லையாகச் சமுத்திர கட்டம் அமைந்திருப்பதாலும், இந்த எல்லைக்குள் நீராடி மகிழ்வதற்குக் குறிப்பிட்ட கால நேரம் என்று எதுவுமே கிடையாது. அவரவர், இஷ்டப்பட்ட நேரத்தில் இந்தக் கிழக்கு எல்லைக்குள் பிரவேசித்து, மனம் போல் நீராடி மகிழலாம்.

தெற்கு எல்லையின் மகிமை :

முன்னொரு காலத்தில் அசுர குருவான பிருகுமுனிவர் சிவபெருமானின் கடாட்சத்தினால் பினாகம் என்ற தனுசை பூமியில் உருட்டிக் கையில் எடுத்தார். அப்போது பாதாள கங்கையானது நதிரூபமாகப் பெருக்கெடுத்து ஓடிச் சென்றது. அக்காட்சியைக் கண்ட பிருகுமுனிவர், இது பினாகத்தினால் உண்டாகியபடியால் பினாகி என்ற பெயருடன் வழங்கி வருகிறது என்றும், இந்த நதியில் நீராடுபவர்கள் புண்ணியசீலர்களாகச் சிவபதம் அடைவார்கள் என்றும் வரமளித்தார்.

மேற்கு எல்லையின் மகிமை :

அமிர்தம் போலப் பிழைப்பிக்கக் கூடிய சக்தி வாய்ந்த சஞ்சீவினி மலையை முன்னொரு காலத்தில் அனுமார் பெயர்த்தெடுத்துக் கொண்டு வரும்போது இந்தச் சிலாஹ்ருதத் தீர்த்தத்தில் அலம்பி, அதன் பிறகு லட்சுமணரிடத்தில் அதைக் கொடுத்தார். அப்போது அவர் அந்தத் தடாகத்தை நோக்கி, "இதில் யார் வந்து ஸ்நானம் செய்தாலும், அவர்கள் சித்தர்களாக மாறி, நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருந்து, பிறகு தெய்வத்

தன்மை பெற்று விஷ்ணு பதத்தை அடையக் கடவார்கள்" என்று வரமளித்தார்.

வடக்கு எல்லையின் மகிமை :

முன்னொரு காலத்தில் திருமாலானவர் லட்சுமிதேவியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அவர் சித்தர் வேஷம் தரித்து, திருப்பதி என்ற சேஷாசலத்திற்கு வந்தார் அங்கே, தம்முடைய சிஷ்யர்கள் நீராடுவதற்காக ஒரு தடாகத்தை உற்பத்தி செய்தார். அதில் விரஜா நதியைப் பிரதிஷ்டை செய்து, அதற்கு விரஜா நதி என்றும் ஸ்வாமி புஷ்கரணி என்றும் பெயரிட்டு மகிழ்ந்தார். தம் சிடர்களை அந்நதியில் நீராடச் செய்து, இதில் யார் ஒருவர் ஸ்நானம் செய்கிறார்களோ, அவர்கள் இந்த உலகில் சகலவிதமான போக பாக்கியங்களையும் அனுபவித்துக் கடைசியில் எம்முடைய உலகத்திற்கு வந்து சேர்வார்களாக என்று வரமளித்தார்.

இந்த எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தை துண்டீரன் என்ற அரசன் நீதிநெறி பிறழாமல் ஆண்டு வந்தான். அதனால் இது துண்டீர மண்டலம் என்னும் பெயரையும் பெற்றது.

புறநகர் :

காஞ்சிபுரத்தின் கிழக்கு எல்லையான சமுத்திரத்திற்கு மேற்கில் மகாபலிபுரம் இருக்கிறது. அதற்கு நிருதியில் தேவகிபுரமும், அதற்கு வாயுவில் விரிஞ்சிபுரமும், அதற்கு ஈசானத்தில் நாஹலாபுரமும், அதற்கு ஆக்னேயத்தில் மேலே சொன்ன மகாபலி புரமும் அமைந்திருக்கின்றன.

புறநகரங்களின் வரலாறு :

பூர்விகத்தில் மகாபலிச் சக்கரவர்த்தி பரமசிவனிடமிருந்து அனுக்கிரகம் பெற்று, பெருஞ்

செல்வத்தையடைந்து அங்கு வாழ்ந்திருந்தான். அதனால் அதற்கு மகாபலிபுரமென்ற பெயர் அமைந்து விட்டது. உக்கிரசேனன் என்ற அரசன் பரமசிவனை வணங்கி வழிபட்டு, கன்னிகைகளுள் ரத்தினமாகத் திகழும் தேவகி என்னும் கட்டழகியை அடைந்து அங்கு வாழ்ந்திருந்தான். அதனால் அதற்கு தேவகிபுரம் என்ற பெயர் வழங்கலாயிற்று. தேவதாசிகளில் ஒருவளான ரம்பையானவள் சிவபெருமானை ஆராதித்து, ஊர்வசி முதலானவர்களைவிட தேவேந்திரன் தன் பேரில் தான் அதிகப் பிரியம் காட்டவேண்டுமென்று கருதி தவம் செய்ய விரும்பினாள். அவள் தவம் செய்வதற்காக என்றே பிருமதேவன் சிருஷ்டி செய்த புரமாகையால் அது விரிஞ்சிபுரம் என்ற பெயரை அடைந்தது. தேவாதி தேவர்களனைவரும் சிவபெருமானைப் பூஜித்து, உலகத்தையே அழித்து நாசமாக்கி விடக்கூடிய நாகத்திலிருந்து தோன்றிய விஷத்தை அவருக்கு அக்கிர பூஜையாகக் கொடுத்தார்கள். அதனால் இதற்கு நாகஹலாபுரம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இந்த நான்கு புரங்களுக்கு உட்பட்ட பிரதேசமானது ஏகாம்பரநாதர் பூஜார்த்தமாய் வந்த பார்வதிதேவியார் அமர்ந்து தவம் செய்ததனால் பிரகாசம் பெற்றது. அதனால் இது தபோவனம் என்று அழைக்கப்பட்டது.

உள்நகர்

மேலே சொல்லிய நான்கு எல்லைகளுக்குள் மகாபலிபுரத்திற்கு மேற்கில் திருவேணி சங்கம நகரம், அதற்கு நிருதியில் வியாக்கிரபுரவனம், அதற்கு வாயுவில் க்ஷீராப்தி நகரம், அதற்கு ஈசான்யத்தில் நந்திகங்காபுரம், அதற்கு ஆக்னேயத்தில் முன்கூறிய திருவேணி சங்கம நகரம் ஆகியவைகள் இருக்கின்றன. இதன் விஸ்திரணம் நூற்றிஅறுபது யோசனைதூரம் என்பார்கள்.

உள் நகரங்களின் வரலாறு

தம்முடைய ஒரு பக்தனுக்குக் கிருஷ்ண பகவான் திருவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் கிடைக்கக்கூடிய பலனை இங்கு தந்தார். அதனால் இதற்கு திருவேணி சங்கம நகரம் என்ற பெயர் வழங்கியது. நடராஜ மூர்த்தி, வியாக்கிரபாதருக்குப் பூர்வத்தில் இங்கு நிருத்த தரிசனம் காட்டியருளியதால் வியாக்கிரபுரவனம் என்றும், தம் பக்தனுக்காகத் திருமாலானவர் திருப்பாற்கடலில் தாம் வீற்றிருக்கும் கோலத்தை இங்கு காட்டியருளியதால் க்ஷிராப்தி நகரம் என்றும், பெயர் பெற்றன. பரமேஸ்வரரிடம் அதிக அன்பு கொண்டிருந்த புலையன் ஒருவன், தன்னுடைய விளைச்சல் நிலங்களெல்லாம் மழையில்லாமல் வாடி வதங்கிப் பாழாகக் கிடப்பதைக் கண்டு அளவற்ற மனத் துயரம் கொண்டான். அதைப் பார்த்த சிவபெருமான் தம் பக்தனுக்காக மனமிரங்கி நந்திதேவரின் வாயின் வழியாகக் கங்கை நதியை வரச் செய்து பயிர் பச்சைகளை வளர்ந்தோங்கச் செய்தார். அவனையும் அந்தப் புண்ணிய நதியில் மூழ்கி நீராடச் செய்து மோட்சம் பெறச் செய்தார். அதனால் இது நந்திகங்காபுரம் எனவும் பெயர் பெற்றது.

இந்த நான்கு நகரங்களுக்கு உட்பட்ட பிரதேசம் முன்பொரு சமயம் பிருமதேவன் செய்த அஸ்வமேத யாகத்திற்குச் சாலையாக அமைந்து விளங்கியதால் பிருமசாலையென்ற பெயரைப் பெற்றது.

க்ஷேத்திர எல்லை : இப்போது சொல்லிய திருவேணி சங்கமத்திற்கு மேற்கில் உள்ள விஷ்ணு க்ஷேத்திரத்தில் பாஞ்சாலிகை என்ற துர்க்கையும், அதற்கு மேற்கில் கன்னிகேசர் என்னும் சிவபெருமானும், அதற்கு உத்தரத்தில் உள்ள சூரிய புஷ்கரணி தீரத்தில் ஸ்வேதாக்கியரென்னும் கிருஷ்ணபகவானும், அதற்கு கிழக்கில் உள்ள சந்திர

புஷ்கரணி திரத்தில் க்ஷேத்திராங்கி என்னும் துர்க்கையும், அதற்கு ஆக்னேயத்தில் முன்கூறிய பாஞ்சாலிகை என்னும் துர்க்கையும் அமர்ந்திருக்கிறார்கள்.

க்ஷேத்திரங்களின் பெயர்களைப் பற்றிய விவரம்

இத்தகைய நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட இப்பிரதேசம் பசு உருவமான புண்ணியஸ்தலமென்று புகழப்பட்டு வருகிறது. தவிரவும் இது சத்ய விரத க்ஷேத்திரம், பாஸ்கர க்ஷேத்திரம், தைஜஸ க்ஷேத்திரம், சிவசக்தி க்ஷேத்திரம், சக்தி க்ஷேத்திரம் என்றும் வழங்கப்படுகிறது. சிவசாந்நித்யகாரகமாகவும் மகா சக்திப் பிரபாவத்துக்கு முதலிடமாகவும் அந்தச் சக்தி வைபவத்துக்குப் பிரதானமாகவும், அந்தச் சக்தி சொரூபமாகிய விஷ்ணு சக்திக்கு அதிஷ்டானமாகவும், அழிவற்றதாகவும், பரிசுத்தமானதாகவும், முனிவர்கள் சூழ்ந்திருக்கப்பட்டதாகவும், ஸ்ரீபுரத்திற்கு நாயகமாகியும், சாட்சாத் கைலாச வைகுண்ட ஸ்தானமாகவும் பார்க்கப்பட்டும், சொல்லப்பட்டும் பிரசித்தி பெற்றும் விளங்கி வருகிறது.

சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும், பரந்தாமனுக்கும் பிரதான இடமாகவும், எந்தக் காலத்திலும் அழிவில்லாததாகவும், தவசீலர்கள் வசிக்கக் கூடியதாகவும் உள்ள இடம் சத்திய விரத க்ஷேத்திரமாகும். கடல், நதி, ஆறு முதலியவைகளாலும், பிரும்மாண்டமான மலைகளாலும், கோவில், கோபுரங்களாலும் நிரம்பப்பட்ட இடம் **பாஸ்கர க்ஷேத்திரமாகும்.** மகாபிலங்களாலும், பிரும்மாண்டமான மரம், செடி, கொடிகளாலும், புண்ணிய விமானங்களாலும் பெயர் பெற்று விளங்கி வரும் இடம் **தைஜஸ க்ஷேத்திரமாகும்.** சிவக்ஷேத்திரத்தில் விஷ்ணு க்ஷேத்திரமும், விஷ்ணு க்ஷேத்திரத்தில் சிவக்ஷேத்திரமும் வித்தியாசமில்லாமல் சேர்ந்திருப்பதால் அந்த இடம் சிவசக்தி க்ஷேத்திரமாகும். நிர்க்குணமான

பரமாத்ம சக்தியாகவும், மகாமாயா ரூபியாகவும் விளங்குபவள் பராசக்தியாவாள். அவள் தனுகரண பேதங்களால் சிவரூபமாகவும், சக்தி ரூபமாகவும், விஷ்ணு ரூபமாகவும் பிரிந்து சகல இடங்களிலும் பரவி நின்று சகுண மூர்த்தமாகத் திவ்வியஸ்தலங்களிலே வெளிரூபமாகவும், பெண் உருவமாகவும், ஆண் உருவமாகவும் விளங்கி வரும் இடம் சக்தி க்ஷேத்திரமாகும்.

பாலாற்றின் விவரம்

பூர்வீகத்தில் உமையவளின் பாலைச் சுவைத்த மகிமையினால் சர்வத்தையும் வென்றவராகவும், சாஸ்திரக் கேள்விகளில் சிறந்தவராகவும் விளங்கி வந்தார் முருகப்பெருமான். அவர் ஒருசமயம் நான்முகனைப் பார்த்து ஞானவித்தையான பிரணவத்தின் பொருளை விளக்கிச் சொல்லும்படிக் கேட்டார். அதற்குப் பிருமதேவன் சரியான பதிலளிக்க முடியாமல் சிறையில் தள்ளப்பட்டு விட்டார். பிறகு அவர் அக்ஷீரபானத்தை அடைய விரும்பி நந்தி மலையில் தேவி தீர்த்தக் கரையில் அமர்ந்து கடுந்தவம் புரியலானார். அவருடைய தவத்திற்கு மெச்சி பரமேஸ்வரன் அவர் முன்னிலையில் காட்சியளித்தார். பிருமன் அவரிடமிருந்து பராசக்தியின் மகாமந்திரத்தை உபதேசம் பெற்றுக் கொண்டு நூறு வருடகாலம் அதிகக் கடுமையாகத் தவம் புரிந்தார். அத்தவத்திற்கு மெச்சிய மகாமாயா சொரூபியும், ஷாட்குண்ணிய பரிபூரணையும், ஸ்ரீவித்தியா சொரூபியும், ஸ்ரீசக்ர நகரத்திற்கு மகாஞானியும், வித்தியா சொரூபியுமாகி விளங்கி வரும் உமாமகேஸ்வரி, பிரத்தியட்சமாகி, தன்னுடைய மார்பகத்திலிருந்து அமுதேஸ்வரியைத் தோன்றச் செய்தாள். நான்முகனின் தலையில் அமிர்த தாரையைப் பொழிந்து, ஞானோதயம் அடையும்படிச் செய்தாள். பிருமதேவன் அளவுகடந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு அந்த அமிர்த தாரையைக் குடித்தார். குடித்து மிகுதியாக இருந்ததை தமது வாயின் வழியாக

வெளியே விட்டார். அது நந்தி மலையிலிருந்து பெருகி வழிந்து பாகுநதி, குண்டலினி என்ற இரண்டு உபநதிகளோடு கலந்து கீழ் சமுத்திரத்தில் வந்து சங்கமமாயிற்று. அந்த அமிர்த பானத்தால் சகலகலா வல்லபராகத் திகழ்ந்தார் பிருமன். அவர் அந்நதியைப் பார்த்து, “உன் மடியில் நீராடுபவர்களெல்லாம், சகல கேள்வி சாஸ்திரங்களிலும் மேன்மையடைந்தவர்களாய் மோட்சத்தை அடைவார்களாக!” என்று வரமளித்தார்.

முன்னொரு காலத்தில் பிராமணன் ஒருவன் தன்னுடைய குலாசாரங்களையெல்லாம் தவறவிட்டு விட்டுப் பாவ காரியங்களையே செய்து உயிர் நீத்தான். அவன் செய்த தீவினைகளுக்காக யமதர்மராஜனிடம் தண்டனைகளை அனுபவித்து, மீண்டும் பூலோகத்தில் பிறந்தான். ஆனால் இம்முறை அவன் மானிடனாகப் பிறக்கவில்லை. குண்டலினி என்னும் நதியில் ஒரு தவளையாகப் பிறந்திருந்தான். அமிர்தம் கலந்த நதியானது குண்டலினி நதியோடு கலந்து வரும்போது ஒரு தண்ணீர்ப் பாம்பின் வாயில் சிக்கித் தவளை சாகும்போது, பூர்வஜன்ம வாசனை தோன்றி மோட்சத்தையடைந்தான். இம்மாதிரியே இந்த அமிர்த நதியில் வசித்து வரும் ஜீவராசிகளுடைய ஸ்பரிசத்தாலும், நதியிலுள்ள நீரின் ஸ்பரிசத்தாலும், இறைவனின் திருவடி நிழலில் ஐக்கியமானவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது.

பராசக்தியின் மூன்று ரூபங்கள்

முன்னொரு சமயம் பிருமதேவன், தமது குலத்தில், பிறந்திருந்த அசுரர்களுக்கெல்லாம் மீண்டும் உயிரையும், அவர்கள் கோரும் வரங்களையும் தாமே கொடுக்க வேண்டுமென்று விரும்பினார். அதற்கு வேண்டிய சக்தியை அடைவதற்காக ஸ்ரீபுர நகரமாகிய காஞ்சிபுரத்தில் பரமாக சமூதத்தில் அமர்ந்திருக்கும் காமாட்சிதேவின் சந்நிதானத்திற்கு வந்து, அத்தேவியை வணங்கித் தவம் புரியத் தொடங்கினார். அப்போது,

அந்த க்ஷேத்திரத்துக்கு எவனொருவனாலும், எந்தவித இடையூறும் நேரிடாத வண்ணம், மகாவிஷ்ணுவினுடைய காதுகளிலிருந்து உற்பத்தியாகிய மது, கைடபர் என்னும் இரு அசுரர்களைக் காவலாக வைத்துக் கொண்ட பிறகே, அவர் தம்முடைய தவத்தை ஆரம்பித்தார்.

நான்முகனுக்குக் காவலாக இருக்கும் அவ்விரு அசுரர்களையும் அழிக்க எண்ணினாள் - பராசக்தி. உடனே அவள் அந்த அசுரர்களுக்கும்,



பிருமதேவனுக்கும் பின்புறமாக நடுவே வந்து நின்றாள். அவள் தனது மாயையினால் அசுரர்களுக்கு முன்பாகவும், பிருமனுக்கு முன்பாகவும் சுயவடிவமெடுத்துக் காட்சியளித்தாள். அசுரர்களுக்கு முன்னால் காட்சியளித்த சக்தி தேவியானவள், மகாவிஷ்ணுவின் உருவம் கொண்டு, சக்ராயுதத்தினால் அவ்விரு அசுரர்களுடைய

தலைகளையும் வெட்டியெறிந்தாள். பிறகு அவள் பிலாகாசத்துக்கு ஆக்னேய திக்கில் வந்து, நின்று கொண்டிருக்கும் நிலையில் தன் சொரூபமாகிய பிலத்தின் முகமாக நின்றாள்.

மது, கைடபர் என்ற அசுரர்களிருவரும் தங்கள் தலைகள் வெட்டப்பட்டு விழும்போது பெருங் கூச்சலிட்டார்கள். அக்கூக்குரலைக் கேட்ட நான்முகன் திக்பிரமையடைந்தார். அவர் அசுரர்களிடம் விரைந்து வந்து, தலைகள் அறுபட்டு ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோட, இரு முண்டங்களும் துடிதுடிப்பதைப் பார்த்து, ''அடே, இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று அடங்காக் கோபமடைந்தார். "எனக்குக் காவலாக வைத்திருந்த இந்த அசுர சகோதரர்களைக் கொன்றவன் யார்? அவன் எங்கே போய்விட்டான்?" என்று அவர் தம் விழிகளை சகல திக்குகளிலும் சுழல விட்டார். அப்போது ஆக்னேய திக்கில் அவருடைய பார்வை சென்றது. அங்கே சங்கு சக்ரதாரியாக மகாவிஷ்ணுவின் வடிவம் கொண்டு அஞ்சி ஓடுவதைப் போல் ஓடிச் செல்லும் தேவியாகிய திருமாலை அவர் பார்த்து விட்டார். உடனே இந்தத் திருமால்தான் அவ்வசுரர்களை அழித்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். திருமாலைப் பின் தொடர்ந்து வேகமாக ஓடிச் சென்று, அவரைத் தீர்த்துக் கட்டும் நோக்கத்தோடு பிருமாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அதைப் பார்த்த பராசக்தியாகிய பரந்தாமன் நான்முகனை நோக்கி, "பிருமதேவனே! உனக்குக் காவலாக இருந்த அசுரர்களைக் கொன்றது நானல்ல! அவர்களின் சிரங்களை அறுத்துத் தள்ளியவர் பரமேஸ்வரனேயாவார். அவரும், இங்கிருந்து இப்போதுதான் சென்றிருக்கிறார். நீ அவரைப் பார்க்கவேயில்லையா?" என்று கேட்டாள். அதற்குப் பிருமன் "இல்லை" என்று தலையசைக்கவே, "அதோ அச்சிவபெருமான் உனக்குப் பின்புறத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கிறார். வேண்டுமென்றால்

திரும்பிப் பார்த்துக் கொள்!" என்று தனது சுட்டு விரலால் அவருக்குப் பின்புறமாகச் சுட்டிக் காட்டியபடியே கூறினாள். உடனே நான்முகனும் தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்தார். அவர் திரும்பிப் பார்ப்பதற்கு முன்பாக திருமாலாகத் தோன்றிய உமாதேவியானவள் தானே சிவபெருமானாகத் தோற்றமளித்து, பிருமனின் கண்களுக்குத் தெரியும்படியாகச் சென்றாள். அதைப் புரிந்து கொள்ளாத நான்முகக் கடவுள், தனக்கு எதிரில் இருந்த திருமாலை நோக்கி, "என்னுடைய காவலர்களை நீங்கள் கொன்றிருப்பீர்களோ என்று நான் நினைத்து விட்டேன். ஆனால் அவர்களைக் கொன்றவர் நீங்கள் அல்ல என்பது இப்போது எனக்குப் புரிந்து விட்டது!" என்று கூறினார். பிறகு அவர் வாயு திக்கை நோக்கித் திரும்பிப் பார்த்தார். அந்தத் திக்கிலே காலகண்டராகவும் மகா பயங்கரமான தோற்றத்தோடும், அகோர வடிவினராகச் சூலம், பாசம் ஆகிய ஆயுதங்களைத் தரித்திருக்கும் பைரவரூபியாகிய ருத்திர மூர்த்தி ஓடிச் செல்வதை அவர் பார்த்தார். "ஓஹோ! இதோ ஓடிச் செல்கிறாரே, இவர்தான் நம் காவலர்களைக் கொன்றிருக்க வேண்டும்!" என்று மனதிற்குள் கருதி, அளவுகடந்த கோபாவேசத்தோடு அம்மூர்த்தியை நெருங்கிச் சென்றார். அப்போது பரமேஸ்வரனாகத் தோற்றமளித்த மகாதேவியானவள், "நான்முகனே! உன்னுடைய கண்கள் எதனால் இப்படிச் செக்கச் செவேல் என்று சிவப்பாகக் காட்சியளிக்கிறது? உனக்கு ஏதாவது கோபமா என்ன?" என்று கேட்டாள். அக்கேள்விக்குப் பிருமன் ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அதைக் கண்டதும் ருத்திர மூர்த்தியாகிய பராசக்திதேவி கோபமடைந்தவள் போல் பாசுபதாஸ்திரத்தைத் தன் கைகளில் தாங்கி, திவ்விய தேஜஸோடு வானவெளியில் மறைந்து போனாள். அக்காட்சியைக் கண்ணுற்ற பிருமன் அதிவியப்படைந்தவராய் தம் காவலர்களைக்

கொன்றவர் ருத்திரமூர்த்தி தான் என்று கூறிய திருமாலைத் திரும்பிப் பார்த்தார். அப்போது அத்திருமாலும் வானவெளியில் தம் உருவத்தை மறைத்துக் கொண்டு விட்டார்.

2. ஹரிக்ஷேத்திர மகிமை

பராசக்திதேவியானவள் அக்னி திக்கில் வரதராஜ மூர்த்தியாகத் தோன்றி நான்முகன் காண நின்றதனால், அது ஹரிக்ஷேத்திரம் என்ற பெயரைப் பெற்றது. இதற்கு மற்ற ஐந்து பெயர்களும் உண்டு. அவைகள் : ஹரிக்ஷேத்திரம், புண்யகோடி க்ஷேத்திரம், வைகுண்ட க்ஷேத்திரம், அஸ்திசைல க்ஷேத்திரம், திரிஸ்ரோத க்ஷேத்திரம்.

இவற்றின் எல்லைகள் :

சந்திர புஷ்கரணி அமர்ந்திருக்கும் க்ஷேத்திராங்கி என்னும் துர்க்கைக்கு ஆக்னேய திக்கில் உள்ள புரந்தரேசருடைய கோவில்தான் கிழக்கு எல்லை. அதற்கு தட்சிண பாகத்தில் உள்ள பாஞ்சாலிகா க்ஷேத்திரம்தான் தெற்கு எல்லை. அதற்கு மேற்கில் உள்ள சிம்ஹாலாலயம் தான் மேற்கு எல்லை. அதற்கு வடக்கில் முன் குறிப்பிட்ட க்ஷேத்திராங்கி ஆலயம்தான் வடக்கு எல்லை. ஹரிக்ஷேத்திரமாகிய இந்த எல்லையில் விக்கின விநாயகரின் கோவில், முருகப் பெருமானின் கோவில், துர்க்கையம்மனின் கோவில், பரமேஸ்வரரின் கோவில், மகாவிஷ்ணுவின் கோவில் முத்திரைகள் தீர்த்தம். அவையாவன :

க்ஷேத்திராங்கிக்கு ஆக்னேயத்தில் நான்முகக் கடவுளானவர், அஸ்வமேத யாகத்துக்கு வரக்கூடிய இடையூறுகளை அகற்றி சுபமாக முடிவடையச் செய்வதற்காக வணங்கி வழிபட்ட வலம்புரி விநாயகர்

ஆலயம். அதற்கு கிழக்கில் முருகவேளின் ஆலயம். அதற்கு தட்சிணத்தில் யாகத்துக்குக் காவலாக வேண்டிக் கொண்ட பாஞ்சாலிகை ஆலயம். அதற்கு வாயுவில் க்ஷேத்திராங்கி ஆலயம். (இந்த நான்கு ஆலயங்களுக்கும் உட்பட்ட பிரதேசம், நான்முகன் அஸ்வமேத யாகத்திற்குக் கொண்டு வந்த குதிரையைத் திருடிச் சென்ற குதிரை முகத்தோனாகிய ஹயாசுரனைக் கொன்ற இடமே அஸ்வமேத யாகம் செய்வதற்குரிய இடமான பிருமாஸ்வமேத யாகசாலை என்பதாகும் அதற்கு தெற்கு திசையில் பரந்தாமனைத் துதித்து வழிபட்டு அவரிடமிருந்து சங்கைப் பெற்றிருக்கும் கம்புதாரிணி ஆலயம். அதற்கு ஆக்னேயத்தில் சோமயாகத்தில் உற்பத்தியாகிய குதிரையைப் பலிகொண்ட கிராம தேவதையாகிய பாணாம்பிகை ஆலயம். அதற்கு தெற்கில் புண்ணிய கோடீஸ்வரர் ஆலயம். அதற்கு வாயுதிக்கில் நான்முகன் செய்த அஸ்வமேத யாகத்தில் "உத்காதா" என்னும் ருத்விக்கர்மத்தை வகித்திருக்கும் மணிகண்டேஸ்வரர் ஆலயம். அதற்கு வடக்கில் கவுதம முனிவரால் தேகம் முழுவதும் பெண்குறிகளாக ஆக்கப்பட்ட சாபத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு தேவேந்திரன் பூஜித்து வழிபட்ட சத்திய நாதேஸ்வரர் ஆலயம். அதற்கு தெற்கில் சரஸ்வதியின் ஆணவத்தை அடக்குவதற்காக நிர்வாணியாகப் படுத்துக் கொண்டிருக்கும் யதோத்காரி என்னும் மகாவிஷ்ணு ஆலயம். அதற்கு அக்னியில் தேவேந்திரனுடைய மார்பில் அமர்ந்திருக்கும் நரசிம்மர் ஆலயம். அதற்கு நிருதியில் மாயை என்னும் காளிதேவியோடு யுத்தம் புரிந்து அவளைக் கீழே தள்ளி சிரசின் மேல் அமர்ந்திருக்கும் அஷ்டபுஜர் என்னும் மகாவிஷ்ணு ஆலயம். அதற்கு வாயுவில் சரஸ்வதியின் மானத்தைக் காப்பாற்றிய வித்யாகுண்டர் என்னும் விஷ்ணு ஆலயம். அதற்கு தெற்கில் பாலிகையைக் கொன்று அவளால் பிரயோகிக்கப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் விழுங்கி ஜீரணமாக்கிக் கொண்ட வயிற்றோடு கூடிய

நரசிம்மர் ஆலயம். அதற்கு வடக்கில் முன்மாயாநலன் என்பவனைக் கொன்று அவனைத் தீபம்போல் கையில் ஏந்திக் கொண்டிருக்கும் தீபப்பிரகாச விஷ்ணு ஆலயம். அதற்கு குபேர திக்கில் துண்டீரராஜனுக்கு வைகுண்டத்தைக் காண்பித்த வைகுண்டர் ஆலயம். அதற்கு குபேர திக்கில், அசுரர்களுடைய ரத்தங்களைக் குடித்து, அதனால் பவழம் போன்ற சிவந்த நிறத்தை அடைந்த பவள வண்ணர் ஆலயம். அதற்கு அக்னி திக்கில் ஏராளமான வண்ண மலர்களைத் தந்து ஆனந்தம் அடையும்படிச் செய்த பூமிதேவியைத் திருமணம் செய்துகொண்ட சதுர்ப்புஜப்பெருமாள் ஆலயம். அதற்கு கிழக்கில் பல்லிகள் ஆலயம். அதற்கு தெற்கில் முன் தேவதச்சனால் நிர்மாணிக்கப்பட்ட படிகளாயுள்ள இருபத்தி நாலு சோபானங்கள். அதற்கு மேற்கில் லட்சுமிதேவி தன்னை மகாவிஷ்ணு திருமணம் செய்து கொள்வதற்காக அவருடைய அர்த்தாசனத்தில் அமர்ந்திருக்கும் லட்சுமிதேவி ஆலயம். அதற்கு ஈசானத்தில் விஷ்ணுவின் திருமணத்திற்காக தேவேந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் புண்ணியகோடி விமானம். அதற்கு ஈசான திக்கில் ஆதிசேஷன் நீராடி பூமியைத் தாங்கிக் கொள்ளும் படியான சக்தியைப் பெற்றிருக்கும் அனந்தசரசு. அதற்கு வாயுவில் சகல தீவினைகளையும் தீர்க்கக் கூடிய பக்தோதயசரசு அதற்கு வடக்கில் இந்திர தீர்த்தம், அதற்கு காளிகாதேவியின் பொருட்டு மகாவிஷ்ணுவின் சக்கரத்தினால் தோற்றுவிக்கப் பட்டிருக்கும் சுதரிசனம் என்ற பெயருடன் விளங்கும் பாஞ்சாலிகா தீர்த்தம்.

தீர்த்த பலன் : அநந்த தீர்த்தத்தில் சனிவாரத்தில் நீராடுபவர்களுக்கு விஷ்ணுபதமும், பக்தோதய தீர்த்தத்தில் ஏகாதசி திதியில் நீராடுபவர்களுக்குத் திருப்பாற்கடலில் நீராடிய பலனும், இந்திர தீர்த்தத்தில் புதவாரத்தில் நீராடுபவர்களுக்கு யமுனா நதியில் நீராடிய பலனும், இந்திர பதமும், பாஞ்சாலிகா தீர்த்தத்தில் திருவோணம், கேட்டை நட்சத்திரங்களில்

நீராடினால் விரஜா நதியில் நீராடிய பலனும் சகலவிதமான செல்வபோகங்களும் கிடைக்கும்.

இப்படிப்பட்ட பூலோக வைகுண்டத்தில் வசிப்பவர்கள் திருமாலின் திருவடித் தாமரைகளில் ஐக்கியமாவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

மகிமை : சிந்து நதி தீரத்தில் வசிஷ்ட கோத்திரத்தில் பிறந்தவனும், ருக்வேதத்தை அனுஷ்டிப்பவனுமாகிய கர்க்ககிரி என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவன் தன்னுடைய தினசரிக் கடமைகளாகிய சந்தியா வந்தனங்களையும், பிதுர்களுக்குச் செய்ய வேண்டிய கர்மவிதிகளையும் செய்யத் தவறி விட்டான். அதற்குப் பதிலாகப் பிறருக்குச் சொந்தமான பொருள்களை அபகரித்தும், அந்நிய மாதர்களை நாடியும், எந்நேரமும் மற்றவர்களின் உணவிலேயே கண்ணோட்டம் செலுத்தியும், மற்றும் இதைப் போன்ற ஏராளமான பாவகாரியங்களைச் செய்வதில் நாட்டமுள்ளவனாகவும், சமர்த்தனாகவும் விளங்கி வந்தான். இப்படிப்பட்ட இந்தப் பாதகன் சித்திரை மாதத்தில் தனக்கெதிர்ப்பட்ட நெல்லிக்காய் மரங்களின் மீது ஏறி, அதிலுள்ள கனிகளைப் பறித்து, அவைகளையெல்லாம் விற்றுப் பிழைத்து, பாண குண்டம் என்ற ஊரில் வாழ்க்கை நடத்தி வந்தான். ஒருநாள் அவன் காஞ்சிமா நகரத்தை நோக்கி ஹரிக்ஷேத்திர மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது அவ்வழியாக ஓர் அந்தணர் அளவுகடந்த தாகத்தோடு போனார். அவரைப் பார்த்து, "அட, பிராமணரே! நீங்கள் மிகுந்த தண்ணீர் தாகத்தோடு போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன். உங்கள் தாகத்தை நான் தீர்த்து வைக்கிறேன். 'இதோ, நெல்லிக் கனிகள்! இதைத் தாங்கள் புசித்தால் உங்கள் தாகம் தணிந்து விடக் கூடும்!" என்று சொல்லி தன் கைப்பிடி நிறைய நெல்லிக்கனிகளை அள்ளியெடுத்து அவரிடம் கொடுத்தான். பிறகு அந்த இடத்திற்குச் சமீபமாகவுள்ள

ஒரு தடாகத்தைச் சுட்டிக் காட்டி விட்டுத் தன் வழியே சென்றான். நெல்லிக் கனிகளைப் பெற்றுக் கொண்ட அந்தப் பிராமணர், அக்கனிகளைப் புசித்து, தடாகத்துத் தண்ணீரையும் தாகந்திரப் பருகி மகிழ்ந்தார்.

சில வருஷங்களுக்குப் பிறகு நெல்லிக்கனிகளைக் கொடுத்த வேதியன் உயிர் நீத்தான். அவனை நெருங்குவதற்கு யமதூதுவர்களே அஞ்சி நடுங்கினார்கள். “ஐயோ! இவன் மகாபாவியாயிற்றே!” என்று அவர்கள் கூக்குரலிட்டார்கள். என்ன செய்வது என்றே தெரியாதவர்களாய் அவனைக் காலபாசத்தால் கட்டித் தடியால் அடித்துக் கொண்டே யமலோகத்தில் கொண்டு வந்து சேர்ப்பித்தார்கள். அச்சமயம் திருமாலின் தூதுவர்கள் அங்கு வந்து யமதூதர்களைக் கடிந்து தண்டித்தார்கள். “இந்தப் புண்ணிய புருஷரை நீங்கள் தடியால் அடித்துப் பாசத்தால் கட்டியிழுத்து வந்தீர்களே. இது உங்களுக்கே நியாயமாகப் படுகிறதா?” என்று கூறி, அவனைக் கட்டியிருந்த பாசத்தை அவிழ்த்து விட்டார்கள். பிறகு அவனைப் புஷ்பக விமானத்தில் அமர்த்தி, உபசாரங்களும், மரியாதைகளும் செய்து பரமபதத்தை அடைந்து அங்கிருந்த மகாவிஷ்ணுவிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பித்தார்கள்.

இந்த விஷயத்தை அறிந்து கொண்ட யமதர்மராஜன், நேராக வைகுண்டத்திற்குச் சென்று, அங்குள்ள மகாவிஷ்ணுவின் முன்னிலையில் போய் நின்றான். “மகாவிஷ்ணுவே! இந்த வேதியன் அவன் வாழ்க்கையில் செய்ததெல்லாம் பாவத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆகையால் இவன் என் உலகத்தில் என் வசமாக இருக்கும் தகுதியைத்தான் பெற்றிருக்கிறான்!” என்று கூறினான். அதைக் கேட்டதும் திருமால், யமதர்மனைநோக்கி “காஞ்சி நகரத்தில் ஆக்னேய திக்கில் இருக்கும் பூலோக வைகுண்டத்தில் இந்த அந்தணன் ஒரு புண்ணிய காரியம் செய்திருக்கிறான். அவன் செய்த அந்த ஒரு

புண்ணிய காரியமே, எண்ணிக்கையற்றதாகப் பெருகி, அவன் செய்திருந்த தீவினைகளையெல்லாம் போக்கடித்து விட்டிருக்கிறது. மேலும், இங்கே வைகுண்டத்தை அடையும் புண்ணிய புருஷர்களுள் இவனையும் ஒருவனாக்கிவிட்டது. அவன் செய்திருக்கும் புண்ணியம் என்னவென்றால், முன்பு கூறிய என்னுடைய தலத்தில் ஒரு வேதியன் தாகத்தால் தவித்த நிலையில் சென்றபோது, அவனுடைய தாகத்தைத் தீர்ப்பதற்காகத் தான் விற்றுப் பிழைப்பதற்காக வைத்திருந்த நெல்லிக் கனிகளில் ஒரு கைப்பிடியளவு வாரிக் கொடுத்து, அருகாமையில் இருந்த ஒரு தண்ணீர்ப் பொய்கையையும் சுட்டிக் காட்டினான். அதன் பிறகு அந்தப் பிராமணன் புசித்த நெல்லிக் கனிகளும், அருந்திய தண்ணீரும் எனக்கே அர்ப்பணமாகி விட்டது. அது எப்படியென்றால் அந்தத் தலத்தில் வசிப்பவர்களெல்லாம் நானேயல்லாது வேறு யாருமில்லை. அதனால் யமதர்ம ராஜனே! இனியும் இவன் விஷயத்தில் நீ செய்யக் கூடியது எதுவுமே இல்லை. வந்த வழியைப் பார்த்துக் கொண்டு இங்கிருந்து போய்விடுவது தான் உனக்கு நல்லது!" என்றார். உடனே யமன் அஞ்சியவனாக வைகுண்டநாதரையும், அந்தப் பிராமணனையும் அநேக முறைகள் வணங்கித் துதித்து, "இறைவனே! என்னால் சம்பவித்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும்!" என்று வேண்டினான். பிறகு அவன் தன்னுடைய உலகத்தை வந்தடைந்தான்.

3. அத்திகிரிப் பிரபாவம்

புண்ணிய சிலர்கள் வாழ்ந்து வருவதனால் புண்ணியகோடி என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது அத்திகிரி. இது பாஞ்சாலிகை என்ற தீர்த்தத்திற்கு அம்சம் வாயு திக்கில் இருக்கிறது. விஷ்ணுதலத்திற்கு அலங்காரமாக இருக்கும் இந்தக் கிரி, முன்பொரு சமயம் இந்திரன் சாபத்தால் அடைந்த யானை உருவமாகையால் அத்திகிரி என்ற பெயரைப் பெற்றது.

அத்திகிரி வரலாறு : சரஸ்வதிதேவியானவள் சகல வித்தைகளுக்கும் தான் தான் மூலகாரணமானவள். அதனால் இந்த உலகத்திலேயே தான்தான் மிகச் சிறந்தவள். தனக்கு நிகர் இந்தப் பிரபஞ்சத்தில் யாருமே இல்லை என்று எண்ணி, இறுமாந்திருந்தாள். அதனால் அவள் யாரையுமே மதிக்காமல் கர்வத்தோடு நடைபோட்டு வந்தாள். அவளைப் போலவே லட்சுமிதேவியும், சகல சம்பத்துக்களுக்கும் காரணகர்த்தாவாக இருப்பவள் தான்தான், அதனால் அனைவரையும் விடத் தானே உயர்ந்தவள், தனக்கு நிகர் யாருமில்லை என்று எண்ணி தனக்கு எதிர்ப்பட்டவர்கள் ஒருவரையும் மதிக்காமல் கர்வத்தோடு திரிந்து வந்தாள். இப்படியிருக்கும்போது சரஸ்வதி, லட்சுமி இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது லட்சுமிதேவி, சரஸ்வதியைப் பார்த்து, "நீ என்னவோ பிரமாதமாகக் கர்வத்தோடு திரிகிறாயே, அப்படியென்ன உன்னிடம் சிறப்பு இருக்கிறது?" என்று . கேட்டாள். பதிலுக்குச் சரஸ்வதிதேவியும், லட்சுமியை நோக்கி இளக்காரமாகப் பேசினாள். முடிவில் இருவரும் பெரிதாகச் சண்டையடித்துக் கொண்டார்கள். அவர்கள் தேவலோகத்திற்குச் சென்று தேவேந்திரனைச் சந்தித்து முறையிட்டார்கள். "தேவேந்திரனே! எங்கள் இருவரில் யார் உயர்ந்தவள்! நியாயத்திற்குப் புறம்பில்லாமல் சரியான பதிலைக் கூற வேண்டும்!'' என்று



கேட்டார்கள். அதற்கு இந்திரன், கலைமகளை நோக்கி, "சகலகலாவல்லியே! லட்சுமிதேவியே பூவுலகத்திற்கும், வானுலகத்திற்கும் சகல செல்வ பாக்கியங்களையும், வாரி வழங்குகிறாள். மேலும் அவள் திருமாலின் தேவியும், உனக்கு மாமியும், உலகத்தினருக்குத் தாயும் ஆவாள். அதனால் செந்தாமரைவாசியான லட்சுமிதேவியே உயர்ந்தவள்!" என்று கூறினான். அதைக் கேட்டதும் வெண்தாமரை வாசியான சரஸ்வதிதேவி அளவுகடந்த கோபம் கொண்டாள். "இந்திரனே! நியாயத்திற்குப் புறம்பாக நீ சொல்லி விட்டாய்! உன்னுடைய செல்வ சுகங்களை நிலைநாட்டிக் கொள்வதற்காகவே இப்போது என் எதிரில் லட்சுமிதேவியை உயர்த்திப் பேசிவிட்டாய்! ஆனால் உன்னைப்போன்றவனிடம் நியாயம் எதிர்பார்க்க முடியாதுதான்! ஹூம்! நீ என்னைத் தாழ்த்திப் பேசியதற்காக, நான் உனக்கு இடப் போகும் சாபத்திற்கு ஆளாகக் கடவாய்!" என்றாள். பிறகு அவள் தன் மனதிற்குள் "இந்தத் தேவேந்திரன் மண்டைக்கர்வம் பிடித்தவனாகவும், தீயமனம் படைத்தவனாகவும், முட்டாள்தனம் நிறைந்தவனாகவும் இருக்கிறானே! இவனை இப்படியாக்கியதற்குக்

காரணம், இவனிடமிருக்கும் செல்வ போகங்களே! இவனை என்னுடைய சாபத்திற்கு இரையாக்கி விட வேண்டியதுதான்!" என்று நினைத்துக் கொண்டாள். அதனால் அவள், "தேவர்களுக்கு அதிபதியே! உன்னை அடைந்திருக்கும் ஐஸ்வரியமதத்தினால்தான் என்னை உயர்ந்தவள் என்று சொல்லாமல், லட்சுமியையே உயர்ந்தவள் என்று கூறினாய். அதனால் நீ மதம் கொண்ட யானையாக மாறக் கடவாயாக!" என்று சபித்தாள். அதன் பிறகு சரஸ்வதிதேவி ஒரு கணமும் அங்கே நிற்காமல், தனது சத்தியலோகத்தை நோக்கிச் சென்று விட்டாள். அவள் போனதும் லட்சுமிதேவி இந்திரனை நோக்கி, "இந்திரா! நீ என்னைப் பற்றி உயர்த்திப் பேசியது சரியான நியாயம்தான்! ஆனால் அதை உணர்ந்து கொள்ளாமல் சரஸ்வதிதேவி உனக்குச் சாபமிட்டது மகா அநியாயம்! இருந்தாலும் நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே! அவள் உனக்கிட்ட சாபத்தை நிவர்த்தி செய்யக் கூடிய வழியொன்றைச் சொல்லுகிறேன். அது என்னவென்றால், ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அமர்ந்திருக்கும் ஹரிக்ஷேத்திரத்திற்கு நீ சென்றாயானால், உன்னுடைய இந்த யானை வடிவம் நீங்கி விடும். அந்த ஹரிக்ஷேத்திரத்தை நீ அடைவதற்குரிய மார்க்கத்தையும் சொல்லுகிறேன். பூவுலகத்திலே



சிம்ஹாசலம் என்னும் ஒரு மலை இருக்கிறது. அந்த மலைக்கு அருகாமையில் தண்டகாரண்யம் என்ற ஒரு வனம் இருக்கிறது. அந்த வனத்திலே விஷ்ணுப் பிரியனான பிரகலாதன் என்பவன் இருக்கிறான். அவனிடத்தில் நீ சென்று நரசிம்ம மந்திரத்தை உபதேசம் பெற்று ஏகாக்கிரக சித்தனாகத் தியானம் செய்ய வேண்டும். அப்போது உனக்குப் பூர்வ ஜன்ம வாசனையும், வரதராஜத் தலத்தை அடையும் புண்ணியமும், திடமும் வந்து விடும். பிறகு நீ அந்த ஹரிக்ஷேத்திரத்தை அடைந்து, நரசிம்மப் பெருமாளின் கருணா கடாட்சத்தினால் உன்னுடைய யானை வடிவத்தைப் போக்கிக் கொள்வாயாக! என்று ஆசி கூறினாள். அதன்படியே, யானை வடிவத்தைப் பெற்ற இந்திரன் காஞ்சி நகரிலுள்ள ஹரிக்ஷேத்திரத்திற்கு வந்து, அங்குள்ள நரசிம்மப் பெருமாளை வணங்கி வழிபட்டான். அவனுடைய பிரார்த்தனைக்கு மனமிரங்கிய நரசிம்மப்பெருமாள் பிரத்தியட்சமாகி, அவனுடைய யானை உருவத்தைத் தமது கைகளால் இருகூறாகப் பிளந்தார். அடுத்த கணம் தேவேந்திரன் தனது சாபத்திலிருந்தும் விடுபட்டுத் தனது சுயஉருவத்தை அடைந்து விட்டான். நரசிம்மமூர்த்தி இந்திரனுடைய அந்த யானை உருவத்தை மலையாக மாற்றி விட்டார். இரு கூறாகப் பிளந்த இருதயத்தைக் குகையாக ஆக்கி, அதில் சாதுக்களைப் போல தவக்கோலத்தில் அமர்ந்திருந்ததினால் அம்மூர்த்திக்கு குகாநரசிம்மர் என்ற பெயரும் வழங்கலாயிற்று. அந்த யானை வடிவமாகிய பர்வதத்தின் மேலே வரதராஜமூர்த்தி அமர்ந்திருப்பதால், அவரும் அத்திகிரிநாதர் என்ற பெயரைப் பெற்றார். அந்த மலையும் அத்திகிரி என்ற பெயரை அடைந்தது.

நரசிம்மமூர்த்தியின் கருணையால் சாபவிமோசனம் பெற்று அங்கிருந்து தேவேந்திரன் சென்று கொண்டிருக்கும்போது, அத்திகிரியிலிருந்து இரண்டு சிறுவர்கள் வருவதைப் பார்த்தான். அவ்விரு பிள்ளைகளும் அதியற்புத அழகு வாய்ந்தவர்களாகவும்,

வேத நெறிகளைக் கரைத்துக் குடித்ததைப் போன்ற முககாந்தியைப் பெற்றவர்களாகவும் காட்சி அளித்தார்கள். அச்சிறுவர்களைப் பார்த்து வியப்படைந்தான் தேவேந்திரன். அவன் அவர்களை நோக்கி, "சின்னஞ்சிறு பிள்ளைகளே! நீங்கள் யார்? உங்களுடைய ஆசிரமம் எங்கே இருக்கிறது? நீங்களிருவரும் இந்த வழியாக வருவதற்கு என்ன காரணம்? இந்த மலையில் நீங்கள் எப்போது ஏறினீர்கள்? இவை எல்லாவற்றையும் எனக்கு விவரமாகச் சொல்லுங்கள்!" என்று வினவினான். அதற்கு அப்பிள்ளைகள், "ஐயனே! நாங்களிருவரும் சிருங்கிபேரரின் பிள்ளைகள். அந்தண குலத்தைச் சேர்ந்தவர்களான எங்களுடைய பெயர்கள் ஹேமன், சுக்லன் என்பதாகும். சாண்டில்ய கோத்திரமே எங்கள் கோத்திரம். வைகான ஸசூத்திரமே எங்கள் சூத்திரம். எங்கள் ஆசிரமமோ பிரம்மச்சரிய ஆசிரமம். எங்கள் குரு கௌதமமுனிவராவார். வியாகரண சூத்திரங்களிலும் மீமாம்ஸா சாஸ்திரங்களிலும் நாங்கள் வல்லவர்கள். இதுதான் எங்களைப் பற்றிய விவரங்கள்!" என்றார்கள்.

பிறகு அவ்விரு சிறுவர்களும், "ஐயா! நாங்கள் இந்த இடத்திற்கு வந்திருக்கும் காரணத்தையும் கூறுகிறோம், கேளுங்கள்!" என்று மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்தார்கள். எங்கள் குருவான கௌதம முனிவரின் ஆசிரமம் கொங்கண தேசத்தில் இருக்கிறது. கிருஷ்ண பரமாத்மாவின் பூஜைக்காகத் தீர்த்தமும், சமித்தும் கொண்டு வரும்படியாக எங்களுக்கு அவர் ஆணையிட்டார். அதன்படியே நாங்களும் ஒரு தூய்மையான பாத்திரத்தில் தீர்த்தத்தை எடுத்து நிரப்பி, அதை ஒரு சுத்தமான இடத்தில் மூடாமலேயே வைத்து விட்டுச் சமித்துக்களுக்காக ஒரு மரத்தின் மேல் ஏறினோம். அங்கிருந்து சமித்துக்களை ஒடித்துக் கொண்டு கீழேயிறங்கி வந்தோம். பிறகு தீர்த்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு குருதேவரின் ஆசிரமத்தை அடைந்தோம். அங்கே அவருடைய



முன்னிலையில் தீர்த்தத்தைப் பணிவுடன் வைத்தோம். அப்போது என்ன நடந்தது தெரியுமா? தீர்த்தம் நிறைந்த பாத்திரத்தினுள்ளிருந்து ஒரு சிறிய பல்லி துள்ளி வந்து வெளியே விழுந்தது. தீர்த்தத்தை நாங்கள் மூடாமல் கொண்டு வந்ததனால்தான், அதனுள்ளிருந்து, பல்லி வெளியே குதித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட குருதேவர், "முட்டாள்களே! என்ன காரியம் செய்திருக்கிறீர்கள்? தீர்த்தத்தை நீங்கள் மூடாமல் இருந்ததனால் தானே அதில் பல்லி விழுந்தது? பல்லி விழுந்த இத்தீர்த்தம் இனி பூஜைக்குப் பயன்படாது. நீங்கள் தவறான காரியத்தைச் செய்துவிட்டதால், எனக்கு இப்போது வரும் கோபத்தில் உங்களுக்குச் சாபமிடப் போகிறேன். நீங்களிருவரும் பல்லிகளாக மாறக் கடவீர்களாக!" என்று எங்களைச் சபித்து விட்டார்.

"தேவலோக அதிபதியே! அவருடைய அந்தச் சாபத்தைப் பெற்றுக் கொண்ட நாங்கள் ஸ்ரீ

வரதராஜப்பெருமாள் வீற்றிருக்கும் இந்த மலைக்குச் சமீபத்திலுள்ள மரத்தில் பல்லிகளாக வாழ்ந்து வந்தோம். யானை வடிவத்திலிருந்த உன்னுடைய யானை உருவத்தை நரசிம்மமூர்த்தி பிளக்கும் சமயத்தில் உன்னுடைய துதிக்கையினால் நாங்கள் வசித்து வரும் மரத்தை நீ முறித்து விட்டாய். அப்போது நாங்களிருவரும் இந்த அத்திகிரியின் பின்பக்கத்தில் வந்து குதித்து, சாபவிமோசனம் அடையப் பெற்றோம்!" என்று கூறினார்கள். பிறகு அச்சிறுவர்கள் இருவரும் அங்கிருந்து தங்கள் இருப்பிடங்களுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

அவ்வரலாற்றினைக் கேட்டதும், தேவேந்திரன் அகமகிழ்ந்தவனாய், அச்சிறுவர்களுடைய இரண்டு பல்லியுருவங்களையும் தன் கையினால் தடவிக் கொடுத்தான். பிறகு அவர்களுடைய பெயர்கள் என்றும் நிலைத்திருக்கும்படியாக அவற்றைப் பொன்னாலும், வெள்ளியினாலும் அமைத்து மேலே பிரதிஷ்டை செய்தான். பிறகு அவற்றைத் தன் கையினால் மீண்டும் தடவிக் கொடுத்து, "இந்த இடத்தில் நின்றபடி, இந்த அத்திகிரியை யார்வந்து தரிசனம் செய்தாலும், அவர்கள் ஏகாதசியில் அகோராத்திரம் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்வதால் அடையக்கூடிய விரத பலனையும், அத்திகிரியை தரிசனம் செய்தவர்கள் இறைவனின் திருவடித் தாமரைகளில் ஐக்கியமாகும் பாக்கியத்தையும் அடைவார்கள்!" என்று வரமளித்துச் சென்றான்.

பூர்விகத்தில் சரயூ நதிக்கரையில் சுக்லவேதியனான கணு என்ற ஒரு பிராமணன் வசித்து வந்தான். அவன் பரத்துவாச குலத்தில் உதித்தவன். அவன் எல்லாவிதமான சாஸ்திரக் கலைகளிலும் வல்லவனாகவும், தனுர் வித்தையில் கற்றுத் தேர்ந்தவனாகவும், அந்தணகுல தர்மங்களில் சிறிதும் நெறி தவறாதவனாகவும் இருந்து வந்தான். ஆனாலும் அவன் செய்திருந்த பூர்வ ஜன்மத் தீவினைகளின்

பயனாய், பாவ காரியங்களிலும் ஈடுபடலானான். சதாசர்வகாலமும் பிரயாணம் செய்வதிலேயே நாட்டமுடையவன்போல் பிறர் எண்ணும்படிச் செய்து, யாராவது பிரயாணம் புறப்பட்டால் அவர்களோடு அவனும் சென்றுவிடுவான். மலைச்சரிவு, காட்டுப்பகுதி, துர்க்கம் போன்ற ஆளரவம் இல்லாத மறைவிடங்களின் வழியாகப் போய்க் கொண்டிருக்கும் போது, தன்னுடைய வில்வித்தையின் சாமர்த்தியத்தைக் கொண்டு, அப்பிரயாணிகள் அனைவரையும் சாகடித்து, அவர்களுடைய உடமைகளையெல்லாம் கொள்ளையடித்துச் சென்று, தன் மனைவி மக்களோடு வசித்து வந்தான். இதையே வழக்கமாகக் கடைப்பிடித்து வந்த அவன், ஒரு நாள் பிரயாணிகளைக் கொலை செய்ய முயன்றபோது அப்பிரயாணிகளில் நைமிசாரண்ய வனத்தில் வசித்து வரும் ஒரு வீரனும் இருந்தான். அப் பிராமணனுடைய செய்கையைக் கண்டு மனம் வருந்திய அவ்வீரன், அவனை பிடித்து இறுக்கமாகக் கட்டி, "ஏய், அந்தணனே! நீ என்ன காரியம் செய்கிறாய்? பிறவியில் பிராமணனான நீ இம்மாதிரிக் கொலை, கொள்ளை போன்ற தொழில்களில் ஈடுபடுவது அக்கிரமம் அல்லவா? இதற்காகத்தானா நீ அந்தண வேஷம் தரித்திருக்கிறாய்?" என்று ஏசினான். பிறகு அவன், "நீ என்னதான் கொலை கொள்ளைகளைச் செய்து வந்தாலும், நீ அந்தண குலத்தில் உதித்தவனாகையால், உன்னைக் கொலை செய்வது பாவகாரியமாகும்!" என்று கூறினான். பிறகு தன்னுடைய உடைவாளினால் அவனுடைய யக்ஞோப வீதத்தையும், தலைக்குடுமியையும் அறுத்துத்தள்ளி, அவனுடைய கட்டையும் அவிழ்த்து விட்டான். "மரியாதையாக இங்கிருந்து ஓடிப் போய் விடு! இனி இந்தப் பக்கம் தவறியும் வந்துவிடாதே!" என்று பயமுறுத்தி அவனை அங்கிருந்து விரட்டினான். வீரன் இறுக்கிக் கட்டிய கட்டுக்களால் உடல் முழுவதும் புண்ணாகி ரணமடைந்து தவித்தான்

அப்பிராமணன். அவனால் அங்கிருந்து ஓடிப் போகவே முடியவில்லை. அவன் மெல்லமெல்ல நகர்ந்து சென்று .தக்கோலம் என்ற ஊரை அடைந்தான். அப்போது அவன் செய்திருந்த பூர்வ ஜன்மப் புண்ணியப் பலனால் இந்த அத்திகிரியைப் பார்த்து விட்டான். அதன் பிறகு அவன் உடலில் இருந்து உயிர் பிரிந்து சென்றுவிட்டது. அத்திகிரியினுடைய தரிசன மகிமையால் அவன் மகா விஷ்ணுவின் இருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

4. வரதராஜமூர்த்தி வரலாறு

சங்கு சக்ரதாரியும், நீலவண்ணமேனியரும், சர்வாபரண பூக்ஷிதருமான வரதராஜப்பெருமாள், தம்மிரு பக்கங்களிலும் மங்கையர்கள் வெண்சாமரம் வீசப் புண்ணியகோடி விமானத்தில் வீற்றிருந்த படியே தமது பக்த கோடிகளுக்கும், பிருமதேவனுக்கும், சகல இஷ்ட சித்திகளையும் நிறைவேற்றி வருகிறார். அம்மூர்த்தி நான்முகனுக்குச் சிருஷ்டி தண்டம் தந்தருளிய வரலாறு தான் இது.

சரஸ்வதியும், லட்சுமியும் தங்களிருவரில் யார் உயர்ந்தவர் என்ற சர்ச்சையில் ஈடுபட்டுத் தங்களுக்குள் குரோதத்தை வளர்த்துக் கொண்டவர்களாகப் பிரும தேவனிடம் சென்றார்கள். “எங்கள் இருவரில் யார் உயர்ந்தவர்?” என்று அவர்கள் கேட்ட கேள்விக்குப் பிருமனும் தேவேந்திரனைப் போலவே லட்சுமி தேவியே உயர்ந்தவள் என்று கூறிவிட்டார். அதைக் கேட்டதும் சரஸ்வதி தேவி அளவு கடந்த கோபமடைந்தாள். ஆனால் இந்திரனைச் சபித்ததைப் போல இவரையும் சபிக்க முடியாதே, இவர் நம் கணவராயிற்றே என்று அவள் மனம் குழம்பினாள். ஆனாலும் நான்முகனின் கையில் இருக்கும் விஷ்ணு பகவானால் அளிக்கப்பட்ட தன் அம்சமாகிய சிருஷ்ம

தண்டத்தை வெடுக்கென்று பிடுங்கித் தன் உடலில் ஒடுக்கிக் கொண்டு அங்கிருந்து விரைந்து சென்று விட்டாள்.

அந்தோ, பாவம், தன் பத்தினியிடம் சிருஷ்டி தண்டத்தைப் பறிகொடுத்துவிட்ட பிருமதேவனால், அதன் பிறகு சிருஷ்டி செய்ய இயலாமல் போய்விட்டது. அதனால் சகல சராசரங்களும் உற்பத்தியாகாமல் அப்படியே நின்று விட்டன. அதைப் பார்த்து நான்முகன் மனம் குழம்பினார். "ம்! என்னிடமிருந்து தண்டத்தைப் பறித்துச் சென்றாளே, என் அருமைப் பத்தினி! அது அவளுடைய அம்சம் என்பது உண்மைதான்! ஆனாலும் அதைக் கொடுத்தவள் அவளல்லவே. திருமாலல்லவா அத்தண்டத்தை எனக்குக் கொடுத்தவர்! அதனால் அவரிடமே சென்று முறையிட்டு, இதற்கொரு முடிவு காணலாம்! இனியும் இந்தச் சரஸ்வதியால் எனக்கு என்ன பிரயோஜனம்? அவளுடைய முகத்தில் விழித்தாலே பாவம்!" என்று எண்ணிய பிருமன், இமயமலைச் சாரலை அடைந்து மகாவிஷ்ணுவைக் குறித்துத் தவத்தில் ஈடுபட்டார்.

நான்முகனின் தவத்திற்கு மனமிரங்கிய விஷ்ணு பகவான், அவர் முன்னிலையில் பிரத்தியட்சமானார். "சிருஷ்டி கர்த்தாவே! நீ எதற்காக என்னைக் குறித்துத் தவம் புரிந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அதற்குப் பிருமன், "என் தந்தையே! நீங்கள் சிருஷ்டி செய்வதற்காக எனக்குத் தந்தருளிய தண்டத்தை, என் பத்தினியான கலைவாணி தன் வல்லமையால் என்னிடமிருந்து பறித்துக் கொண்டு சென்று விட்டாள். அதனால் என்னுடைய சிருஷ்டித் தொழிலும் அடியோடு நின்றுவிட்டது. அத்தண்டத்தைப் பறிகொடுத்துவிட்ட நான் இனியும் எப்படிச் சிருஷ்டி செய்ய முயல்வேன்?" என்று வருத்தத்தோடு முறையிட்டார். அதைக் கேட்டதும் விஷ்ணு மூர்த்தி, "கவலைப்படாதே, பிருமனே! நீ

சிருஷ்டித் தண்டத்தை மீண்டும் அடைவதற்குரிய ஒரு மார்க்கத்தை நான் சொல்கிறேன். அதாவது இளாவிருத கண்டத்திற்கு நீ சென்று அங்கு நூறு அஸ்வமேதயாகங்கள் செய்ய வேண்டும். அப்போது உனக்கு அத்தண்டம் கிடைத்துவிடும். ஆனால் உன்னால் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்யவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும்! ஆனால் அதற்கொரு மார்க்கமும் இருக்கிறது. நூறு அஸ்வமேதங்களைச் செய்வதால் அடையக்கூடிய பயனை, ஒரே ஒரு அஸ்வமேத யாகம் செய்வதன் மூலமாகவே அடைந்து விடக்கூடிய பெருமை வாய்ந்த ஒரு தவம் இருக்கிறது. அதுதான் காஞ்சி மாநகரம். அத்தலத்திற்குச் சென்று பாவங்களைப் போக்கடிக்கும் மகிமை பெற்ற அத்திகிரியின் முன்பாக அமர்ந்து ஒரே ஒரு அஸ்வமேத யாகத்தை நீ செய்தாலே போதும். இளாவிருத கண்டத்தில் செய்யும் நூறு யாகங்களுக்குரிய பலனை நீ நிச்சயமாக அடைந்து விடுவாய்! இதில் துளிக்கூடச் சந்தேகமே கிடையாது. ஆனால் இதில் நீ இளாவிருத கண்டத்தில் நூறு யாகங்கள் செய்கிறாயோ, அல்லது காஞ்சித் தலத்தில் ஒரே ஒரு யாகம் செய்கிறாயோ, அது உன் இஷ்டம்! நீ செய்யும் யாகத்திலுள்ள ஓம குண்டத்திலிருந்து நான் வெளிப்பட்டு வந்து உனக்குச் சிருஷ்டி தண்டத்தைத் தருகிறேன்!" என்று கூறியருளி மறைந்தார்.

பிருமதேவன் அகமும் முகமும் ஒருங்கே மலர, அங்கிருந்து அத்திகிரியை நோக்கி விரைந்து சென்றார். அங்கே மேல் பகுதியில் நரசிம்மமூர்த்தியின் சந்நிதானத்தில் தேவ சிற்பியைக் கொண்டு முறைப்படி ஒரு யாககுண்டத்தை அமைக்கச் செய்தார். ஒரு வருஷம் அளவில் பூர்த்தி பெறக்கூடிய அந்த யாகம் எந்தவித விக்கினங்களும், இடையூறுகளும், இன்றி முடிவடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய விக்கின விநாயகரை அவர் வணங்கித் துதித்தார். பிறகு யாக முறைப்படி அந்த அஸ்வமேத யாகத்திற்குரிய சர்வ லட்சணங்களும்



அமையப் பெற்றிருக்கும் குதிரையைக் கொண்டு வந்து, அதற்கு அபிஷேகமும், அலங்காரங்களும் செய்தார். நீல நிறத்திலும், பொன் நிறத்திலும் உள்ள ஆடைகளால் அதை அலங்கரித்து, அதன் மத்தகத்தில் பொன் பட்டம் கட்டி, நேத்திர படம் தரித்து, அதைத் தன்னிச்சைப்படிப் போகவிட்டார். அதற்கு யட்ச கந்தர்வ அசுரர்களால் எந்தவிதத் தீமைகளும் ஏற்படாதபடி பாதுகாத்து, அதை மீட்டுக் கொண்டு வரச் செய்தார். பிறகு அந்த அஸ்வத்தை யாகசாலையிலுள்ள யூபஸ்தம்பத்தில் கட்டி அதன் காதில் "தத்சக்ஷீஸீ" என்னும் மந்திரத்தை உச்சரித்து, நேத்திர படத்தை அவிழ்த்தார். தன்னுடைய ஆசனத்தில் தன் தேவியையும், ஆவாகித்துக் கொண்டு, முருகப் பெருமானைச் சாதகராகவும், மணிகண்டீசரை உத்காதாவாகவும் வருணனைச் சோமமாகவும், எமதர்மராஜனைச் சங்தரமாகவும், சாதான்ஹீகரைப் புரோகிதராகவும், ரிஷிகள் முதலான தேவகந்தர்வ யட்ச கின்னர அப்சர சித்தசாத்யர்களை ஏனைய தொழில்களுக்காகவும், கணாத் யட்சர், க்ஷேத்திர பாலகர், யோகசிம்ஹர் முதலானோரை யாக ரட்சார்த்தமாகவும், அந்தந்த இருப்பிடங்களில் அவரவரை ஏற்படுத்திக் கொண்டு யாகம் செய்ய ஆரம்பித்தார். ''ஷட்பர்யவாம்சிகை'' என்ற மந்திரங்களால் கவாஸ்தானங்களாகிய ஷடங்கங்களில் அந்த அந்த அங்க தேவதைகளை வணங்கி, ஓமம் செய்யலானார்.

இப்படியாகப் பிருமதேவன் செய்ய முனைந்த அஸ்வமேத யாகத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட சரஸ்வதிதேவி, "அந்தோ!, மனைவி சமேதராகச் செய்ய வேண்டிய யாகத்தை மனைவி இல்லாமலேயே இவர் செய்யத் துணிந்து விட்டாரே! இது மிகவும் நன்றாக இருக்கிறது! இப்படியொரு காரியத்தைச் செய்தவரை நான் எங்குமே கண்டதில்லை!" என்று மனதிற்குள் எண்ணிப் புகைந்தாள். "ம்! இவரை நான் இத்தோடு விட்டு விடுவேனா? இவர் அந்த யாகத்தைப்

பூர்த்திதான் செய்வாரா? அப்படியே அவரைப் பூர்த்தி செய்ய விட்டேன் என்றால் நான் கலைவாணியே அல்ல!" என்று கருவிக் கொண்டாள். பிறகு அவள் அடங்காத கோபத்தோடு, தனது மாயா சக்தியினால் ஏராளமான அக்னியை உண்டாக்கி, அவற்றைத் தனது கணவர் செய்து கொண்டிருந்த யாகசாலைக்கு ஏவிவிட்டாள். அதைக் கண்ணுற்ற திருமால், அந்த அக்னி முழுவதையும் தம்முடைய ஒரு கையில் தீபம் போல் ஏந்திக் கொண்டு தீபப்பிரகாசரானார். உடனே சரஸ்வதிதேவி அவர்மீது கபாலாஸ்திரத்தை விடுத்தாள். அந்த அஸ்திரத்தைச் சிம்ம உருவமாக உட்கொண்டு நரசிம்மராக மாறினார். அதற்குப் பிறகு ஏவிய காளிதேவியைத் தம்முடைய எட்டுத் திருக்கரங்களாலும் பிடித்து அழுத்திப் பூமியில் தள்ளி அவளுடைய சிரசின் மேல் அட்டகாசமாய் அமர்ந்திருந்து அஷ்டபுஜரானார். தன்னால் பிரயோகிக்கப்பட்ட அஸ்திரங்களும், ஆட்களும் மகாவிஷ்ணுவினால் சின்னா பின்னமாக்கப் படுவதைக் கண்ட கலைவாணி, இனி தானே நேரில் செல்வது என்று தீர்மானித்தாள். முன்பொரு சமயம் மகாதேவியைத் துரத்த அதிவேகமாகப் பெருக்கெடுத்தோடிய கம்பை நதியும், நந்திமலையிலிருந்து பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்துச் சமுத்திரத்தில் சங்கமமாவதற்குச் சென்ற க்ஷீர நதியும் இப்போது ஒன்று திரண்டு வருவதைப் போன்ற தோரணையில் சரஸ்வதிதேவி மகாப் பிரளயத்தோடு யாகசாலையை நோக்கிப் பெருக்கெடுத்தோடி வந்தாள். அதைப் பார்த்ததும், இந்த வெள்ளம் சரஸ்வதிதேவி தான் என்பதை திருமால் புரிந்து கொண்டார். இவளை எளிதில் வென்று விட வேண்டும் என்று எண்ணிய அவர், அந்த வெள்ளம் பெருக்கெடுத்தோடி வரும் வழியிலே நிர்வாணராகக் கைகால்களை குறுக்காக நன்றாக நீட்டிப் படுத்துக் கொண்டார். அந்த அலங்கோலக் காட்சியை வெள்ள உருவமாக வரும் சரஸ்வதி பார்த்து, "சே! இப்படியும் யாராவது

செய்வார்களா? இதுதான் ஆண்பிள்ளைத் தனமா? ம்! இவர்தான் ஆண்மைத் தன்மையை ஒழித்து வெட்கமில்லாதவராக இருந்தாலும், நாமும் அதற்காக நம் பெண்மை நெறியைக் கை விடலாமா" என்று எண்ணி வெட்கமடைந்து அந்த வழியாகச் செல்லாமல் பிலத்தை அடைந்தாள்.

அக்காலம் சுவேதவராக கல்ப காலம்! கிருதயுகம் ஐந்தாவது மன்வந்தரம் யுவ வருஷம் விருஷப மாசம் ரிஷபத்தில் சூரியன் இருக்கும் காலம். சுக்லபட்ச சதுர்த்தசி அஸ்த நட்சத்திரத்தோடு கூடிய சுப தினத்தில் பிருமதேவன் தமது அஸ்வமேதயாகத்தைச் சிரும் சிறப்புமாகச் செய்து முடித்தார். ஓம குண்டத்திலிருந்து வெளிக் கிளம்பிக் காட்சியளித்தார் மகாவிஷ்ணு. உடனே நான்முகன் நிலத்தில் தண்டாகாரமாக விழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்று சிருஷ்டி தண்டத்தை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார். உடல் முழுவதும் பக்திப் பரவசத்தினால் பொங்கியெழ அவர் ஒரு கணம் அப்படியே நின்றார். அதற்குள் தேவேந்திரன் தேவ சிற்பியைக் கொண்டு அந்த அத்திகிரியில் இருபத்து நாலு படிகளையும், அதன் மேல் ஒரு புண்ணிய விமான ஆலயத்தையும் அமைக்கச் செய்தான். பக்திப் பரவசத்தில் கண்களை மூடி நின்ற பிருமதேவன், தம்கண்களை விழித்துப் பார்க்கும்போது, வரதராஜமூர்த்தியானவர் புண்ணியகோடி வீமானரூடராகக் காட்சி தருவதைக் கண்டு மெய் சிலிர்த்தார். அவருடைய பாதகமலங்களில் தம் தலையைப் பொருந்தும்படி வைத்து, மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார். அப்போது தேவர்களும், முனிவர்களும், நெய்யினால் ஒரு முகூர்த்த காலம் திருமஞ்சனம் செய்து அறுசுவையோடு கூடிய மகா நிவேதனத்தை நைவேத்தியம் செய்வித்தார்கள். பிறகு அந்தணர்களுக்கு அன்னமிட்டு, அவர்கள் விரும்பியவாறு ஆடை ஆபரணங்களையும், கந்தபுஷ்ப தாம்பூலாதிகளையும் கொடுத்து மகிழ்வித்தார்கள்.

வரதராஜப் பெருமாளுடைய அருளைப் பெற்ற கஜேந்திரனைப் போல உற்சவத்தின் பொருட்டு விஸ்வகர்மா ஒரு யானையைத் தந்தான். தேவேந்திரன் முத்துக் குடையைக் கொடுத்தான். நான்முகனோ நவரத்ன மகுடத்தை அளித்தார். இப்படியாக அனைவரும் ஒவ்வொரு விலைமதிக்க முடியாத பொருளைக் கொடுத்த பிறகு வரதராஜப் பெருமாளானவர் அன்றைய தினம் மாலையில் கண்களைக் கவரும்படியான திவ்வியாலங்காரங்களோடு, யானையின் மீது அமர்ந்த வண்ணம் வீதியில் வலம் வந்தார். பிறகு அப்பெருமாளை முன்போல் விமானத்தில் வீற்றிருக்கச் செய்து, அபீஷ்டவரதா வரதா என்று அவரைப் பலவாறாகவும் தோத்திரம் செய்து வணங்கி வழிபட்டார்கள். இந்தக் காஞ்சித் தலத்தில் வீற்றிருந்து பக்தகோடிகளுக்கு அனுக்கிரகம் செய்து வர வேண்டுமென்று வேண்டிக் கொண்டு அனைவரும் அங்கிருந்து தங்கள் தங்கள் இருப்பிடங்களில் போய்ச் சேர்ந்தார்கள். வரதராஜ மூர்த்தியின் நாபிக் கமலத்தில் பிருமதேவன் மாணிக்க வடிவமாகப் பதிந்து ஒளிவீசித் திகழ்ந்தார்.

வரதராஜப் பெருமாள் தமது பக்தனான பிருமதேவனை நோக்கி, ''தேவர்களுடைய அபிலாக்ஷையின்படியே இந்தக் காஞ்சித் தலம் வைகுண்டத்தைக் காட்டிலும் அதிகப் பாந்தமாக இருப்பதால் எனக்கு அதிஉன்னதமாக இருக்கிறது. ஆகையால் இத்தலத்தில் எனக்கு வருஷம்தோறும் சித்திரை மாதம் எனது ஜன்ம நட்சத்திரமாகிய திருவோண நட்சத்திரத்தில் நெய்யினால் சஹஸ்ரதாரையில் அபிஷேகமும், பூஜையும், உற்சவமும், அந்தண போஜனமும் செய்து வைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எண்ணிய காரியத்தையெல்லாம் நான் நிறைவேற்றி வைப்பேன்!" என்று வரமளித்தார்.

யமுனா தீரத்தில், கோகுல க்ஷேத்திரத்தில் வாதநாராயண கோத்திரத்தில் யஜுர் வேதியான பானுவர்ணன் என்னும் ஓர் அந்தணன், யாத்திரை மார்க்கமாக இந்த அத்திகிரியை வந்தடைந்தான். அன்றைய தினம் வரதராஜப் பெருமாளுக்குக் கிருதாபிஷேகம் நடந்தது. அவ்வபிஷேக மகோற்சவத்தைக் கண்குளிரக் கண்டு களித்த அவன், தன் ஊரை அடைந்து சில காலம் வாழ்ந்திருந்து விட்டு உயிர் நீத்தான். அவனைத் தேவகணங்கள் சுவர்க்கத்திற்குக் கொண்டு சென்றன. அங்கு சில காலம் வாழ்ந்திருந்த பிறகு, அங்கிருந்து விஷ்ணு கணங்களால் சூழப் பெற்று வைகுண்டத்தை அடைந்து வாழ்ந்திருந்தான்.

5. வேகவதி வரலாறு

தன் கணவரான பிருமதேவனுடைய யாகத்தை அழிக்கும் நிமித்தம் நதிவடிவமாகப் பிரவாகமெடுத்துச் சரஸ்வதிதேவியானவள் பெருகியோடிச் சென்றாளல்லவா? அப்போது மகாவிஷ்ணுவானவர் நிர்வாணியாகக் குறுக்கே படுத்திருந்ததைக் கண்டு பாதாளத்தில் வந்து சேர்ந்த அவள், அங்கிருந்த படியே திருமாலைத் தியானித்தாள். உடனே அவர் அவள் முன்னால் பிரத்தியட்சமானார். அவரைப் பார்த்துச் சரஸ்வதிதேவி, "பரந்தாமரே! நான் நதிரூபமாகப் பெருக்கெடுத்து வரும்போது நீங்கள் நிர்வாணியாய் என் முன்னிலையில் படுத்துக் கிடந்தீர்களல்லவா? அதனால் எனக்கு மானபங்கமும், பதிவிரதாபங்கமும் ஏற்பட்டு விட்டது. இதில் சந்தேகமே இல்லை. என்னைப் போன்ற பெண்களுக்கு இந்த இரண்டு அம்சங்களும்தானே முக்கியம்? இவைகளிரண்டும் பங்கமடைந்த பிறகும் நான் உயிரோடு இருப்பது சரியல்ல! ஆகையால் நீங்கள் எனக்கு அந்த இரண்டையும் தந்தருள வேண்டும்! இல்லையென்றால்

நான் என் உயிரை விட்டு விடுவேன்! இது நிச்சயம்!" என்றாள். அதைக் கேட்டதும் விஷ்ணு பகவானுக்கு அவள் மீது இரக்கம் உண்டாகியது. அவர் அவளை நோக்கி, "கலைவாணியே! நீ என்னுடைய அம்சம் ஆவாய்! உன் கணவனின் கையிலுள்ள சிருஷ்டி தண்டம் உன்னுடைய அம்சமாக என்னால் தோற்றுவிக்கப் பட்டது. விஷயம் இப்படியிருக்கும் போது, இதை அடியோடு நீ மறந்து விட்டாய்! பிருமனிடமிருக்கும் அந்தத் தண்டத்தை நீ வெகு சுதந்திரமாகப் பறித்துக் கொண்டு உன்னுடன் ஒடுக்கிக் கொண்டும் விட்டாய். அதோடு நில்லாமல் மிகவும் அட்டகாசமாகவும், திமிறாகவும், நதியாகப் பிரவாகமெடுத்தும் ஓடி வந்தாய். அதனால்தான் உனக்கு மானபங்கத்தை விளைவித்து, இப்பாதாளத்தில் ஒடுங்கச் செய்தேன். இதற்கிடையே நான்முகனின் அஸ்வமேதயாகத்தையும் பரிபூரணமாக முடித்துக் கொடுத்து, அவனுக்கு வேறொரு சிருஷ்டி தண்டத்தையும் அளித்தேன். இப்போது நீ உன் ஆணவத்தை அடியோடு களைந்து விட்டு, உன் கற்பைத் திருப்பித் தர வேண்டி என்னைத் தியானிக்கிறாய் அல்லவா? அதனால் எனக்கும் உன்மீது மனக்கனிவு உண்டாகிவிட்டது. இப்போது நான் சொல்லுகிற உபாயத்தின்படி நடந்தால் நீ கற்புடையவளாகத் திகழ்வாய்!" என்றார். அதைக் கேட்ட சரஸ்வதி அந்த உபாயத்தைத் தனக்குக் கூறியருளுமாறு அவரிடம் கேட்டுக் கொண்டாள்.

அதற்கு மகாவிஷ்ணுவானவர், "கலைவாணியே! நீ முன் எடுத்ததுபோல் நதியுருவமாகவே வெளிப்பட்டு, முன் வந்த வழியிலேயே சென்று க்ஷீர நதியோடு கலந்து விடுவாயானால் உன்னுடைய கற்பு பங்கமடைந்த பாவம் நீங்கிவிடும். பிறகு அந்த நதியோடு சமுத்திரத்தில் சங்கமமாவாய்! அப்படி நீ சங்கமமாகிச் செல்லும்போது, உன்னுடைய அதியற்புத அழகு லாவண்யத்தைப் பிருமதேவன் பார்த்து, உன்மேல் கொண்டிருந்த விரோத உணர்ச்சியை

மறந்து, சங்கம ஸ்தானத்தில் உன்னைக் காண்பதற்காக உவகையோடு ஓடோடியும் வருவான். காஞ்சித் தலத்தின் கிழக்கு எல்லையாக உள்ள சமுத்திர கட்ட சங்கமத்தினாலும், கணவருடைய தரிசன விசேஷத்தினாலும் உனக்கேற்பட்டிருக்கும் சகலவிதமான தோஷங்களிலிருந்தும் நீ விடுபட்டுப் பரிசுத்தத்தை அடைவாய்! அதன் பிறகு நான்முகன் தன் ஆசனத்தில் பாதியை உனக்குக் கொடுத்து அன்புப் பெருக்கோடு உன்னைத் தழுவி மகிழ்வான்!" என்று அனுக்கிரகித்து விட்டுச் சென்றார்.

அவருடைய வார்த்தைகளின்படியே சரஸ்வதிதேவி, க்ஷீர நதியோடு கலந்து விரைந்தோடிச் சென்றாள். அவள் சமுத்திர சங்கமமானபோது பிருமதேவன் ஆனந்தமடைந்து அவளை அழைத்துச் சரியாசனம் கொடுத்தார். அவள் மனம் மகிழும்படியாக அவளைத் திருமணம் செய்து கொண்டு, "என் அன்புக்குகந்த தேவியே! நீ அதிவிரைவாய் நதி உருவம் கொண்டு ஓடியதால் இந்த நதி வேகவதி என்ற பெயரில் வழங்குவதாக! இதில் நீராடுபவர்களின் தீவினைகள் அதிவேகமாகச் சென்று, புண்ணியத்தை அடையக்கடவார்களாக!" என்று வரமளித்தார். பிறகு அவர் தம் அருமைப் பத்தினியான கலைவாணியோடு சத்தியலோகத்தை அடைந்து தமது சிருஷ்டித் தொழிலைக் கவனித்து வரலானார்.

கங்கை நதிக்கரையில் சௌமியநாதன் என்ற அந்தணன் ஒருவன் வசித்து வந்தான். அவன் காசிப கோத்திரத்தில் உதித்தவன். சாம வேதத்தைச் சேர்ந்தவன். அவன் சகல செல்வபோகங்களோடு, சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தாலும், பிற பெண்களை நாடும் தீய மனம் படைத்தவனாக இருந்தான். அதன் காரணமாக அவன் வயோதிக தசையை அடைந்தபோது குஷ்டரோகம் போன்ற பலவிதமான கொடிய வியாதிகளாலும் பீடிக்கப் பட்டு துன்பமடைந்தான். அந்நோய்களின் வலி

வேதனைகளைப் பொறுக்க முடியாமல் மனம் வருந்திய அவன், "என்னுடைய இந்த வியாதிகளிலிருந்தும் எனக்கு விமோசனம் உண்டாகுமோ?" என்று பெரியோர்களிடம் பவ்வியமாகக் கேட்டான். அதற்கு மனமிரங்கிய அவர்கள், "பிராமணனே! உன் வியாதிகளிலிருந்து நீ விடுபட்டுப் புனிதமடையும் படியான ஒரு மார்க்கம் இருக்கிறது! அதாவது வேகவதி நதியில் நீ நீராடினால் உன் தீவினைகள் எல்லாம் தீர்ந்து விடும்!" என்று கூறினார்கள். உடனே அந்தப் பிராமணன் வேகவதியை அடைந்து மூன்று தடவைகள் அதில் நீராடினான். உடனே அவனுடலைப் பீடித்திருந்த வியாதியெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடி விட்டது. திடகாத்திரமான உடலை அடைந்த பிராமணன் தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்து, சில காலம் வரையில் போகபாக்கியங்களோடு வாழ்ந்து வந்தான். அவனுடைய காலம் முடிவடைந்த பிறகு மகாவிஷ்ணுவின் திருவடித் தாமரைகளில் இரண்டறக் கலந்தான்.

6. சிவ க்ஷேத்திர வரலாறு

வாயு திக்கில், பராசக்தியானவள் ருத்திர மூர்த்தியாகப் பிருமதேவனுக்குத் தரிசனம் கொடுத்ததால் அந்தத் தலம் ருத்திரசாலை என்று வழங்கப்படலாயிற்று. இதற்கு ஐந்து பெயர்கள் உண்டு. அவைகள் :

(1) ருத்திர கோடி, (2) கைலாயம், (3) ஏகாம்பரம், (4) மகாஸ், (5) மசானம் என்பதாகும்.

ருத்திரம் என்னும் வார்த்தைக்கு இலிங்கம் என்று பொருள். இலிங்க மூர்த்தம் கோடியாக இருப்பதால் ருத்திரகோடி எனப்படும்.

எல்லை : ஸ்வேதப் பெருமாளுக்கு தெற்கிலுள்ள காயாரோகணேஸ்வரர் ஆலயம் தான் தெற்கு எல்லை. அதற்கு மேற்கிலுள்ள கன்னிகேஸ்வரர் ஆலயம்தான் மேற்கு எல்லை!. அதற்கு வடக்கில் உள்ள கைலாயநாதர் ஆலயம்தான் வடக்கு எல்லை. அதற்கு கிழக்கில் உள்ள ஸ்வேதப் பெருமாள் ஆலயம்தான் கிழக்கு எல்லை.

ருத்திரசாலையாகிய இந்த எல்லையில் விநாயகர் ஆலயம், கந்தர் ஆலயம், துர்க்கை ஆலயம், சிவாலயம், விஷ்ணு ஆலயம், முத்திரைகள், தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகள்:-

காயாரோகணத்துக்கு வடக்கில் விஷ்வச்சேனருக்கு மகாவிஷ்ணு சக்கரம் கொடுத்த விகடசக்ர விநாயகர் ஆலயம். அதற்கு வடக்கில் மார்க்கண்டேயருக்கு ஞானோதயம் செய்த மாமரத்தின் அடியில் ஸ்கந்தர் ஆலயம். அதற்கு கிழக்கில் கம்பா நதியின் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய பிரளயபந்தினி ஆலயம். அதற்கு தெற்கில் கஜாசுரனைச் சங்கரித்து முனிவர்களைக் காத்தருளிய சம்பத் கௌரீஸ்வரி ஆலயம். அதற்கு மேற்கில் சம்புகன் என்னும் குருட்டுப் பிராமணனுக்குக் கண் கொடுத்தருளிய ரேணுகாம்புஜவல்லி ஆலயம். அதற்கு தெற்கில் வீரபத்திரமூர்த்தியினுடைய கோபத்தைத் தணித்த வீரவரேஸ்வரி ஆலயம்.

அதற்கு கிழக்கில் யயாதி மகாராஜனுக்கு சரீரத்தோடு முக்தி கொடுத்த காயாரோகணேஸ்வரர் ஆலயம். அதற்கு வடக்கில் தேவர்களுக்குச் சுரத்தைப் போக்கிய சுரகரீஸ்வரர் ஆலயம். அதற்கு நிருதியில் இந்திரனுக்கு விருத்திராசுரனைச் சங்கரிப்பதற்கு வச்சிராயுதம் கொடுத்த அநேகபதேஸ்வரர் ஆலயம். அதற்கு வாயுவில் துண்டீரராஜனுக்குக் கைலாச பதவியைக் கொடுத்த கைலாயநாதர் ஆலயம். அதற்கு தெற்கில் வால, கில்யர்களுக்கு அபயக் கரம் கொடுத்து,

ரட்சித்த பச்சிமேஸ்வரர் ஆலயம். அதற்கு ஈசானியத்தில் சர்வதீர்த்தத்தினால் கங்கையின் பாபத்தை நீக்கிய விஸ்வேசுவரர் ஆலயம். அதற்கு வடக்கில் ஓணன் காந்தன் என்பவர்களுக்கு கட்கமும், சூலமும் கொடுத்த ஓணகாந்தேஸ்வரர் ஆலயம். அதற்கு கிழக்கில் பண்டாசுரனைச் சங்கரிக்கும் நிமித்தம் தமது சக்தியினால் உலகங்களைச் சாம்பலாக்கிய மயானேஸ்வரர் ஆலயம்.

அதற்கு நிருதியில் பாண்டவர்களுக்காகத் தூது சென்ற பாண்டவப் பெருமாள் ஆலயம்; அதற்கு நிருதியில் சந்திரகாந்தியைத் தமது கண்டத்தில் தாங்கிக் கொண்ட சந்திரக் கிரீடப் பெருமாள் ஆலயம். அதற்கு ஈசானியத்தில் சந்திரவர்ணன் என்னும் அசுரனால் அந்தகாரத்தில் பிரகாசப்பட்ட ஸ்வேதப் பெருமாள் ஆலயம்.

அதற்கு ஈசான்யத்தில் கள்ளக் கம்பர் கள்ள வடிவம் கொண்டு பின் கலிங்கரூபமான இடம். அதற்கு மேற்கில் சிவ ஆக்ஞையினால் மார்க்கண்டேயர் வசிக்கும் இடம். அதற்கு வடக்கில் கங்காசைலாசலகை சிவார்த்தாசனத்தில் சமமாய் வீற்றிருப்பதுபோல தேவசிற்பியினால் நிர்மாணிக்கப்பட்ட இடம். அதற்கு ஆக்னேயத்தில் நேத்திரத்திலிருந்து கங்கையை உண்டுபண்ணி வெள்ளக்கம்பர் ஆன இடம். அதற்குக் கிழக்கில் சிவஆக்ஞையினால் மயானத்தைக் காக்கும் வீரபைரவர் இருக்கும் இடம்.

அதற்கு வாயுவில் பிரும்மாண்டங்களை உண்டாக்கியதும், சர்வ பாவங்களை நீக்கக் கூடியதுமான சிவகங்கை தீர்த்தம். அதற்கு ஆக்னேயத்தில் அங்காரகனின் அக்னி உருவத்தைப் போக்கிய மங்கள தீர்த்தம். அதற்கு நிருதியில் தேவர் சுரத்தைப் போக்கிய சுரகர தீர்த்தம். அதற்கு வாயுவில் பாண்டவர்களுக்குக் கண்ணபிரானைத் துணையாக்கிய பாண்டவ தீர்த்தம்.

தீர்த்த பலன் : சிவகங்கையில் சோமவாரத்தில் நீராடுபவர்களுக்குக் கங்கையில் நீராடிய பலனும், மங்கள தீர்த்தத்தில் மங்கள வாரத்தில் நீராடுபவர்களுக்கு சரஸ்வதி நதியில் நீராடிய பலனும், சுரகர தீர்த்தத்தில் நீராடுபவர்களுக்குக் கோதாவரி நதியில் நீராடிய பலனும், பாண்டவ தீர்த்தத்தில் திருவாதிரையில் நீராடுபவர்களுக்குக் கிருஷ்ணா நதியில் நீராடிய பலனும் கிடைக்கும்.

கிருஷ்ணா நதி தீரத்தில் ஏலாபுரத்தில் கௌசிகன் என்ற பெயரையுடைய ஓர் அந்தணன் வசித்து வந்தான். அவன் ருக் வேதத்தைத் தழுவுபவன். கௌதம கோத்திரத்தில் பிறந்தவன். அவன் தான் அவதரித்த அந்தண குலத்து ஆசார அனுஷ்டானங்களை ஒரு சிறிதும் கருதாமல், தூராக்கிரகச் சிந்தையனாகத் திரிந்து வந்தான். பூமியில் எந்தெந்த இடங்களில் புதையல்கள் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு, அப்புதையல்களை அடைவதற்காக ஊரெங்கும் அலைவான். அவன் பிரயாண மார்க்கமாகப் போய்க் கொண்டிருக்கும் சகல லட்சணங்களும் பொருந்திய சிறுவர்களை நயவஞ்சகமாக ஏமாற்றித் தன்னோடு அழைத்துக் கொண்டு செல்வான். அவர்களுக்குச் சத்துள்ள சாப்பாட்டை வயிறு நிரம்பக் கொடுத்து, பொன் பொருள்களையும் தாராளமாக வாரி வழங்குவான். ஆனால் இது ஆறேழு மாதங்களோ, அல்லது ரொம்பவும் மிஞ்சிப் போனால் ஒரு வருஷ காலமோ தான் நீடிக்கும். அதன்பிறகு புதையல்கள் இருக்கும் இடங்களில் அச்சிறுவர்களைப் பலி கொடுத்து அங்குள்ள பொன் பொருள்களையெல்லாம் எடுத்துச் சென்று விடுவான். இப்படியாகவே அவன் செய்து வரும் நாளில், காஞ்சித் தலத்திலிருந்து ஓர் அந்தணன் பிரயாண மார்க்கமாக வந்து கொண்டிருந்தான். அப்போது அவன் தாங்க முடியாத தண்ணீர் தாகத்தால் தவித்தான். அவன் அப்படித் தாகமேலீட்டால் தவிதவிப்பதைக் கண்டு கௌசிகனுக்கு

இரக்கமேற்பட்டது. உடனே தன்னிடமிருந்த நீர்மோரை அப்பிராமணனுக்குக் கொடுத்து, தாகத்தைப் போக்கினான். அதற்குப் பின் சில நாட்கள் கழித்துக் கௌசிகன் இறந்து போனான். அப்போது யமன் தனது பாசத்தால் அவனை இறுகக் கட்டியிழுத்துத் தன் உலகத்திற்குக் கொண்டு போனான். ஆனால் சிவகணங்களோ, அவனை அங்கிருந்து மீட்டுக் கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அதன் காரணத்தைப் புரிந்து கொள்ளாத யமன் நேராகக் கைலாயம் சென்று சிவபெருமானை வணங்கித் துதித்து, "இந்தத் தீவினையாளன் உங்கள் உலகத்திற்கு வரத் தகுதியற்றவன். அப்படியிருக்கும்போது அவனை இங்கு அழைத்து வரக் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்குப் பரமேஸ்வரன், "யமதர்ம ராஜனே! இவன் படுபாதகனாக இருந்தாலும், ஒரே ஒரு புண்ணிய காரியத்தைச் செய்ததன் மூலம் பலவிதமான பாவகாரியங்களிலிருந்தும் விடுதலை அடைந்து விட்டான். ருத்திரசாலையிலிருந்து வந்த ஓர் அந்தணனுக்கு இவன் நீர்மோர் கொடுத்துத் தாகத்தைத் தணிவித்தான். அந்த ஒரு செய்கையின் மூலமே, இங்கு வரக்கூடிய மேலான பாக்கியத்தையும் இவன் பெற்று விட்டான். அதனால் இனியும் நீ இங்கு நிற்பதில் பிரயோஜனமில்லை. உன் உலகத்திற்குப் போய்ச் சேர்!" என்று கூறியனுப்பினார்.

7. ஆம்பிர விருஷப் பிரபாவம்

கணக்கில்லாத மரங்கள் வானளாவ நெருங்கி வளர்ந்திருக்கும் கானகத்தில், உத்திரகோடி சாலையில் பாண்டவ தீர்த்தத்திற்கு உத்தரத்தில் வேதமானது மாமரத்தின் உருவில் வளர்ந்தோங்கி நிற்கிறது. அங்கே தவசிரேஷ்டர்கள் எந்நேரமும் சூழ்ந்திருப்பார்கள். அதனால் இந்த க்ஷேத்திரத்திற்கு உருத்திரகோடி சாலை என்ற பெயரும் வழங்கப்பட்டது. இது சிவபீஜத்திலி

ருந்து தோன்றியதாகவும், ஸ்ரீ காமாட்சி தேவியினால் ஏகாம்பரதரு என்னும் பெயரைப் பெற்றதாகவும் கூறுவார்கள். மேலும் இங்கே பதினான்கு வித்தைகளும், மல்லிகைக் கொடியாகப் படர்ந்திருப்பதாகவும், மேலே மூலமும், கீழே கிளைகளுமாக உணரத்தக்க புண்ணிய வடிவமாகவும், நீர்ப் பிரளயத்தில் மிதந்து வந்த மார்க்கண்டேய முனிவரைக் காப்பாற்றியதாகவும், புராணங்களில் புகழ்ந்து பேசும்படியான சிறப்புப் பெற்று விளங்குகிறது.

மார்க்கண்டேய முனிவரைக் காப்பாற்றிய வரலாறு

ஒரு சமயம் கைலாசத்தில் அதிக ஆடம்பரமாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கும் அந்தப்புரத்தில் சிவபெருமான் காமவசத்தால் உள்ளம் நெகிழப்



பார்வதிதேவியோடு அர்த்தாசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அப்பெருமானுக்குப் பிரியஸ்திரீகளான கோடிசக்திகள் ஆத்திரமடைந்தவர்களாகப் பரமேஸ்வரனை நெருங்கி, "எங்கள் நாதரே! நீங்கள் உமாதேவிக்கு அர்த்தாசனம் கொடுத்திருப்பது போல எங்களுக்கும் கொடுக்க வேண்டும்!'' என்று கேட்டார்கள்.

அதற்குப் பரமேஸ்வரன், ''இந்தக் கைலையங்கிரியிலுள்ள ஆடவர்கள் அனைவரும் என்னுடைய அம்சத்தில் தோன்றியவர்களாவார்கள். அதைப் போலவே பெண்மணிகள் அனைவரும் உமாதேவியின் அம்சத்தில் தோன்றியவர்களாவர். ஆகையால் ஆடவர்களுக்கு நானே தலைவனாவேன். அதைப் போலவே பெண்களுக்கு உமாதேவியே தலைவியாவாள். இதிலிருந்து பார்த்தால் உமாதேவியை விட நீங்கள் அனைவரும் தாழ்ந்தவர்கள்தான். தாழ்ந்தவர்களான உங்களுக்கு நான் சரியாசனம் எப்படிக் கொடுப்பேன்? எனக்குச் சரிநிகராக அமரக் கூடியவர் உமாதேவி ஒருத்திதான்!" என்றார். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சக்திகோடிகள் அனைவரும் எம்பிரானை நோக்கி, "எங்கள் நாதரே! நீங்கள் என்ன வார்த்தைகளைக் கூறிவிட்டீர்கள்? உங்களைப் போல் இப்படி அபாண்டமாகப் பேசக்கூடியவர்களை நாங்கள் எங்குமே பார்த்ததில்லை. உமாதேவியின் அம்சத்தில் தோன்றியவர்கள் நாங்களென்றா கூறினீர்கள்? இந்த உமாதேவியல்லவா எங்களுடைய அம்சத்தில் அவதரித்தவள். இது தெரியாதவரைப் போல் எங்களுக்குச் சம ஆசனம் கொடுக்க மறுப்பது தகாத செயலாகும். அதனால் எங்களுக்கும் சம ஆசனம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். தவிரவும், இந்த உமாதேவிக்கு, பெண்களுக்கு இருக்க வேண்டிய சாகச குணம் இருக்கிறதா? இவள் மன்மத லீலையில் கற்றுத் தேர்ந்தவளா? கணவனின் குறிப்பறிந்து நடக்கும் புத்திசாதுரியம் உடையவளா? கல்வி கேள்விகளில்

உயர்ந்தவளா? அழகு, அடக்கம், சுபாவம் முதலியவைகளில் தான் சிறந்தவளா? ம்! நாங்கள் இப்படிச் சொல்லுவதை உங்களால் மறுத்துச் சொல்லவே முடியாது! நாங்கள் சொன்ன குணங்களில் ஏதாவது ஒரு குணமாவது அவளிடம் இருக்குமென்றால், அதை நீங்களே குறிப்பிட்டுச் சொல்லுங்கள்! அல்லது அவளைக் கொண்டே அதை வெளிப்படுத்திக் காட்டச் சொல்லுங்கள்!" என்றார்கள்.

சக்திகோடிகளின் முறையீட்டைக் கேட்ட சிவபிரான் மெல்லப் புன்முறுவலித்தார். அவர்களுடைய ஆணவத்தை அந்த விநாடியிலேயே போக்கடிக்க வேண்டும் என்று எண்ணிய அவர், அப்பெண்மணிகளின் உடலைத் தழுவியிருந்த உடைகளையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போக்கடித்து விட்டார். உடனே அச்சக்திகளெல்லாம் நிர்வாணக்கோலத்தில் காட்சியளிக்கலானார்கள். அந்தக் காட்சியைக் கண்ட உமாதேவியார், தம் நாதருக்கு அந்த நிர்வாணக்கோலம் தென்படாதபடி ஒரு புடவையாகத் தானே மாறி மறைத்துக் கொண்டாள். அவர்கள் வேறு உடைகள் உடுத்திக் கொள்ளும் வரையிலும் எம்பிரான் ஒரு முகூர்த்த காலம் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார். அதனால் சூரியன், சந்திரன், அக்கினி போன்றவைகள் தம்தம் வேலைகளில் இயங்க மறுத்து வாளாயிருந்து விட்டன. அதன்பயனாக சகல இடங்களிலும் இருள் பரவி, சகல ஜீவராசிகளும் செயலற்று இருந்து விட்டன. அப்போது எங்கு பார்த்தாலும் ஒரே ஜலப் பிரளயம் பெருகியோடியது என்றும் அழிவில்லாதவரான மார்க்கண்டேய முனிவர், அம்மகாப் பிரளயத்திலே சகல உலகங்களும் மூழ்கிக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்தார். "இதற்கு என்னால் ஏதாவது செய்ய இயலுமா?" என்று அவர் சிவத்தியானத்தில் ஈடுபட்டார். "எம்பிரானே! எந்தவிதப் பற்றுகளும் இல்லாமல் இந்தப் பிரளய வெள்ளத்திலே நீந்திக் கொண்டிருக்கும் எனக்கு நீங்கள்தான் ஓர்

ஆதாரம் காட்ட வேண்டும்" என்று அவர் இறைவனை மனமுருக வேண்டிக் கொண்டார். அப்போது காஞ்சித் தலத்திலுள்ள வேதவடிவமாகிய மாமரத்தின் இலை பிரளய வெள்ளத்தின் மீது காட்சியளித்தது. அதன் அருகில் அவர் நெருங்கிச் செல்வதற்குள், அந்த மாவிலை, தளிர் பூங்கனிகளையுடைய இளைகளுடன் பிரும்மாண்டமாக ஓங்கி வளர்ந்தது. அதைக் கண்ட முனிவர், இது ஈசனின் கருணையேதான் என்று மனம் பூரித்து, அம்மரத்தின் மேல் ஏறி நின்று, பிரளய ஜலத்தைப் பார்த்து வியந்தார். தமக்குப் புகலிடம் கொடுத்து, ஆதரவளித்த அந்த மாமரத்தைப் பரமேஸ்வரனின் உருவமாகப் பாவனை செய்து, அங்கிருந்த வண்ணமே அதன் அடிப்பாகத்தைப் பார்த்தார். அங்கே அவ்யக்தமான ஜோதி வடிவமாய்,



சிற்சொரூபமாகக் காட்சியளிக்கும் பிரும்மாண்டமான நகரத்தைக் கண்டதும், அவர் அடைந்த ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல. "இப்படிப்பட்ட மாபெரும் பிரளயத்திலும் இந்த நகரமானது எந்த வித நாசமும் இல்லாமல் நீரின் மத்தியில் நிர்ச்சலமாய் ஜோதி சொரூபமாகத் தென்படுகிறதே! இதைப் பார்த்தாலே பெரும் புண்ணியம் கிடைத்து விடுமே!" என்று எண்ணிய மார்க்கண்டேய முனிவர், அந்த மரத்தைக் கைகளால் பிடித்தபடியே கீழேயிறங்கி வந்தார். அப்போது சிவன் மைந்தனான சுப்பிரமணியர் அந்த மரத்தில் பழுத்துத் தொங்கும் மாம்பழங்களை சுவைத்துத் தின்று கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் முனிவர் வணங்கி "இந்தத் தலத்தின் பெயர் என்ன? இந்த மரம் எப்படிப்பட்ட குண விசேஷத்தைக் கொண்டது? தாங்கள் இந்த மாமரத்திலுள்ள பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டு, இந்த இடத்திலேயே வசித்து வருவதற்குரிய காரணம் யாது? இந்த மாபெரும் நீர்ப் பிரளயத்திலும் இந்த இடம் அழிந்து விடாமல் இருப்பது யாருடைய சக்தியினால்? என்னுடைய இந்தச் சந்தேகங்களையெல்லாம் தயவு செய்து தாங்கள் போக்கியருள வேண்டும்!" என்று விண்ணப்பித்தார்.

உடனே சுப்பிரமணியர், "இந்தத் தலத்தின் பெயர் ஸ்ரீ காஞ்சி என்பதாகும். இது பிரளயத்தையே வென்றிருக்கிறது. பிரளயங்கள் ஏற்படும் போதெல்லாம் சக்தி தேவியானவள் தனது வல்லமையால் இந்தக் காஞ்சித்தலத்தைக் காப்பாற்றி வருவதனால், இதற்கு பிரளயஜித் எனவும் சொல்லலாம். இந்த மாமரமோ முழுக்கமுழுக்க ஈஸ்வரனின் வடிவமாகும். அந்த ஈஸ்வரனே இந்த மரத்திற்குப் பீஜமாகி விருட்ச ரூபமாகத் திகழ்கிறார். இதில் பழுக்கும் பழங்களோ வேதவித்யா சொரூபமாகும். ஆகையால் தினந்தோறும் நான் இந்தப் பழங்களைத் தின்று வருகிறேன். இதைச் சாப்பிட்டவர்கள் வேதவித்யா குருவாக ஆவார்கள்!" என்று கூறியருளினார்.

அதைக் கேட்டதும் மார்க்கண்டேய முனிவர், முருகப்பெருமானின் பாதகமலங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். பிறகு அந்த ஏகாம்பரேசுவர மாமரத்திலிருந்து பழங்களைப் பறித்துத் தாமும் உண்டு மகிழ்ந்தார்.


துங்கபத்திரை நதிக்கரையில் சிருங்கிசைலம் என்ற நகரத்தில் கிரௌஞ்சன் என்னும் ஓர் அந்தணன் வசித்து வந்தான். அவன் பிராமணோத்தமர்கள் வணங்கி வழிபடும் பொன்மயமான விக்கிரகங்களைத் திருடிச் சென்று, அவற்றை விற்றுக் கிடைக்கும் பணத்தில் வாழ்க்கை நடத்தி வந்தான். அவனுக்குப் பதினாறு பிள்ளைகள் பிறந்தார்கள். ஆனால் அத்தனை பிள்ளைகளும் அலிகளாக இருந்தார்கள். அதைக் கண்டு மனம் வருந்திய கிரௌஞ்சன், அவர்களின் அலி ரூபத்தை நிவர்த்தி செய்வதற்காக, அநேக புண்ணிய தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்தான். அப்படிச் சென்று வரும்போது, அவன் இந்த ருத்திரசாலையை அடைந்து, இந்த மாமரத்தையும் பார்த்தான். உடனே இதன் அடியில் அவன் ஒரு வினாடி நேரம் தங்கியிருந்து தனக்கேற்பட்டிருந்த களைப்பைப் போக்கிக் கொண்டு தன் இருப்பிடத்தை அடைந்தான். இதன் அடியில் அவன் ஒருவினாடி நேரம் தங்கியிருந்ததால் ஏற்பட்ட புண்ணிய விசேஷத்தினால் அவனுடைய பதினாறு அலி ரூபமான பிள்ளைகளும், ஆண்மைத் தன்மை அடைந்து வாலிபர்களானார்கள். அதைக் கண்டதும் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கி மகிழ்ந்த கிரௌஞ்சன், தன்னுடைய சந்ததியை இவ்வாறு விருத்தியடையச் செய்தது ருத்திர சாலைதான் என்பதை உணர்ந்து கொண்டான். ஒரு வினாடி நேரம் அந்த மாமரத்தின் அடியில் தங்கியிருந்து இளைப்பாறியதற்கே இவ்வளவு பெரிய புண்ணிய பாக்கியம் கிடைத்தது என்றால், அந்தத் தலத்திலேயே வாழ்நாள் முழுவதும் வசித்து வருவதால் ஏற்படக்கூடிய புண்ணிய பலன்களை மதிப்பிட்டுச் சொல்லவே முடியாது என்று எண்ணிய அவன்,

அந்தக் கணமே அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சித் தலத்திலுள்ள ருத்திர சாலையை அடைந்தான். அங்கே தினசரி சிவ பூஜைகள் செய்து ஒழுக்க சீலனாக வாழ்ந்து வந்து இறுதியில் சிவலோகத்தை அடைந்தான்.

8. ரசாவேசப் பிரபாவம்

வேத சொரூபமாகிய மாமரத்தின் அடியில் பரமேஸ்வரர் வாழைப் பூவைப்போல் ஓர் அஸ்தப் பிரமாணம் சோதி வடிவமாய்த் திகழ்கிறார். உமாதேவியாரின் அரவணைப்பினாலும், குசகங்கண சோபிதராகவும், சதுர்மூர்த்தி வத்யகதராகவும், அகண்ட சச்சிதானந்த தேஜோமயமாகவும், மான், மழு, வரதம் அபயம் ஆகிய அஸ்தங்களால் பிரகாசித்துக் கொண்டும் விளங்குகிறார். தவள மேனியராகவும், பஸ்மோத் தூளித விக்ரஹராகவும், முக்கண்ணராகவும், சந்திரசேகரராகவும், பாம்பைக் கங்கணமாக அணிந்தவராகவும், கங்கையைத் தரித்தவராகவும், சடாமகுடத்தை உடையவராகவும், சவ்யதக்ஷணங்களில் உமாதேவியும், கங்காதேவியும் தமக்குச் சாமரைகளை வீசும்படியாகவும், ருத்திர கோடீஸ்வரராகவும், ஸ்ரீ காமாட்சிதேவியார் தம்மை வணங்கி நிற்க, மகா பிரளயத்தைப் போக்கி, தேவியைத் தம் மனையாளாகக் கைப்பிடித்து என்றும் நித்ய கல்யாண சுந்தரராகக் காட்சியளிக்கிறார்.

ஒருசமயம் உமாதேவியார் விளையாட்டாகத் தம் நாயகரின் கண்களைப் பொத்தினார். அப்போது ஏற்பட்ட அந்தகாரத்தில், சிருஷ்டித் தொழில் அடியோடு நின்றுபோய், சகல உலகங்களிலும் தரும நெறி அழிந்து விட்டது. உயிர் வாழும் ஜீவராசிகளுக்கெல்லாம் பாவம் பெருகி வந்து, அப் பாவங்களெல்லாம் கருமை நிறமாக மாறியது.



அக்கருமை நிறம் உமாதேவியின் பொன்மயமான வடிவத்தைக் கருப்பு நிறமாக்கி விட்டது. தேவர்களனைவரும், பெருந்தீவினை தங்களுக்கு நேரப் போகின்றது என அச்சமடைந்து பெரிதாக ஓலமிட்டார்கள். அதைக் கண்டு திடுக்குற்ற உமாதேவி, சிவபெருமானின் கண்களைப் பொத்தியிருந்த தமது கைகளை எடுத்துக் கொண்டாள். உடனே தமது சரீரம் கருமை நிறமாக மாறியிருப்பதைப் பார்த்து வியப்பும், மனவருத்தமும் அடைந்தாள். அதற்குக் காரணத்தை அறிந்து கொள்வதன் பொருட்டு பரமேஸ்வரனை பலமுறைகள் வணங்கித் துதித்து, "ஈசனே! கருணாகர மூர்த்தியே! தங்கம் போல் தகதகவென்று ஜ்வலிக்கும் என் உடல், இப்போது பாப வடிவமான கருப்பு நிறத்துடன் காண்பதற்கே சகிக்க முடியாத அளவுக்கு அகோரமாகக் காட்சியளிக்கிறதே! அதற்குரிய காரணம் யாதோ?" என்று வினவினாள்.

அதற்குப் பரமேஸ்வரன் "தேவி! இது கருப்பு நிறமல்ல! இது உலகில் உயிர் வாழும் ஜீவராசிகள் அனைத்தினுடைய பாபத் திரட்சியேயாகும்!" என்று பதிலளித்தார். அதைக் கேட்டதும் நடுநடுங்கிய உமாதேவி, தம் நாயகரைப் பலவாறாகவும் வணங்கித் துதித்து, "என் நாதரே! இந்தப் பாபச் சுமையான கருமை நிறத்திலிருந்து நான் விடுபடுவதற்கு ஏதாவது பரிகாரம் இருந்தால், கருணை கூர்ந்து அதைத் தெரிவியுங்கள்!" என்று கண்ணீர் சிந்தியபடியே கேட்டாள். அதற்குச் சிவபெருமான், "நீ வேகமாகப் பதரிகாச்சிரமத்திற்குச் சென்று அங்கே ஒரு குழந்தையாக உருமாறிப் படுத்திரு! குழந்தைப் பேற்றிற்காக ஏங்கிக் கிடக்கும் காத்தியாயன முனிவன் அந்த இடத்திற்கு வருவான். குழந்தையாகக் கீழே படுத்திருக்கும் உன்னைக் கண்டதும் அவன் அளவுகடந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு உன்னை வாரியெடுத்து அணைத்துக் கொள்வான். தனக்குப் புத்திர பாக்கியம் கிடைத்து விட்டதென்று பேருவகை அடைவான். தன்னுடைய ஞான திருஷ்டியினால் நீ யாருடைய அவதாரம் என்பதையும் அவன் அறிந்து கொண்டு விடுவான். உன்னைத் தன்னுடைய ஆசிரமத்திற்கு எடுத்துக் கொண்டு போய் பல வருஷகாலம் அருமையாகச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்து வருவான். அதன் பிறகு என்னுடைய ஆணையின்படி யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டு குடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்த பயிறு, கங்கை மணல், கங்கா தீர்த்தம், குடை இவைகளை உனக்குத் தருவான். அவைகளை நீ வாங்கிக் கொண்டு, காசிமாநகருக்குச் செல்ல வேண்டும். அச்சமயம் காசியில் பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும். உடனே அன்னதானங்களின் மூலமாக அந்த வறுமைப் பிணியை நீ போக்கிவிட்டு, அன்னபூரணியென்ற பெயருடன் பன்னிரெண்டு வருஷகாலம் அந்த இடத்திலேயே இருந்து வர வேண்டும். அதன் பிறகு

தென் திசையை நோக்கிச் செல்! அப்படிச் செல்லும் போது, எந்த இடத்தில் புலித்தோல் சோமவிருத்தமாகவும், ஆதார பீடமாகிய குடம் அதன் சூத்திரமாகவும், மணல் இலிங்க வடிவமாகவும், ருத்திராட்ச மாலை பில்வ மாலையாகவும், குடை நாகாபரணமாகவும், யோக தண்டம் திரிசூலமாகவும், சாமரைகள் இரண்டு பெண்களாகவும், விசிறி கிளியாகவும், குடம் குடதீபமாகவும், புத்தகம் காமதேனுவாகவும், வித்யாதரம் ஊசியாகவும், வறுத்த பயிறு முளையோடு கூடிய பயிராகவும், கங்கை பாலாகவும் மாறுகிறதோ, அந்த இடம்தான் காஞ்சித்தலம் என்பதைத் தெரிந்து கொள்வாயாக! அந்தத் தலத்தில் சோம சூத்திரருடன் கூடிய இலிங்கத்தை தினசரி க்ஷீரத்தால் அபிஷேகம் செய்து, நாகாபரணத்தினால் அலங்காரம் செய்வித்து, பில்வ மாலையைச் சாத்தி, முளையோடு கூடிய பயிரை நைவேத்தியம் செய்து பக்தி சிரத்தையோடு வணங்கி, அவருடைய இரு பக்கங்களிலும் இரண்டு பெண்மணிகளைக் காவலாக வைத்து, துகோக்ஷீரத்தை அருந்தி, கிளியைக் கையில் ஏந்தி, ஊசியை நாட்டி, அதன் முனையில் பஞ்சாக்கினியின் நடுவிலிருந்து என்னை வணங்கித் தவம் புரிவாயாக. அப்போது உனக்கு நான் தரிசனமளித்து, உன்னையே என் பத்தினியாகவும் திருமணம் செய்து கொள்ளுகிறேன். அந்த வினாடியிலேயே நீ உன் கருமை நிறத்தில் இருந்து விடுபட்டு பொன்நிறமாகத் திவ்விய தேஜஸுடன் பிரகாசிப்பாய்!" என்று கூறினார்.

அவருடைய உபதேசத்தின்படியே உமாதேவியானவள், தம் கணவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு பதரிகாச்சிரமத்தில் காத்தியாயன முனிவருடைய குழந்தையாக அவதரித்தாள். அம்முனிவரிடமிருந்து யோக தண்டம் முதலான பொருள்களைப் பெற்றுக் கொண்டு காசி நகரை அடைந்தாள். அங்கு அன்னதானத்தினால் பஞ்சத்தைப் போக்கி, காசி ராஜனுக்கு முக்தியையும் அளித்தாள். காஞ்சித் தலத்தை

அடையும் நோக்குடன் அவள் காசியிலிருந்து புறப்பட்டு நடந்து வரும்போது, யோக தண்டம் முதலான பொருள்கள் எம்பிரான் கூறியபடியே மாறியதைக் கண்டு, இதுதான் காஞ்சிமாநகரம் என்பதைத் தெரிந்து கொண்டாள். அங்கேயுள்ள ஒவ்வொரு மாமரத்தின் அடியிலும் சென்று ஈஸ்வரனைத் தேடினாள். ஆனால் அவளால் எளிதில் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியில் ஒரு மாமரத்தின் அடியில் பரமேஸ்வரனின் திரு உருவத்தை அவள் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் திணறினாள். அவள் அங்கேயே தங்கியிருந்து, நாள் தவறாமல் சர்வேஸ்வரனுக்குப் பூஜை செய்து, வணங்கி வழிபட்டு வந்தாள். ஆனால் அவள் இப்படி அநேக நாட்கள் வழிபட்டு வந்ததும், ஈசன் அவளுக்கு அருள்புரியவில்லை. அதனால் அவள் கடுந்தவத்தில் சில நாட்கள் ஈடுபட்டாள். அப்போது ஒருநாள் நாரதமுனிவர் தீர்த்த யாத்திரை மார்க்கமாக அத்தலத்திற்கு வந்தார். உமாதேவி அம்முனிவரை நோக்கி, "திரிகால ஞானியே! நான் என்னதான் பூஜை புனஸ்காரங்கள் செய்தும், இறைவனை வணங்கி வழிபட்டு வந்தாலும், எனக்கு அவர் இதுவரையிலும் அருள் புரிய மறுத்து விட்டார். இனி நான் இதற்கு என்ன செய்ய வேண்டும்? கருணை கூர்ந்து அதைச் சொல்லுங்கள்!" என்று கேட்டாள். அதற்கு நாரத முனிவர், பஞ்சபாண மந்திரத்தை தேவிக்கு உபதேசித்து விட்டு அங்கிருந்து விடைபெற்றுச் சென்றார்.

அதன் பிறகு பார்வதிதேவி அப்பஞ்சபாண மந்திரத்தை ஆறுமாத காலம் வரையில் சிவலிங் கத்திற்கு அர்ச்சனை செய்தபடியே ஜெபித்துத் தவம் புரிந்து வந்தாள். அவளுடைய தவத்தின் உக்கிரமானது கைலாசத்திற்குச் சென்று தகித்தது. தம்மை நினைத்து வணங்குபவருக்கெல்லாம் பாரபட்சமின்றி அருள் புரியும் பரமேஸ்வரன், உமாதேவியின் வேண்டுதலின்படியே பஞ்சபாண மந்திரங்களுக்கு ஆட்பட்டவராய், மோகாவேசம் கொண்டார். யோகினி



கணங்களோடு கேளிக்கைகள் புரிந்தும், அவருடைய காமப்பசி சிறிதும் அடங்கவில்லை. அதனால் தமது திருமுடியில் வசிக்கும் கங்கையில் மூழ்கி ஓரளவு திருப்தியடைந்தார். ஆனால் அவருடைய காமாக்கினி இன்னும் தீர்ந்தபாடில்லை. அதனால் அவர் கங்கையை நோக்கி, "உன் வடிவமான நதி வெள்ளத்தில் மூழ்கியும் என்னுடைய காமாக்கினி சிறிதளவு கூடத் தணியவில்லை. ஆகையால் நீ உடனே உமாதேவி

தவம் செய்யும் இடத்திற்குச் சென்று, அவளுடைய மந்திர ஜெபத்தைத் தடுத்துவிட்டு வா!" என்று கட்டளையிட்டார். உடனே கங்காதேவியானவள் சிவபெருமானின் ரோமக் கால்களில் அடங்கி இருக்கும் கோடி தீர்த்தங்களையும் ஆகர்ஷித்துக் கொண்டு சர்வத்திற்கும் காரணகர்த்தாவாகிய மகேஸ்வரனை மனதில் இருத்திய வண்ணம் மிகவும் சீதள சொரூபியாக, அதிவேகமாகப் புறப்பட்டுச் சென்றாள். முதலில் நந்திசைலத்தை அடைந்து, அங்கிருந்து பார்வதிதேவி தவம் புரியும் காஞ்சித் தலத்தை அடைந்தாள். அவளைப் பார்த்ததும் உமாதேவி தமது தோழிமார்களில் ஒருத்தியை அழைத்து, அந்தப் பிரளயத்தைத் தடுக்கும்படி ஆணையிட்டாள். அதன்படியே அந்தக் காளியும் தன் கையிலிருந்த விஸ்வபட்சணம் என்னும் மண்டை ஓட்டில், பிரளய வெள்ளம் முழுவதையும் உள்ளடக்கி, அதை வெளியே போக விடாமல் தடுத்துவிட்டாள்.

அதனால் எந்தவித விக்கினமும் இல்லாமல் தவத்தை நிறைவேற்றி விட்ட சக்திதேவி, தனது தோழியான காளிக்குப் பிரளயபந்தினி என்று பெயரிட்டாள். அதைக் கண்ணுற்ற மகேஸ்வரர் அடங்காக் கோபம் கொண்டார். அவர் தமது சடாபாரத்திலிருந்து கங்காதேவியை ஆயிரம் முகங்களோடு மாபெரும் பிரளயமாகப் பெருக்கெடுத்தோடும்படிச் செய்தார். அதைக் கண்ட பார்வதி தேவி, இந்தப் பிரளய வெள்ளத்தைப் பிரளய பத்தினியாலோ அல்லது வேறு எவராலுமோ தடுத்து நிறுத்த முடியாதே!" என்று பீதியடைந்தாள். அந்த இக்கட்டான வேளையில் தேவியின் மனம் மகாவிஷ்ணுவை நினைத்தது. உடனே விஷ்ணு பகவான் அந்த இடத்திற்கு விரைந்தோடி வந்து தம்முடைய ஒரு பாதத்தைப் பூமியிலும், மற்றொரு பாதத்தை ஆகாயத்திலுமாக ஊன்றி நின்று, அந்தப் பிரளய வெள்ளத்தைத் தடுத்து விட்டார். அப்போது அவருடைய கண்டத்தில் ஒளிவீசிய சந்திரகலை

பொன்னிற ஒளிக் கதிர்களைப் பரப்பிப் பிரகாசித்தது. அதைப் பார்த்த உமாதேவி, அவரைத் தமது கணவர் என்று எண்ணி அச்சமடைந்தாள். அப்போது சந்திரகண்ட விஷ்ணு பகவான் அவளை நோக்கி, “தேவியே! நான் உனது நாயகரான சந்திரசேகரன் அல்ல. அவருடைய கருணையினால் எனது கண்டத்தில் சந்திரகலை ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.



இங்கு வாழ்ந்துவரும் உன்னுடைய சகோதரன் சந்திரகண்டன்தான் நான்!” என்று தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார். பிறகு அவர், “அம்பிகையே! இங்கு பெருக்கெடுத்தோடி வந்த வெள்ளப் பிரவாகம் வேறு எதுவுமல்ல; சாட்சாத் சங்கரரின் வடிவமே அது! உன்னைச் சோதிக்கும் பொருட்டே அவர் அம்மாதிரி வடிவில் வந்திருக்கிறார். அவரை என்னால் தடுத்து நிறுத்தவும் முடியுமோ? அப்படிச் செய்வதும் நியாயமாகுமா? அதனால் பரமேஸ்வரனே கதியென்று நீ கருதி, உன்னால் ஆராதனை செய்யப்பட்டு வரும்

இந்தச் சைகதலிங்கத்தையே அடிபணிந்து ஆரத் தழுவிக் கொண்டாயானால், ஈஸ்வரன் அந்த வினாடியே மனமகிழ்ந்து உன் மீது கருணை காட்டுவார். பிரளய ரூபத்தை அவர் மாற்றிக் கொண்டு மாப்பிள்ளைக் கோலத்தில் உன் எதிரே காட்சி தருவார். உன் கையைப்பிடித்து உன்னைக் கல்யாணமும் செய்து கொள்வார்!" என்று கூறிவிட்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

பள்ளி கொண்ட பெருமான் அங்கிருந்து அகன்றவுடன், பிரளய வெள்ளம் பெருக்கெடுத்தோடி வருவதைக் கண்ணுற்ற பார்வதிதேவி நடுநடுங்கினாள். "ஐயோ! இதற்கு நான் என்ன செய்வேன்?" என்று சைகதலிங்கத்தைத் தஞ்சமடைந்தாள். "ஈசனே! சிவனே!



பரமேஸ்வரனே! எனக்கு நீங்கள்தான் கதி!" என்று கல்லும் கரைந்துருகும்படிக் கதறியபடியே உமாதேவி அந்த லிங்கத்தை தன்னிரு கரங்களாலும் தன் மார்போடு சேர்த்து இறுகக் கட்டித் தழுவிக்

கொண்டாள். அப்போது பார்வதிதேவியின் முலைத்தழும்பும், வளைத் தழும்பும் எம்பிரானின் திருமேனியில் அழுந்தின. அதுவரையிலும் அடக்க முடியாத வண்ணம் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த பரமேஸ்வரனின் காமாக்கினியானது, தேவியின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்திலேயே அடங்கி விட்டது. அவர் உமாதேவியைத் தமது அர்த்தாசனத்தில் அமர்த்தி மகிழ்ந்தார். அப்போது பார்வதிதேவியின் திருமேனியில் படிந்திருந்த கருமை நிறம் மாறி, பொன்னிறமாகப் பளபளத்தது. அவருக்கு உடனே புதிதாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசை உண்டாகியது. அங்குள்ள சிவகணங்களும், முனிசிரேஷ்டர்களும், அம்மையப்பருடைய அதியற்புத அழகு லாவண்யத்தைக் கண்டு, அவர்களுடைய திருமணக் கோலத்தைக் கண் குளிரக் கண்டு களிக்கப் பெரிதும் ஆவல் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்தை அறிந்து கொண்ட ஈஸ்வரன் திருமாலை நோக்கி "எங்களிருவருக்கும் விவாகம் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் நீ தான் செய்து தர வேண்டும்!" என்று கூறினார்.

அந்தப் பொறுப்பை சிரமேற் கொண்ட மகாவிஷ்ணு, பிரும்மா முதலான தேவர்களை நோக்கி, "தேவாதி தேவர்களே! இந்தப் பார்வதி கல்யாணத்தை நடத்திக் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள் நீங்கள்தான்!" என்று அவர்கள் மனம் மகிழும்படியான இதமான பல வார்த்தைகளைச் சொன்னார். "நம்முடைய உலகங்களுக்குப் போய் வஸ்திரங்கள், ரத்தினாபரணங்கள், மலர் மாலைகள் முதலானவற்றை யெல்லாம் விரைவில் எடுத்து வாருங்கள்!" என்று அவர் கட்டளையிட்டவுடன் அனைவரும் அதிஉற்சாகத்தோடு குதித்தோடியபடியே அவரவர்கள் உலகங்களுக்குச் சென்று சகல விதமான திரவியங்களையும் எடுத்துக் கொண்டு வந்து சேர்ப்பித்தார்கள். பிறகு நகரங்கள் அனைத்தையும்



அதியற்புதமாக அலங்காரம் செய்வித்து, திருமண மண்டபத்தையும் வெகு அழகாக ஜோடித்தார்கள். ஈசனுக்கும், ஈஸ்வரிக்கும் விவாக மகோத்சவம் நடக்கப் போகிறது என்று சகல திக்குகளிலும் பேரிகைகளை முழக்கினார்கள். வேதாகம விதிப்படி துவஜாரோகணம் முதலானவற்றையெல்லாம் செய்து நிறைவேற்றி, ஒன்பது நாட்கள் முறைப்படி செய்ய வேண்டிய திருவிழாக்களையெல்லாம் நடத்தினார்கள். பத்தாவது தினமாகிய உத்திர தினத்தில், ஏகாம்பர நாதரையும், காமாட்சி தேவியையும், திருமண மேடையில் அமர்த்தி, சகலவிதமான வாத்தியக் கருவிகளும் இன்னிசை முழக்கமிட மகாவிஷ்ணுவும், லட்சுமிதேவியும் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கலானார்கள். லட்சுமிதேவியின் திருக்கரங்களால் ஊற்றிய பாலினால் ஏகாம்பரேஸ்வரரின் திருப்பாதங்களை திருமால் அலம்பினார். பிறகு அப்பாதங்களைப் பட்டு வஸ்திரத்தினால் மெல்ல ஒற்றித் துடைத்தார். அதன் பிறகு ஈஸ்வரனின் திருக்கரத்தின் மீது உமாதேவியின் திருக்கரத்தை வைத்து, மந்திர நீர் வார்த்துத் தத்தம் செய்தார். அப்போது சங்கு, பேரிகை, துந்துபி போன்ற சகலவிதமான தேவலோகத்து இன்னிசைக் கருவிகள் முழங்கின. வேதபாராயணர்கள் வேதங்களை ஓதினார்கள். வானிலிருந்து கற்பக மலர்கள் மழையாகப் பொழிந்த வண்ணம் இருந்தன. பிருமதேவன் கல்யாண ஓமத்தை வளர்த்து எரிய விட்டார். இத்தகைய சுபசகுணங்களுக்கு இடையே காமாட்சிதேவியின் திருக்கழுத்தில் திருமாங்கல்யம் கோர்த்த மஞ்சள் கயிறை ஏகாம்பரநாதர் கட்டி மூன்று முடிச்சுகளும் போட்டார். அப்போது தேவர்கள், யட்சர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், சித்த சாத்தியர்கள், முனிகணங்கள் முதலானோர் ஜய ஜய என்று பெரிதாக முழக்கமிட்டு தம்பதிகளை மனதார வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

அப்போது தேவசிற்பியான விசுவகர்மா, திரிபுரதகனத்தில் ஆரோகணித்த பொன் ரதத்தையும்,

தேவேந்திரன் படிகத்தினால் செய்திருந்த குடையையும், நவரத்தினங்கள் பதித்த மகுடத்தையும் ஏகாம்பரேஸ்வரருக்கு எதிரே கொண்டு வந்து வைத்து அவரைப் பணிந்தான். ''ஈசனே! காமாட்சி தேவியாருடன் தாங்கள் இந்தப் புதுமணக் கோலத்தோடு, இந்த அந்தி நேரத்தில், இந்த ரதத்தில் வீற்றிருந்து, நான் கொடுத்திருக்கும் இந்த மகுடத்தையும் தங்கள் திருமுடியில் தரித்துக் கொண்டு, தேவேந்திரன் குடை பிடிக்கப் பாசுபதர்களாய் விளங்கும் பக்தர்களெல்லாம் கரை காணாத ஆனந்தக் கடலில் மிதக்கும்படியாகத் தாங்கள் ஊர்வலம் வரவேண்டும்!" என்று வேண்டினான். அதன்படியே ஈசனும் தம் தேவியோடு வீதியில் பவனி வந்து, ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளினார். அங்கு குழுமியிருந்த அனைவரையும் அவர் நோக்கி, "பக்த கோடிகளே! யோக பூமியாகிய இந்த ருத்திரசாலையை எமது போக பூமியாக அமைத்துக் கொண்டு ஸ்ரீ காமாட்சி தேவியோடு எச்சமயத்திலும் இந்த ரசாலமூலத்திலேயே வீற்றிருப்போம்! எம்மைக் கண்டு தரிசிக்கும் அனைவருக்கும், அவரவருடைய இஷ்ட சித்திகளைத் தயங்காமல் பூர்த்தி செய்வோம். மேலும், காஞ்சித் தலத்தில் தாண்டவ கற்பமாகிய இந்தக் கற்பத்தில் பவுதி என்கிற மன்வந்தரத்தில், மூன்றாவதான தாமசமனுவும், கிருதயுகமும், விஷ்ணு கூர்மாவதாரமும் சேர்ந்த பவ வருஷத்தில் சித்திரை மாதத்தில், மீனராசியில் சூரியன் இருக்க, சுக்லபட்ச பௌர்ணமி, பூர்வபங்குனி நட்சத்திரத்தில் மூன்றாவது பாதத்தில் எம்முடைய இந்தக் கல்யாண மகோத்சவம் நடைபெற்றிருக்கிறது. இதே போல் ஒவ்வொரு வருஷமும் வரும் பங்குனி உத்தரத்தில் காமாட்சிதேவியின் விவாகத்தையொட்டி, மகா பூஜையும், திவ்விய அலங்காரங்களும், திருவிழாக்களும், அந்தண பூஜையும், தரிசனமும் செய்பவர்கள், தாங்கள் கருதிய சகலவிதமான மனோபீஷ்டங்களையும் அடைந்து, கோடி கன்னிகாதான பலனால் கிடைக்கக் கூடிய பலனையும் அடையப் பெறுவார்கள்!" என்று ஆசி கூறினார்.

மகிமை : காவேரி நதியின் கரையில் திருப்பனங்காடு என்னும் திவ்வியத்தலம் ஒன்று இருக்கிறது. அங்கே சம்பு என்ற ஓர் அந்தணன் வசித்து வந்தான். அவன் யஜுர் வேதத்தை ஓதுபவன். காஞ்சித்தலத்தின் அருமை பெருமைகளையும், பங்குனி உத்திர மகோத்சவத்தின் மகிமைகளையும் கேள்விப்பட்ட அவன், தானும் அங்கு சென்று அவற்றையெல்லாம் கண்குளிரக் கண்டு களிக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டான். உடனே அவன் காஞ்சித் தலத்திற்குச் சென்று, ஈசனாரின் விவாக மகோத்சவத்தையும் பார்த்து ரசித்தான். "பரமேஸ்வரனே! இந்த மகோத்ஸவத்தை வருஷம் தவறாமல் நான் பார்த்து மகிழ்ச்சியடையும் படியாகத் தாங்கள் அருள் புரிய வேண்டும்!" ன்று அவன் இறைவனிடம் வேண்டிக் கொண்டான். பிறகு அவன் தன் நாட்டிற்குச் சென்று, அங்கேயே தங்கி வாழ்ந்து வந்தான். கடைசியில் அவன் மரணமடைந்ததும், சிவகணங்கள் அவனுக்குத் தங்கள் உலகத்திலிருந்து தெய்வ விமானத்தைக் கொண்டு வந்தன. அவன் அதில் ஏறி, கைலாயத்தை அடைந்து பேரின்ப வாழ்க்கையைப் பெற்றான். அந்தப் பிராமணனின் வம்சத்தில் ஆயிரம் தலைமுறைகளில் தோன்றியவர்களெல்லாம் ஏகாம்பர நாதருடைய விவாக மகோத்சவத்தைத் தங்கள் குடும்பத்தாருடன் சென்று தரிசித்து வரும் பாக்கியத்தைப் பெற்றார்கள். முடிவில் அவர்கள் அனைவரும் சிவகணங்கள் கொண்டு வந்த விமானத்தில் ஏறி, சிவனுலகம் போய்ச் சேர்ந்தார்கள்.

9. சர்வதீர்த்தப் பிரபாவம்

நந்தி சைலம், க்ஷீர நதி, திருப்பாற் கடல் என்னும் மூன்று நதிகளையும் ஒருங்கே கொண்டதுதான் சர்வதீர்த்தமாகும். அதனால் அதற்குக் கோபுரம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. வராகி, அம்பிகை

முதலான சக்தி பேதங்களுடன் இருப்பது பட்சபுரியென்றும், தேவமூலமுடையது க்ஷேத்ரப் பிரஸ்தம் என்றும், சூத சூத முதலிய விருஷ மூலத்தையுடையது குண்டிகம் என்னும், சூரிய புஷ்கரணியை உடையது க்ஷீரசரித்சமுத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.

காஞ்சி நகரத்திலுள்ள ருத்திரசாலையில் வீற்றிருக்கும் ஏகாம்பரேஸ்வரருடைய ஆலயம் நைருதியில் உள்ளது. இதில் முன் பிரளய பந்தினியின் கபாலத்தில் அடக்கம் செய்யப்பட்ட கம்பா நதியானது, பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தோடிப் பாத்திரத்தில் நீர் விழுவது போல் விழுந்து பூமிக்குள் அந்தர்வாகினியாக விளங்கி வருவதனாலும், அப்பரமேஸ்வரரின் சடாமகுடத்திலுள்ள கங்கையில் இருந்து ஆயிரம் முகங்களாக வெளித்தோன்றிய வெள்ளப் பிரவாகத்தையும் தன்னோடு கொண்டிருப்பதால் இது சர்வதீர்த்தம் என்ற பெயரைப் பெற்றது. உமாதேவியின் அரவணைப்பிலிருந்து வெளித்தோன்றிய ஏகாம்பரநாதர், எட்டு வயது சிறுமியாகக் காட்சியளிக்கும் காமாட்சிதேவியைப் பார்த்து, "தேவி! இந்தச் சர்வ தீர்த்தத்தில் அந்தர்வாசினியாக இருக்கும் கம்பா நதியின் பெருமையை எப்படிப் புகழ்ந்துரைப்பேன்? உன்னைப் பிரிந்து அநேக நாட்கள் ஆகிவிட்டதால், நான் அடைந்த பெருந்துயரம் கொஞ்சநஞ்சமல்ல! அதைப் போலவே பிரளய வெள்ளத்தைப் பார்த்து நீ அதிகத் துயரம் அடைந்திருப்பாய் என்பதும் எனக்குத் தெரியும். நம்மிருவருடைய துயரங்களையும் நீக்கிவிடும் பொருட்டு, உன்னுடைய முலைச் சுவட்டையும், வளைத் தழும்பையும், நான் என்றென்றும் பெற்றிருக்கும் படியான பாக்கியத்தையும், பேரானந்தத்தையும் உன் ஆலிங்கனத்தின் மூலமாக எனக்கு வழங்கினாய். உனக்கு என்னுடைய அர்ச்சனையும், ஆலிங்கனமும் என்றென்றும் கிட்டும்படியாக ஆசி கூறுகிறேன்!" என்றார். பார்வதி தேவி புன்சிரிப்போடு, தம் நாதரை

நோக்கினாள். சர்வ தீர்த்தத்தின் மகிமையை அறிந்து கொண்ட அவள், அதில் நீராடி மகிழ விரும்பினாள். அதற்காக அத்தீர்த்தத்தைச் சுற்றிலும் படிகள், மண்டபங்கள் ஆகியவைகளைக் கட்டச் செய்து, அதில் நீராடலானாள். அவள் நீராடி விட்டு அதிலிருந்து எழுந்திருக்கும்போது கட்டிளம் பெண்ணாகவும், அதியற்புத அழகுக் கவர்ச்சியோடும் காட்சியளித்தாள்.

தமது உருவமாற்றத்தைக் கண்டதும் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்த உமாதேவி, அந்தத் தீர்த்தக் கரையில் நின்ற வண்ணமே, ரிக், யஜுர், சாம வேத அந்தணர்களுக்குக் கோதானம், இரணிய தானங்களும் செய்து, பகல் இரவு இருக்கும் வரையிலும், அவர்கள் நிரந்தரமாக வாழ்க்கை நடத்தி வருவதற்கு வேண்டிய பூதானமும் செய்து மகிழ்ந்தாள். பிறகு அந்த இடத்தில் இருந்து புறப்பட்டுக் காமகோட்டத்தை அடைந்தாள். அங்கே தர்மசத்திரங்களை உண்டாக்கி, மகாதிரிபுர சுந்தரியான மகாசக்தியை வணங்கி, மீண்டும் தர்மசாலைக்குத் திரும்பிச் சென்றாள். அங்கே சகலவிதமான தருமங்களையும் செய்து, அத்தர்மம் எந்தக் காலத்திலும் இடைவிடாமல் நடைபெற்று வரவேண்டும் என்னும் அவாவுடன் காமதேனுவையும், கற்பக விருட்சத்தையும், சிந்தாமணியையும் பிரதிஷ்டை செய்தாள். அவைகளின் உதவியினால், முப்பத்திரண்டு வகைத் தருமங்களையும் யுகங்கள் தோறும் அழிவில்லாமல் நடத்தி வருவதற்காக விநாயகரையே அரசராக அமர்த்திப் பட்டங் கட்டினாள். பிறகு காஞ்சி காமகோடி பீடத்தில் வசித்து வரும் திரிபுரசுந்தரியை வணங்கி விடைபெற்று கச்சபேஸ்வரமூர்த்தியை அடைந்தாள். அவரை வணங்கி பிரதட்சிணம் வந்து நமஸ்கரித்து எழுந்து அவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சர்வ தீர்த்தக் கரையை நோக்கிச் சென்றாள். அத்தீர்த்தக் கரையை மூன்று தடவைகள் சுற்றி வலம் வந்து, "புண்ணிய நதிகள் தோறும் சென்று நீராடியவர்களுக்கு என்ன பலன் உண்டாகுமோ அந்தப் பலன் இந்தச் சர்வ

தீர்த்தத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே கிடைத்து விடும்!" என்று வரமளித்தாள். பிறகு காமாட்சிதேவி தமது பதியிடம் சென்று அவரை வணங்கி, அவரது வாம பாகத்தைத் தமது இருக்கையாக்கிக் கொண்டு என்றும் நித்ய கல்யாணியாக விளங்கினாள். தேவியின் வரத்திற்கு ஏற்ப, காஞ்சி நகருக்குச் செல்லும் யாத்ரீகர்கள் அங்குள்ள சர்வதீர்த்தத்தைக் கண்டும், அதில் நீராடியும் அநேக பலன்களைப் பெற்று வருகிறார்கள்.

மகிமை : தாம்பிரபரணி நதிக்கரையில் சோமன் என்கிற ஒரு பிராமணன் வசித்து வந்தான். அவன் அகஸ்திய கோத்திரத்தில் பிறந்தவன். சாம வேதத்தைக் கடைப்பிடிப்பவன். அவன் சண்டாள குலத்தில் பிறந்த அதியற்புதமான அழகு வாய்ந்த மங்கையொருத்தியைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டான். அவளோடு இன்பமாகக் கூடி மகிழ்ந்து ஒரு புத்திரனையும் பெற்றெடுத்தான். சண்டாளப் பெண்ணை மணந்து கொண்ட காரணத்தினால், அவன் தன் முன்னோர்களுக்குச் செய்து வந்த திவசங்கள் அனைத்தும் கிருமி உருவமாகப் போய்விட்டன. அதனால் சொர்க்கத்திலுள்ள பிதுர்தேவதைகள் நரகத்தில் வந்து வீழ்ந்தார்கள். அதையறிந்து கொண்ட பிராமணன் அளவிறந்த மனத் துயரமடைந்தான். அவன் தீர்த்த யாத்திரைக்குக் கிளம்பி, ஒவ்வொரு தீர்த்தங்களிலும் நீராடிக் கொண்டே சென்றான். கடைசியில் அவன் ருத்திரசாலையை அடைந்து, அங்குள்ள சர்வ தீர்த்தத்தில் நீராடியவுடனேயே, அத்தீர்த்தத்தின் புண்ணிய மகிமையால் அவனுடைய பிதுர்க்கள் அனைவரும் கொடூரமான நரகத்திலிருந்து விடுபட்டு சுவர்க்கத்தை அடைந்தார்கள். அதன்பிறகு அவன் திவசங்கள் செய்தபோது, பிதுருக்கள் அவைகளைத் திருப்தியாக உண்டு மகிழ்ந்தார்கள்.

10. காமகோட்டப் பிரபாவம்

வாயு, ஆக்னேய திக்குகளில் திருஉருவங் கொண்டு காட்சியளிக்கும் சிவ விஷ்ணு வடிவம், தாமேயாகிய பராசக்திக்கு இருப்பிடமாய், சகல ஜீவன்களுக்கும், சகல காமங்களையும் விரைவில் தந்தருளும் வல்லமை பெற்று விளங்குவதால், இந்தச் க்ஷேத்திரம் காம கோட்டம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. இதை வேறு பல பெயர்களிலும் அழைப்பார்கள். அவைகள்: ஸ்ரீபுரம், பத்மநாமகம், காமக் கோட்டம், காமகோடி, கல்யாணபுரி, ஜீவன் முக்தி க்ஷேத்திரம்.

எல்லை : ஸ்வேதப் பெருமாளுக்கு கிழக்கில் உள்ள க்ஷேத்ராங்கி என்னும் துர்க்காலயம் இதன் கிழக்கு எல்லையாகும். அதற்கு தெற்கில் உள்ள சிம்ஹாலயம் இதன் தெற்கு எல்லை. அதற்கு மேற்கில் உள்ள காயாரோகணர் ஆலயம் இதன் மேற்கு எல்லை. அதற்கு வடக்கில் உள்ள ஸ்வேதப் பெருமாள் ஆலயம் இதன் வடக்கு எல்லையாகும்.

இந்த நான்கு எல்லைகளுக்கும் உள்பட்ட பிரதேசம் தான் காமராஜ பீடமாகும். இங்கே கணேசர் ஆலயம், முருகர் ஆலயம், துர்க்கை ஆலயம், விஷ்ணு ஆலயம், சிவன்ஆலயம், தீர்த்தம் ஆகியவைகள் அடங்கியிருக்கின்றன.

க்ஷேத்திராங்கி என்னும் துர்க்கைக்கு தெற்கில் தேவதச்சனால் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்ட சங்குபாணி விநாயகர் ஆலயம். அதற்கு மேற்கில் நான்முகனுக்குக் குருவாக இருந்து தாரக மந்திரத்தை உபதேசித்த குமரகோட்டம் என்னும் முருகப் பெருமானின் ஆலயம். அதற்கு தெற்கில் கிராம தேவியான உக்கிரவாகினி என்னும் மகாதுர்க்கை ஆலயம். அதற்கு வடக்கில் பரமேஸ்வரனை வழிபட்டுத் தனுர் வித்தையில் பாண்டித்தியம் பெற்ற தாந்தோனி

ஆலயம். அதற்கு வடக்கில் பலியிடுதல் போன்ற பூஜை வழிபாடுகளால் தேவர்களின் இடையூறுகளைப் போக்கிய பஞ்ச சந்திரிகை ஆலயம். அதற்கு வாயுவில் நீலை என்னும் பெண்மணியின் கர்ப்பத்தைப் பாதுகாத்து, அவளால் வழிபட்டு வந்த தீர்த்தமாலினி ஆலயம். அதற்கு உத்தரத்தில் கோரக்கசித்தர் என்பவருக்குச் சிறப்பான செல்வபோகங்களைத் தந்தருளிய ஹேமாசனா என்னும் துர்க்கை ஆலயம். அதற்கு தெற்கில் திரிசிரனை வதம் செய்து காம பீடத்தைக் காத்த பீடவர்த்தினி ஆலயம். அதற்கு வடக்கில் லட்சுமிதேவியினால் வணங்கப்பட்டு மன்மதனை மகனாகப் பெற வரமளித்த தூர்வாவர்ணப் பெருமாள் ஆலயம். அதற்கு ஆக்னேயத்தில் ஆதிசேஷனால் ஆராதிக்கப்பட்டு, உலகைத் தாங்கும் சக்தியைத் தந்தருளிய திரிவிக்கிரமப் பெருமாள் ஆலயம் அதற்கு வாயுதிக்கில் மதுவர்ஷத்தைப் பொழிந்த மதுப் பெருமாள் ஆலயம். அதற்கு ஈசானத்தில் மகாகாளரை அர்ச்சித்து அநேக புத்திரர்களைப் பெற்ற காளாங்கப் பெருமாள் ஆலயம்.

ஆதிசேஷன் முருகப்பெருமான் புத்திரனாக வர வேண்டுமென்று வழிபட்டு வந்த மகாகாளர் ஆலயம். அதற்கு ஈசானியத்தில் ஜகதாத்மா என்பவருக்குக் கவி பாடும் வன்மையைத் தந்த பட்டாரகேஸ்வரர் ஆலயம். அதற்கு தெற்கில் முன் பிரளயத்தில் பன்னிரு சூரியர்களால் நீலவர்ணமாகிய படங்களை உடைய சர்ப்பங்களுக்கு முக்தியைக் கொடுத்த பணாதரேசர் ஆலயம். அதற்கு வடக்கில் கத்ரு பிள்ளைகளான சர்ப்பங்களை கருடபயத்திலிருந்தும் காத்தருளிய பணீசர் ஆலயம். அதற்கு தெற்கில் பிருமா, சரஸ்வதி, சனற்குமாரர், சூரியன், சாஸ்தா, சண்டிகை, சுப்பிரமணியர், கச்சபர் ஆகியவர்களால் வணங்கி வழிபட்டதும், தேவர்களில் அமிர்த காரணமர்ய் கச்சபத்திற்குப் பலத்தை அளித்ததும், சுவயம்புவாயும், மகாலிங்கமாயும், ஆதியந்தமற்றதுமான கச்சபேசர் ஆலயம்.

அதற்கு வாயுதிக்கில் ஏகாம்பரநாதருக்கு மனைவியான தபோவேஷத்தோடு கூடிய காமாட்சிதேவி ஆலயம். அந்த ஆலயத்திற்குள் நைருதியில் அன்னபூரணி வடிவம் கொண்டு காசியில் பஞ்சத்தைப் போக்கிய அன்னபூரணி ஆலயம். அதற்கு வாயுவில் தேவியின் தன்யபானம் செய்து சுப்பிரமணியரைப் போல் ஆன சாஸ்தா ஆலயம். அதற்கு ஈசானத்தில் அஞ்சன காமாட்சியும், விருத்த ரூபியான லட்சுமியும், அதற்குக் கிழக்கில் புத்திரப் பேறு வேண்டிய வைவஸ்வதமநுவுக்கு மூன்று தடவைகள் வலம் வந்து புத்திர பாக்கியத்தை அடைவாய் என்று காமாட்சிதேவியினால் திருவாய் மலரப் பெற்ற சந்தானம் என்னும் பெயரையுடைய ஸ்தம்பம் ஒன்றும் இருக்கின்றன. இந்தச் சந்தான ஸ்தம்பத்தை காமாட்சிதேவி உபதேசித்தபடியே, வைவஸ்வத மநு மூன்று முறைகள் சுற்றி வலம் வந்து குழந்தைப்பேற்றைப் பெற்று அந்த ஸ்தம்பத்தின் மூலமாய் பிலத்துவாரத்தின் வழியே அயோத்தி நகரை அடைந்தான். அதற்கு மேற்கில் சிவபெருமானின் முகத்திலிருந்து தோன்றியதும், இரண்டு பூதங்களுக்கு முக்தியைக் கொடுத்ததுமாகிய பஞ்ச தீர்த்தம். அதற்கு தெற்கில் யயாதிக்குச் சொர்க்கலோகத்தைக் கொடுத்த காயாரோகண தீர்த்தம். அதற்கு வடக்கில் சனற்குமாரர் சாபம் போக்கிய சித்தி தீர்த்தம். அதற்கு வடக்கில் கார்த்தவீரியனுக்கு நிஜஉருவம் அளித்த சக்கரதீர்த்தம்.

தீர்த்த பலன் : பஞ்சதீர்த்தத்தில் சுக்கிரவாரத்தில் நீராடியவர்களுக்குக் கோதாவரியில் நீராடிய பலனும், காயாரோகண தீர்த்தத்தில் குருவாரத்தில் நீராடியவர்களுக்குச் சிந்து நதியில் நீராடிய பலனும், சித்தி தீர்த்தத்தில் ஆதிவாரத்தில் நீராடியவர்களுக்கு நர்மதை நதியில் நீராடிய பலனும், சக்கர தீர்த்தத்தில் தேவி ஜன்ம நட்சத்திரத்தில் நீராடியவர்களுக்குக் கண்டகி நதியில் நீராடிய பலனும் கிடைக்கும்.

மகிமை : கங்கை நதிக்கரையில் குண்டிலினி என்னும் ஒரு நகரம் இருக்கிறது. அங்கே ஸ்ரீவத்ச கோத்திரத்தில் பிறந்த ஜகந்நாதன் என்ற ஓர் அந்தணன் வசித்து வந்தான். அவன் ருக்வேதத்தை ஓதுபவன். அவன் பிராமணருக்குரிய வேதம் முதலிய நன்னெறிகளைக் கைவிட்டு விட்டு, தீயவழிகளிலேயே மனதைச் செலுத்தி ஈடுபட்டு வரலானான். குதிரை, மீன் போன்றவைகளைக் கொன்று வியாபாரம் நடத்தி, அவைகளின் மாமிசங்களைத் தானும் உண்டு வாழ்க்கை நடத்தி வந்தான். அப்போது யாத்திரை மார்க்கமாகக் காஞ்சித்தலத்திலிருந்து வந்திருந்த ஓர் அந்தணனுக்கு அவன் சிறிதளவு பொருள் கொடுத்து உதவி செய்தான்.

அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு ஜகந்நாதன் விஷக்கடியால் இறந்து போனான். அவனுடைய உயிரை யமதூதர்கள் அளவு கடந்த கோபத்தோடு பாசத்தால் கட்டி அக்கினியால் ஆகிய தண்டங்களால் மோதி அடித்து மண்டையைப் பிளந்தார்கள். அக்கினி ஜ்வாலை வீசும் வழியாக அவனை அதிதுரிதமாக யமனிடம் கொண்டு போனபோது, காமாட்சிதேவியின் உத்தரவின்படி அவருடைய கணங்கள் விரைந்து சென்று யமதூதர்களைக் கொன்று போட்டார்கள். பிறகு ஜகந்நாதனை, விமானத்தில் ஏற்றியமர்த்தி, தேவியின் முன்னிலையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். இந்த விஷயங்களை அறிந்த யமன் திடுக்கிட்டான். அவன் தேவியினிடத்தில் ஓடோடியும் சென்று வணங்கி, "அம்மா! நரகத்தில் விழுந்து வேதனையில் உழல வேண்டிய இந்தப் பெரும்பாபியை என் வசம் ஒப்படைப்பதுதான் நியாயமாகும்!" என்று வேண்டினான். அதற்குத் தேவி, "என்னுடைய தலத்தில் இருந்து யாத்திரை மார்க்கமாகப் போன ஒரு வேதியனுக்கு இவன் சிறிதளவு பொருள் கொடுத்து உதவினான். அது எனக்குத் திருப்தியாகிவிட்டது. அதனால் இவன் செய்திருந்த பாவங்கள் அனைத்தில்

இருந்தும் இவன் விடுபட்டு விட்டான். இனி இவன் என் உலகத்தைச் சேர்ந்தவனே தவிர, உனக்கும் இவனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை!" என்று கூறினாள். அதன்பிறகு யமதர்மராஜன் தன் பிழையைப் பொருத்தருளும்படியாகத் தேவியிடம் பலமுறையும் வேண்டி வணங்கிவிட்டுத் தன் உலகம் போய்ச் சேர்ந்தான்.

11. பிலாகாச பிரபாவம்

பிலாகாசமானது இஷ்ட சித்தி தீர்க்கத்திற்கு மூன்று அம்சம் ஈசானத்தில் ஸ்ரீ காமாட்சிதேவி வீற்றிருக்கும் ஆலயத்தில் உள்ளது.

இந்த மகாபிலம் எத்தனை விஸ்தீரணம் உள்ளதோ, அவ்வளவு விஸ்திரணமாகக் காயத்ரி உருவமான மண்டபம் அதை மறைத்து, அதற்கு மறைவிடமாக இருக்கிறது.

அந்த மண்டபத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் பிலமானது சாத பிந்து யுக்தமான பரமகாச வடிவமாய் இருப்பதால் (நாதபிந்து சம்ஞ்சிதம்பரமம் வியோமம்) என்றும், அந்தப் பரமகாசம் பிரமத்துக்குச் சரீரமாக இருப்பதால் (ஆகாச சரீரம் பிரம்மா) என்றும், அந்த பிரும்ம வடிவமாகிய பரமசிவத்துக்கும் அதுவே சரீரமாக இருப்பதால் (சம்புசரீரம்) என்றும், நிஷ்கள சகல சொரூபமாய் இருக்கிற பரசிவத் தியானத்தால் அடையக்கூடிய மோட்சத்தைப் பிரத்தியட்சமாகக் கொடுப்பதால் (பிரத்யட்சம் மோட்சதம்பரம்) என்றும் சொல்லப்படுகிறது. ஞானிகளுக்கு சித்சொரூபத்தை விளக்குவதால் (தேவசிந்நப) என்றும், உலகத்துக்குக் காமவிலாசமாக இருப்பதால் (ஜகத்காமகளாகாரம்) என்றும், பூமிக்கு நாடாஸ்தானமாக இருப்பதால், (குண்டலினீபதம்)

என்றும், பூமிக்கு மர்ம ஸ்தானமாக இருப்பதால் (ஆதி பௌதிக மர்மாங்கம்) என்றும், சர்வ காமங்களும் இருப்பதற்கு ஒரு நகரமாக இருப்பதால், (காமநகரம்) என்றும் கூறப்படுகிறது. எல்லா உலகத்தினராலும் கொண்டாடப்படும் பிரகாசத்தை உடையதாய் இருப்பதால் (திவ்யம்) என்றும், பாவங்களைப் போக்கடிப்பதாக இருப்பதால் (அகக்னம்) என்றும், சர்வ சித்தியையும் அளிக்கக் கூடிய தன்மை படைத்ததாக இருப்பதால் (சர்வ சித்திதம்) என்றும், இந்திரிய காமங்களை அடக்குவதால் (தபஸ்தானம்) என்றும், ஒருவராலும் அறிய முடியாத பரமரகசியமாக இருப்பதால் (சூட்சம பிலம்) என்றும், ஸ்ரீபுரம், திரிமூர்த்திகள், ஈசன் சம்பந்தமான உருவங்கள், திக்குகள், உலகங்கள், மேரு, கோர வடிவமாகிய பூமி ஆகிய இவைகளுக்கு ஒன்பது துளையோடு கூடிய மார்க்கமாக இருப்பதால் நவத்துவாரசிய மார்க்கம் என்றும், பூமிக்குக் காரணமாகிய யோனி ஸ்தனமாக இருப்பதால் (பூயோனி) என்றும் வழங்கப்படுகிறது. இஷ்டகாமத்தை உத்தேசித்து யார்யார் எந்தெந்த விதமாகத் தருமங்களை ஒரு தடவை செய்த போதிலும், அத்தருமங்களை நல்ல தருமங்களாகச் செய்து, அவர்களுக்கு அத்தருமம் ஒன்றுக்கு ஒரு பலனைக் கொடுக்காமல், கோடிக்கணக்கான பலன்களாகக் கொடுப்பதாக இருப்பதாலும், குபேரனைப் போல ஐஸ்வரியம் கிடைக்கவேண்டும் என்று செல்வத்தை விரும்புபவர்களுக்கு அச்செல்வத்தைக் கோடிக் கணக்கில் அளிப்பதாக இருப்பதாலும், மோட்சமானது காமத்தின் முடிவில் இருப்பதால், அந்த மோட்சத்தின் இன்பத்தைக் கைவிட்டுக் காமத்தையே பெரிதென விரும்புவோர்க்கு, அந்தக் காமத்தைக் கோடி கோடியாகக் கொடுப்பதாக இருப்பதாலும், இம்மாதிரியாகவே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந்த நான்கையும், தனித்தனியே அடைய விரும்புவோருக்கு அதன்படியே தனித்தனியாகவும், அறம் பொருள் இன்பம் ஆகிய இவை மூன்றையும்

விரும்பாமல் மோட்சத்தை மாத்திரம் விரும்பும் மோட்சகாமிகளுக்கு 'அந்த மோட்சத்தோடு ஏனைய மூன்றையும், தருமம், அர்த்தம், காமம் என்கிற மூன்றை மாத்திரம் விரும்புவோருக்கு அம்மூன்றையும், அவற்றோடு மோட்ச விருப்பத்தையும் கொடுக்கக் கூடியதாக இருப்பதாலும், பரமேஸ்வரனின் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனைப் போலக் காமாட்சிதேவி தன்னுடைய புருவத்திலிருந்து லீலாமாத்திரமாய்க் கோடி காமர்களை உண்டாக்கியதாலும் **காமகோடி** என்றும் வழங்கப்படுகிறது. வீட்டை விரும்புவோருக்கு அறம், பொருள், இன்பங்களோடு அவர்கள் விரும்பிய வீட்டையும், அறம், பொருள், இன்பங்களை விரும்புவோருக்கு அவற்றினோடு அவர்கள் விரும்பாத வீட்டையும் கொடுப்பதற்கு அந்நான்கும், அந்தப் பிலத்தை இடமாகக் கொண்டிருப்பதால் **காமகோஷ்டம்** என்றும் கூறப்படுகிறது.

முன்பொரு சமயம் பரமேஸ்வரர் தாருகா வனத்திற்குச் சென்று, அங்கு வாழ்ந்து வரும் முனிபத்தினிகளை பெரும் சோதனைக்கு ஆளாக்கினார். அதையறிந்ததும், அப்பத்தினிகளின் கணவர்களாகிய முனிவர்கள் அடங்காக் கோபமடைந்தார்கள். சிவத் துவேஷிகளாய் மாறும் அளவுக்கு அவர்களின் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. சர்வமும் சிவமயமாக விளங்கும் சர்வேஸ்வரனை பலவிதமாகவும் இகழ்ந்து நிந்தித்துக் கேலிசெய்தார்கள். ஆதியும் அந்தமும் இல்லாத பரமனை அழித்துவிடவும் அவர்கள் தலைப்பட்டு விட்டார்கள். தங்கள் காரியத்திற்குத் துணையாகப் புலி, பாம்பு, மான், கொக்கு, முயல்கள், உடுக்கை, அக்கினி முதலானவைகளை ஏவலாம் என்று அவர்கள் கருதினாலும், அவைகளெல்லாம் எம்பிரானுக்கு அணிகலன்களாகவும், ஆடையாபரணங்களாகவும் அமைந்து விட்டதைக் கண்டு மனம் நொந்தார்கள். ஆனாலும் அதற்காக அம்முனிவர்கள் மனம் தளர்ந்து

விடவில்லை. இந்த ஈசனைக் காண்பவர் எல்லாம் கைகொட்டிச் சிரிக்கும்படிச் செய்ய வேண்டும் என்று கருதி, அளவுகடந்த மூர்க்காவேச வெறியுடன், "சர்வேஸ்வரனே! நீ அலியாய் மாறக் கடவாயாக!" என்று சபித்தார்கள். ஆனால் எம்பிரானை அந்தச் சாபம் திண்டத்தான் முடியுமா? ஈசனுக்கு அம்முனிவர்களுடைய செய்கை சிரிப்பைத்தான் வரவழைத்தது. அநாதியாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சர்வேஸ்வரன், தம்முடைய மகிமையை அவர்கள் உணர்ந்து கொள்ளாமல், கர்மவாதிகளாய் கருமத்தையே கடவுளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டார். அவர்களுடைய முட்டாள் தனமான அறிவை வெளிப்படுத்த வேண்டும் என்று கருதியவராய், அவர்கள் பார்த்து வெட்கமடையும்படியாகச் சிறிது நேரம் ஆனந்தமாகக் கூத்தாடினார். பிறகு கைலையங்கிரியை அடைந்து, உமாதேவியாரோடு அமர்ந்திருந்தார்.

இது இப்படியிருக்க பந்தகன் என்னும் ஓர் அசுரன் இருந்தான். அவன் நான்முகனின் அனுக்கிரகத்தினால் இந்த உலகம் இருக்குமளவுக்கும் இறவாமல் உயிர் வாழ்ந்து வரும் வரத்தைப் பெற்றிருந்தான். அந்தத் திமிரில் அவன் இந்திராதி தேவர்களையும் வென்று, சித்தர், முனிவர் முதலானோரை எள்ளளவும் மதிக்காமல், சகல உலகங்களையும் ஜெயித்துத் தன்வசமாக்கிக் கொண்டான். கடைசியில் அவன் கைலாசத்தினுள்ளும் பிரவேசிக்கத் துணிந்து விட்டான். ஆனால் எம்பெருமானோ அக்கொடியவனுடைய கண் பார்வைக்குப் புலப்படாத வண்ணம் தம்முடைய சிவகணங்களோடு வீற்றிருந்தார். அதனால் பந்தகாசுரன் தன் படைவீரர்களை ஏவி, அங்கிருந்த சகல உயிர்களையும் சிறைப்பிடித்துக் கொண்டு தன்னுலகம் வந்து சேர்ந்தான்.



பந்தகாசுரனுடைய அக்கிரமத்தைப் பொறுக்க முடியாத தேவர்கள் அனைவரும் கைலையங்கிரிக்கு வடக்கு திசையிலுள்ள கோமுகம் என்ற புண்ய க்ஷேத்திரத்தில் இருக்கும் பிலத்தினுள் சென்றார்கள். அங்கிருந்து காஞ்சித் தலத்தில் காமகோடியாகிய பிலத்தின் வழியாக வெளியே வந்தார்கள். அந்தப் பிலமூலத்தில் காமகோடீஸ்வரியாகவும், மகாதேவியாகவும், திரிபுரசுந்தரியாகவும் அமர்ந்திருக்கும் தேவியைக் கண்குளிரக் கண்டு தரிசித்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தார்கள். தாங்கள் விரும்பிய வரங்களையெல்லாம் அடைவதற்காக அவளை வணங்கி நின்றபோது, அப்பிலத்தின் அருமை பெருமையை அவர்களுக்கு அறிவிக்க எண்ணினார் பரமேஸ்வரன். அவர் அந்தப் பிலத்துவாரத்திலிருந்து வெளியே வந்து, கண்ணைக் கூசும்படியான பிரகாசமான தோற்றத்தோடும், திவ்ய சொரூபத்தோடும் காட்சி தந்தார். தேவர்களை நோக்கி அவர், "ஓ, தேவர்களே! பசு உருவமாக விளங்கும்

பூமிக்குக் கோமுகத்தலம் முகம் என்றும், ஸ்ரீபுரம் சிரம் என்றும், இமாலயம் கண்டம் என்றும், கேதாரம் உதரம் என்றும், காசி புருஷ்டம் என்றும், கமலாலயம் அதற்கு மூலம் என்றும், காஞ்சி இடை என்றும், இந்தக் காமகோடிபீடம் அதற்கு நடு என்றும், அதிலுள்ள பிலம் துவாரம் என்றும்" சொல்லிக் கொண்டு வரும்போதே, தேவர்கள் அனைவரும் ஈசனை அடிபணிந்து வணங்கி, "அநாதியான மூர்த்தியே! தங்களுடைய திருமேனி எச்சமயத்திலும் பார்த்திராத வண்ணம் இப்போது அளவுகடந்த திவ்விய காந்தியோடு பிரகாசிக்கிறதே, அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள்.

அதற்குச் சிவபிரான், "தேவர்களே! நான் பூமிதேவிக்கு முகமாகிய கோமுகம் என்னும் தலத்தின் வழியாக உட்புகுந்து, இந்தக் குண்டலினி மார்க்கமாக இந்தக் காமகோடி பிலத்துவாரத்தின் வழியாக வெளியே வந்ததினால் தான் இப்படிப்பட்ட திவ்வியமான பிரகாசத்தோடு காட்சியளிக்கிறேன். பொதுவாக பூலோகத்தில் உள்ளவர்கள் சுவர்ணத்தினால் ஒரு பசுவைப் போன்ற உருவத்தைச் செய்து, அதன் கர்ப்பத்தில் தங்கியிருந்து, பிறகு வெளியே வருவார்களானால், அவர்கள் பிரும்மதேஜஸீடன் விளங்குவார்கள். அதற்கே இத்தனை மகிமை என்றால், சிற்சக்தி வடிவமாகிய இந்தக் காமகோடி பிலத்தின் வழியாக வெளிவந்த நான் இத்தகைய திவ்வியப் பிரகாசத்தோடு தோற்றமளிப்பது ஆச்சரியமே அல்ல. இந்தப் பிலத்தின் அருமை பெருமைகளை நான் எப்படியென்று கூறி விளக்குவது? தேவர்களே, இந்தக் காமகோடி பீடத்தை நாள்தோறுமாவது, ஒரு வார காலமாவது, பதினைந்து நாட்களாவது, ஒரு மாதமாவது எவனொருவன் சுற்றி வலம் வருகிறானோ அவன் மகாகேடு கெட்டவனாக இருந்தாலும், முக்தியையே அடைவான். வலம் வரும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு பசுகர்ப்பத்திலிருந்து பிறந்த பலனைப் பெறுவான். நாள் தவறாமல் வலம்



வருபவன் பெறக்கூடிய பலன்களை இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்லவும் முடியுமோ? ஆனால் காமகோடி பீடத்தைப் பிரதட்சிணம் செய்யாதவன் தேவனாகவே இருந்தாலும், அவன் கழுதைக்குச் சமமாகவே கருதப்படுவான்!'' என்று அவற்றின் பெருமைகளை எடுத்துச் சொன்னார். பிறகு அவர், "நீங்களும் இந்தக் காமகோடி பிலத்தைப் பிரதட்சிணம் செய்வீர்களானால் பந்தகாசுரனால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களிலிருந்தும் விடுதலை பெறுவீர்கள். அதுவரையிலும் நீங்கள் அனைவரும் இந்தப் பிலத்தின் அருகாமையில் உள்ள சண்பக மரத்தில் கிளி உருவங்கொண்டு வாழ்ந்து வருவீர்களாக!" என்று வரம் தந்தருளிச் சென்றார். அதன்பிறகு தேவர்கள் அனைவரும் எம்பெருமானின் ஆசிப்படியே அந்தக் காமகோடி பிலத்தை நாள் தவறாமல் வலம் வந்து, கிளி ரூபம் அடைந்து சண்பக மரத்தில் பதினாயிரம் வருஷம் வாழ்ந்திருந்தார்கள்.

மகிமை : நர்மதை நதிக்கரையில் பலபத்திரன் என்னும் ஒரு பிராமணன் வசித்து வந்தான். அவனுடைய மனைவியின் பெயர் வஜ்ஜிரேஸ்வரி. அவன் தன்னுடைய மனைவியை வெறுத்து

ஒதுக்கிவிட்டுப் பிற ஸ்திரீகளிடம் மனதைப் பறிகொடுத்து, அவர்களுக்காகத் தன்னிடம் இருந்த செல்வங்களையெல்லாம் மனம்போனபடி செலவழித்து வந்தான். அவன் கிழப் பருவத்தை அடைந்தபோது, அவனுடைய உடலைக் கருங்குஷ்டம் பீடித்துக் கொண்டது. அவனுடைய ஆண்குறியிலும், பீஜத்திலும் ரத்தக்கசிவு ஏற்பட்டு நாளடைவில் ஆண்குறி பலவீனமடைந்து ரத்தம் பெருக்கெடுத்து, அவனை மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கியது. அவனைப் பார்த்த பெரியோர்களெல்லாம் சகலவிதமான மருந்து மூலிகைகளையும் கொடுத்து, அந்நோயிலிருந்து அவனைக் குணப்படுத்த முயன்றார்கள். ஆனால் என்னதான் முயன்றும் அவனுடைய நோயை யாராலுமே குணப்படுத்த முடியவில்லை. அதைக் கண்ட அப்பெரியோர்கள் இது தீவினைகளினால் ஏற்பட்ட வியாதியாகையால், மருந்து மாத்திரைகளின் மூலம் இதைக் குணப்படுத்த முடியாது! அத்திவினைகளுக்குத் தகுந்த பரிகாரங்களைச் செய்தால்தான் இந்த வியாதி நீங்கும் என்று கருதினார்கள். அதனால் அவர்கள் சுவர்ணத்தால் ஒரு பசுவை உண்டாக்கி, அதன் கர்ப்பத்தில் அவனை வாழ்ந்து வரச் செய்தார்கள். கடைசியில் அந்தத் தங்கப் பசுவை அந்தணர்களுக்குத் தருமம் செய்தார்கள். அப்படிச் செய்தும் அவனைப் பீடித்திருந்த வியாதி குணமாகவில்லை. அதனால் மனத்துயரம் கொண்டிருக்கும்போது, வயதான சில பெரியோர்கள் காஞ்சி காமகோடி பீடத்தின் பிரதட்சண மகிமையைப் பற்றி அவனிடம் கூறினார்கள். அம்மகிமையைக் கேட்டதும் அந்த வினாடியிலேயே பலபத்திரன் தனது மனைவியோடு காஞ்சித் தலத்தை நோக்கிப் புறப்பட்டான். அங்கே ஒரு மாதகாலம் வரையிலும் நாள் தவறாமல் காமகோடி பிலத்தை நூற்றியெட்டு தடவைகள் சுற்றி வலம் வந்தான். அப்படிச் சுற்றி வரவும், நாளுக்கு நாள் அவனுடைய வியாதி சிறிது சிறிதாகக்

குணமடைந்து கொண்டே வந்து, கடைசியில் அவன் பூரண குணமடைந்து விட்டான். அவனுடைய சரீரத்தில் புதிய தேஜஸ் ஒளிவீசியது. அதன்பிறகு அவன் மக்கள் செல்வத்தையும், திரவிய சம்பத்தையும் அடைந்து, புண்ணியசாலியாக நெடுநாட்கள் வாழ்ந்து வந்தான். கடைசியில் காமாட்சிதேவியினால் அனுப்பப்பட்ட தெய்வீக விமானத்தில் ஏறிக்கொண்டு தேவியின் திருவடிக் கமலங்களைத் தஞ்சமடைந்தான்.

12. மகா திரிபுர சுந்தரி வர்ணனை

காஞ்சி காமகோட்டத்தில், காயத்திரி மண்டபத்தில் பிலாகாசமாகிய பீடத்தில் காயத்திரியாகிய ஓங்கார கோணத்தில், பராசக்தி வடிவினளாகிய காமாட்சி தேவி சகல உலகங்களையும் படைத்தருளுவதற்குக் காரணமாக உள்ள சகல வடிவங் கொண்டு அமர்ந்திருந்தாள். அத்தேவியானவள் பத்மாசனியாகவும், சதுர்ப்புஜையாகவும், முக்கண்ணுடையவளாகவும், மூலசக்தியாகவும், ஆதிசக்தியாகவும், ஆதிலட்சுமியாகவும், ஆத்மசக்தியாகவும், பிரம்ம வித்தையாகவும் இம்மாதிரிப் பல பெயர்களில் திகழ்கிறாள். அத்தேவி கமல மலர் போன்ற பிரகாசத்தைக் கொண்டவளாய், சந்திர சூடாமணியால் ஆகிய மகுடத்தை அணிந்து பாசம், அங்குசம், கோதண்டம், பஞ்சபாணம் (கரும்பு வில்) ஆகியவைகளையும், தம் திருக்கரங்களில் தரித்திருப்பாள். அவளுடைய இரு காதுகளிலும் சூரிய சந்திரர்களே காதுத் தோடுகளாக ஒளி வீசிக் கொண்டிருப்பார்கள். அவள் சிவப்புப் பட்டாடைகளை அணிந்து, திவ்வியமான நவரத்தின ஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டு, சகலவிதமான சர்வமங்களங்களையும் கொடுக்கக் கூடிய திருமாங்கல்யத்தையும் கழுத்தில் தரித்துக் கம்பீரமாக வீற்றிருப்பாள். அவளுடைய திருக்கழுத்தில் திருமாங்கல்யத்தோடு, தாமரை, மல்லிகை, முதலிய

புஷ்பமாலைகளும் சுதிராடிக் கொண்டிருக்கும். அத்தேவியானவள் இராஜராஜேஸ்வரியாக, ஸ்ரீவித்யா பரமேஸ்வரியாக, மும்மூர்த்திகளாலும் வழிபடத் தக்கவளாக, பரமேஸ்வரரால் மோகிக்கப் பட்ட தேவியாக, சிவசங்கரருக்கு ஆத்ம வடிவினளாக, அச் சங்கரரால் விரும்பப்பட்டவளாக, சகலகலாவல்லியாக, சர்வ பிராணி சொரூபிணியாக, காலசக்கர வடிவினளாகத் திகழ்கிறாள். அத்தேவியானவள் ஸ்ரீகாஞ்சித் தலத்திற்கு ஈஸ்வரியாகவும், அவளிடம் அடைக்கலம் புகுவோருக்கு எண்ணிய கருமங்கள் அனைத்தையும் அளிக்கக் கூடிய தலைவியாகவும், தன்னிரு பக்கங்களிலும் லட்சுமி, சரஸ்வதி ஆகிய இருவரும் சாமரைகளை வீசிக் கொண்டும், சதாசிவாதி மூர்த்திகளுக்கும், கௌரியாதி சக்திகளுக்கும் காரணகர்த்தாவாகவும், காமகோடியாகவும், திவ்விய மங்கள வடிவினளாகிய காமாட்சிதேவியாகவும், விளங்குகிறாள். இவளை சூதலிங்க காரணி என்றும், சூதபீஜ அர்த்த ரூபிணி என்றும், சர்வேஸ்வரனின் பத்தினி என்றும், சிவாங்கத்தில் இருப்பவள் என்றும், சிவமூர்த்தி என்றும், சிவத்தைக் கொடுப்பவள் என்றும், மகா காமேசருக்குப் பட்ட மகிஷி என்றும், மகா திரிபுர சுந்தரி என்றும் வழங்கப்படுகிற திருப் பெயர்களால் பிரசித்தி பெற்று ஸ்ரீசங்கர நாயகியாக அமர்ந்திருக்கிறாள்.

சிவபெருமானின் கட்டளையின்படி கிளி உருவமாகச் சண்பக மரத்தில் வசித்து வரும் தேவர்கள், இந்தக் காமாட்சிதேவியை இதய பீடத்தில் இருத்தித் தியானித்து, பந்தகாசுரனை அழித்து விடும் நோக்கத்துடன் தவம் செய்து, வந்தார்கள். அவர்களுடைய தவத்தை மெச்சிக் கடாட்சிக்க விரும்பிய தேவியானவள், பிரளய காலாக்கினி வடிவமாக, அளவுகடந்த கோபாவேசத்தோடு பிலத்தில் இருந்து வெளியே தோன்றினாள். அவள் தனக்கிருந்த கோபத்தில் சகல உலகங்களையும் தீக்கு இரையாக்கி, அந்த வெட்ட வெளியிலேயே சகுணமாகிய



திருவடிவத்தை அவள் எடுத்து, காயத்திரி மண்டபத்தின் நடுவே தன்னந்தனியாக தங்கியிருந்தாள். அவள் தனது வாமநேத்திரத்தில் மகாவிஷ்ணுவையும், தட்சிண நேத்திரத்தில் நான்முகனையும், பால நேத்திரத்தில் ருத்திரத் தாண்டவரையும், குழந்தை உருவங்களாகத் தோற்றுவித்தாள். நான்முகனுக்குச் சிருஷ்டி செய்யும் வல்லமையைத் தரக்கூடிய பாலையும், திருமாலுக்கு ஸ்திதியை அளிக்கக் கூடிய வல்லமை பொருந்திய பாலையும், ருத்திரபகவானுக்கு இலயத்தைக் கொடுக்கும்படியான வல்லமை நிறைந்த பாலையும் புகட்டி விட்டு, அங்கிருந்து மறைந்து சென்று விட்டாள்.

இவ்வாறாகப் பார்வதிதேவியிடமிருந்து பாலை அருந்திய அம்மூன்று குழந்தைகளும் காலப் பொழுதில் வளர்ந்து இளமைப் பருவத்தை அடைந்தார்கள். அப்போது உலகங்கள் அனைத்தும் இருளடைந்தும், பாழடைந்தும் ஒரே சூனியமாக இருப்பதைப் பார்த்ததும், பெருத்த வியப்பை அடைந்தார்கள். கனவில் கண்ட பொருள்களெல்லாம், கண் விழித்ததும் அடியோடு மறைந்து விடுவதைப் போலவே, இந்த உலகங்கள் அனைத்தும், இப்படி அடியோடு அழிந்து போய் விட்டதே என்று அவர்கள் எண்ணிக் கலங்கினார்கள். அதற்கு என்ன செய்யலாம் என்று அம்மூவரும் கலந்து ஆலோசித்தார்கள். நான்முகன், தான் செய்யக் கூடிய காரியங்களை யோசித்து, முன்பிருந்தது போலவே தாவரசங்கமமாகிய உலகத்தைப் படைத்து முடித்தார். உடனே மகாவிஷ்ணுவும், ருத்திர மூர்த்தியும் காத்தல் அழித்தல் என்ற இரு தொழில்களையும் சரிவரச் செய்யலானார்கள். இவ்வாறாக உலகம் பெருகி வளரலாயிற்று.

இது இப்படியிருக்க, சண்பக மரத்தில் கிளி வடிவமாக வாழ்ந்து வந்த தேவர்கள், ஒரு ஜாமப் பொழுதிற்குள் மும்மூர்த்திகளையும் படைத்து,



உலகத்தையும் உற்பத்தி செய்துவிட்ட தேவியின் வல்லமையைக் குறித்து தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பேசி வியப்படைந்தார்கள். இவைகளைத் தவிர இன்னும் என்னென்ன அதிசயங்கள் ஏற்படுமோ என்றும் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அதேசமயத்தில் மும்மூர்த்திகளையும் படைத்தருளிய தேவியானவள், அதற்கு மறுநாள் இரவு நேரத்தில் கைலயங்கிரியில் பந்தகாசுரன் உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு கடுங்கோபமடைந்தாள். அவள் தன்னுடைய ஒரு திருப்பாதத்தை அவனுடைய கண்டத்திலும், மற்றொரு திருப்பாதத்தை அவனுடைய மார்பிலும் பதித்து, பதினெட்டு ஆயுதங்களைத் தரித்த பதினெட்டுக் கரங்களையுடைய பைரவ வடிவினளாக உருமாறினாள். அந்த அசுரனுடைய தலையைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, சக்கரம், சூலம் போன்ற ஆயுதங்களினால் அவனுடைய புத்திரர்களையும், சுற்றத்தார்களையும், மற்றும் அவனைச் சேர்ந்த சகல அசுரர்களையும் ஒரு நொடிப் பொழுதிற்குள் கொன்று

குவித்தாள். பிறகு சூரியோதயம் பொழுதில் ஐந்து வயதுப் பிராயத்தைக் கொண்ட கன்னிப் பெண்ணாகக் காமகோடி பீடமாகிய பிலத்துவாரத்தை வந்து சேர்ந்தாள்.

அப்போது அங்கு வசித்து வந்த தேவர்கள், கன்னிப் பெண்ணின் வடிவத்தில் அங்கு வந்திருந்த அம்பாள், தனது திருக்கரத்தில் கொடியவனான பந்தகாசுரனுடைய தலையைப் பிடித்துக் கொண்டிருக்கும் பயங்கரக் காட்சியைக் கண்டு கதிகலங்கினார்கள். ஆனால் அவன் செத்து விட்டான் என்பதைத் தெரிந்து கொண்டதும், அவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம் கொஞ்சநஞ்சமல்ல! தங்கள் முன்னிலையில், சகலவிதமான அணிகலன்களையும் அணிந்து கொண்டு, உன்னதமான வஸ்திரத்தையும் தரித்துக் கொண்டு, அழகுச் சுடர்விடும் கன்னிப் பெண்ணாகக் காட்சியளிக்கும் தேவியைக் கண்டு அவளை அவர்கள் பலவாறாகவும் வணங்கித் துதித்தார்கள். அவளைப் பாராட்டிக் கௌரவிக்கும் பொருட்டு, துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புல்லாங்குழல், தாளம், வீணை, மத்தளம் போன்ற பலவிதமான தேவ வாத்திய இன்னிசைக் கருவிகளையும் பேரொலியாக முழக்கினார்கள். தாமரை, மல்லிகை, முல்லை, பாரிஜாதம், சண்பகம் போன்ற தேவலோகத்துப் புஷ்பங்களையும், கஸ்தூரி முதலிய வாசனைப் பொருள்கள் கலந்த சந்தனக் கரைசலையும் அவள் திருமேனியின் மீது மழைபோல் வாரியிறைத்தார்கள். "தேவி! உனக்கு வெற்றி உண்டாகட்டும்! சர்வ மங்களம் உண்டாகட்டும்! மகாதேவி! நீ யார்? எங்கிருந்து இங்கு எங்கள் முன்னிலையில் வந்திருக்கிறாய்? எங்களை இதுகாறும் வாட்டி வதைத்து வந்த பந்தகாசுரனை நீ எப்படிக் கொன்றாய்? அவன் எவ்விதமாகக் கொல்லப்பட்டான்? அவன் செத்தொழிந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் தான்! அதுவும்தவிர, பிலத்திலிருந்து உண்டாகிய தியினால், சகல உலகங்களும் எதற்காகக்

கொளுத்தப்பட்டன? தேவி ஜகன்மாதா! எங்களுடைய இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தாங்கள் பதில் சொல்லித் தெளிவாக விளக்க வேண்டும்!" என்று வேண்டினார்கள். அதற்குத் தேவியானவள், "தேவர்களே! உங்களுடைய கேள்விகளுக்கான பதில்களைப் பிறகு சொல்லி நான் புரிய வைக்கிறேன்!" என்று கூறிப் பிலத்துவாரத்தை விட்டு வெளியே வந்து நின்றாள். பிறகு அவள், "தேவர்களே! இப்போது நீங்கள் இந்த இடத்தில் ஒரு குழி தோண்டி, அதில் செத்துக் கிடக்கும் இந்தப் பந்தகாசுரனைப் புதைத்து, ஜயக் கொடி நாட்டுங்கள். அந்தப் புதைகுழியிலிருந்து பிலாகாசத்துக்குப் போவதற்கு ஒரு துவாரம் செய்து, அதற்குச் சமீபத்திலுள்ள தெற்குத் திசையில் பிலத்தின் இடைவெளி எவ்வளவு தூரம் இருக்கிறதோ, அந்த இடைவெளி முழுவதிலும் வேதங்களையே, நான்கு சதுரங்களாக அமைத்து, அதில் காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்திநான்கு கால்களாக நாட்டி, வியாக்கிருதியாகிய மூன்று அட்சரங்களை மூன்று கண்டங்களாகச் செய்து, அதற்குக் காயத்திரி மண்டபமென்றும் பெயரிட வேண்டும். பிறகு அந்தக் காயத்திரி மண்டபத்தினுள் பிரணவ மந்திரத்தை நவரத்தினமயமான சிம்மாசனமாக அமைத்து, அந்தச் சிம்மாசனத்தின்மேல் கன்னிகை வடிவில் இருக்கும் என்னைப் போன்ற ஒரு உருவத்தைப் பிரதிஷ்டை செய்து, ஷடாதாரங்களில் காட்சியளிக்கும் ஷட்தாரிணி வடிவினளாகவும், நவாவரண மத்தியில் இருப்பவளாகவும், பிலத்துக்கு உரிமையாளராக இருப்பவளுமாகிய பராசக்திதேவியை ஷடாம் நாயம் என்னும் மந்திர முறையால் அந்தரியாக முறைப்படி ஆராதித்துப் பிறகு வாஹனம் செய்து, பால், தயிர், தேன், இளநீர் போன்ற பலவிதமான அபிஷேகப் பொருள்களாலும் அர்ச்சனை செய்ய வேண்டும். சிவந்த வண்ணமலர்களாலும், அட்சதைகளாலும், தூபதீப நைவேத்தியங்களாலும் ஆர்த்தி, ஜபம் என்று சொல்லப்படும் பஞ்சோபசாரங்களால் முறைப்படி

ஆராதனை செய்து, சுகந்த பரிமளம் வீசும் சகலவிதமான வாசனைப் பொருள்களாலும் லேபனம் செய்து, பிலத்துவாரத்திற்குக் கொடுக்க வேண்டிய பலிகளையும் கொடுக்க வேண்டும். பிறகு அத்துவாரத்தின் கதவுகளைச் சாத்திவிட்டு வெளியே வந்து நிற்க வேண்டும். சூரியோதயம் வரும் வரையிலும் மௌனமாக இருந்து, என்னை வணங்கிக் கொண்டே இருக்க வேண்டும். என்னுடைய ஸ்ரீவித்யா மந்திரத்தை ஜபித்து, ஜப சமர்ப்பணை செய்து, காலைப் பொழுது விடிந்தவுடன் பிலத்துவாரத்தின் மூடியிருந்த கதவுகளைத் திறந்து என்னைக் கண்குளிரக் கண்டு தரிசியுங்கள். அப்போது நீங்கள் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் நான் விடையளிக்கிறேன். அது வரையிலும் என்னிடம் நீங்கள் எதுவொன்றையும் கேட்கவே கூடாது!" என்று கூறி முடித்தாள்.

தேவர்கள் அனைவரும் அவளை வணங்கித் துதித்தார்கள். அவளுடைய ஆக்ஞையின்படியே, பந்தகாசுரனைக் குழிதோண்டிப் புதைத்து, ஜயஸ்தம்பத்தையும் நாட்டினார்கள். காயத்திரி மண்டபத்தைப் பிரதிஷ்டை செய்து, அதன்பிறகு செய்ய வேண்டிய பூஜை முறைகளையும் இரவோடு இரவாகச் செய்து, கதவைச் சாத்தினார்கள். பிறகு வெளியிலேயே தங்கியிருந்து சூரியோதயப் பொழுது வரையிலும் தேவி மந்திரத்தை ஜபித்து, அருணோதயம் ஆனதும் ஆசாரசீலர்களாகக் கதவைத் திறந்து பார்த்தார்கள். அங்கே, அவர்கள் பிரதிஷ்டை செய்திருந்த விக்கிரகத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாக இராஜராஜேஸ்வரியாகிய திரிபுரசுந்தரி சுயவடிவத்தோடு அமர்ந்திருப்பதையே கண்குளிரக் கண்டார்கள்.

தேவியின் அந்த அவதார நேரம் - சாவித்திரி கல்பம், சுவாயம்பு மனுவினுடைய தாமச காலம், கிருதயுக ஆரம்பம், மகாவிஷ்ணு மோகினி வடிவம்

எடுத்த சமயம். ஸ்ரீமுக வருஷம் சூரியன் கும்பத்தில் இருக்கிற பால்குணம் என்கிற பங்குனி மாதம். கிருஷ்ண பட்சம், பிரதமை திதி, பூர நட்சத்திரத்தின் மத்திய காலம், ஐந்தாம் ஜாமம், சுக்கிர வாரம் விடியற்காலை நேரம்.

அத்தகைய சுபநாளில் அவதரித்த இராஜராஜேஸ்வரியை தேவர்களனைவரும் கண்குளிரத் தரிசித்து, மகிழ்ந்தார்கள். அவளைப் பலவாறாகவும், பூஜித்து வழிபட்ட அவர்கள், "தேவி! சகலலோக நாயகி!



நாங்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட அம்பாள் எங்கே போய்விட்டாள்? பந்தகாசுரனைக் கொன்று, அவன் சிரத்தைக் கொண்டு வந்து பிலத்தின் அருகிலே காட்சியளித்த கன்னிப் பெண்ணான அந்தத் தேவி எங்கே போய்விட்டாள்? அந்த இரண்டு உருவங்களையும், எங்களால் காணமுடியவில்லையே?

அதற்குப் பதிலாக இப்போது உன்னைத் தான் நாங்கள் பார்க்கிறோம். நீ யார் என்பதே எங்களுக்குப் புரியவில்லை. கருணை கூர்ந்து எல்லா விவரங்களையும் எங்களுக்குக் கூறியருள வேண்டும்!" என்று வேண்டினார்கள். அதற்குத் திரிபுர சுந்தரி, "தேவாதி தேவர்களே! உங்கள் சந்தேகங்களையெல்லாம் நான் தெளிய வைக்கிறேன். பொறுமையாகக் கேளுங்கள்!" என்று கூறலானாள்.

"தேவர்களே! உங்களுடைய நல்வாழ்க்கையின் பொருட்டுப் பிரளய காலாக்கினி வடிவமாக நடு இரவில் நான் இந்தப் பிலத்திலிருந்து வெளியேறி வந்தேன். உடனே அனைத்துலகத்தையும் திக்கிரையாக்கி அழித்து, ககார, அகார, மகார வடிவினர்களென்று கூறப்படும் பிரும்ம, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும், படைத்தல், காத்தல், அழித்தல் போன்ற முத்தொழில்களைக் கருதி, என்னுடைய மூன்று விழிகளிலிருந்தும் தோற்றுவித்து, திரிபுரசுந்தரியாகிய நான் காமாட்சி என்னும் பெயரை அடைந்தேன்.

என்னால் தோற்றுவிக்கப்பட்ட மும்மூர்த்திகளும் தங்களுக்கு இடப்பட்ட வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். அதன்படி பிருமதேவன் சிருஷ்டித் தொழிலைச் செய்யலானான். அப்போது உங்களுடைய சத்துருவாகிய பந்தகாசுரன் முன்போலவே தோன்றினான். அதைக் கண்ணுற்ற நான் பைரவி வடிவம் எடுத்து, அந்தப் பந்தகாசுரனையும், அவனைச் சேர்ந்த அனைவரையுமே அதம் செய்து கொன்று குவித்தேன். பந்தகாசுரனின் செத்த சடலத்தைத் தலையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து பார்ப்பவர் அஞ்சி நடுங்கும்படியான என்னுடைய பைரவி உருவத்தை மாற்றிக் கொண்டு, கன்னிகை வடிவம் எடுத்து, இந்த மகாபிலத்திலிருந்தும் வெளியேறி, நீங்கள் கண்டு களிக்கும்படியாகக் காட்சியளித்தேன். அப்படிக் காட்சியளித்த என்னுடைய

கரத்தில் அசுரனின் பிரேதத்தைக் கண்டதும், நீங்கள் பயந்து கதிகலங்கிப் போய்விட்டீர்கள். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தைப் போக்குவதற்காகவும், அதைப் போக்கும் சக்தி எனக்கிருக்கிறது என்பதை அனைவரும் அறிந்து கொள்வதற்காகவும் அந்த அசுரனைக் குழிதோண்டிப் புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டும்படி உங்களுக்கு உத்தரவிட்டேன். நீங்களும் அதன்படியே செய்து என்னைப் பாராட்டி அன்பு செலுத்தி வணங்கினீர்கள். அதனால் நானும் இந்தப் பிலத்தைக் காயத்திரி மண்டபத்தால் மறைத்து, ஓங்கார சிம்மாசனம் அமைத்து, அதில் என்னைப் பிரதிஷ்டை செய்யுங்கள் என்று உங்களுக்குக் கூறினேன். நான் கூறியது போலவே நீங்களும் செய்து முடித்தீர்கள். உங்களைப் பேராச்சரியத்தில் திளைக்க வைக்கும் எண்ணத்தோடும், உங்கள் மனதிலுள்ள ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற விருப்பத்தோடும், சித்சொரூபமாகிய பிலாகாசத்துக்குள்ளே வசித்து வரும் திரிபுர சுந்தரியாகிய நான், அதை விட்டு நீங்கி, நீங்கள் பிரதிஷ்டை செய்திருக்கும் பிம்பத்தில் இப்போது ஒளி வீசித் திகழ்கிறேன்.

இனிமேல் எப்போதுமே நான் இந்தக் காயத்திரி மண்டபத்தினுள் நிரந்தரமாகத் தங்கியிருப்பேன். இந்த இடம்தான் எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது. இதுதான் என்னுடைய இருப்பிடம். இதுதான் அழிவென்பதே இல்லாத இடம். எந்தக் காலத்திலும் அழிவென்பதே இல்லாத காரணத்தினால் இந்த இடம் பிரளயஜித் என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது!'' என்று திரிபுரசுந்தரியாகிய காமாட்சிதேவி சொன்னாள். அவற்றைக் கேட்டதும் தேவர்கள் அனைவரும் திரிபுரசுந்தரியை வணங்கி வழிபட்டு நமஸ்கரித்து எழுந்தார்கள். அந்தத் தேவிக்குப் பிலம் உள்ளிடமாக இருப்பதால் அந்தப் பிலத்துவாரத்திற்கும் மஞ்சன நீர் வார்த்துப் புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, பிராமணர்களின் இருதயத்தில் அமர்ந்திருப்பவளாக அவளைத் துதித்து,

சகல விதமான அறுசுவை உணவுகளையும் அப்பிராமணர்களுக்கு அளித்து உண்டு மகிழச் செய்து, சந்தனம், மலர்மாலைகள், துணிமணிகள், ஆபரணங்கள் முதலியவைகளையெல்லாம் இரண்டு மடங்காக அவர்களுக்குக் கொடுத்து அவர்களை ஆனந்தக் கடலில் மூழ்கடிக்கச் செய்தார்கள். பிறகு பலவிதமான மந்திரங்களையும் வாய்விட்டுச் சொல்லி அம்பிகையைத் தோத்திரம் செய்து, அவளை மனம் மகிழ வைத்தார்கள்.

அதன் பிறகு, சிம்மாசனத்தில் அதியற்புத லாவண்யத்தோடு அமர்ந்திருக்கும் அம்பிகைக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துக் கண்குளிரப் பார்க்க வேண்டுமென்று தேவர்கள் எல்லோரும் விரும்பினார்கள். அதற்காகத் தேவசிற்பியான விசுவகர்மா பல்லக்கையும், பிருமதேவன் முத்துக் கொடையையும், மகாவிஷ்ணு விருத்தாகாரமாக உள்ள நவரத்தினங்களால் ஆகிய கிரீடத்தையும், ருத்திரமூர்த்தியானவர் ஸ்ரீசக்கரம் என்னும் பதக்கத்தையும் தங்கள் அன்பளிப்பாக அளித்தார்கள். உடனே தேவர்கள் அனைவரும் மகாதேவியான அம்பிகைக்கு அலங்காரம் செய்விப்பதில் தீவிரமாக முனைந்தார்கள். அலங்காரங்களைச் செய்து முடித்ததும், அன்றுமாலை நேரத்தில் தேவியை ஊர்வலமாக அழைத்துச் சென்று, முன் போல் சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். “எங்கள் இடர் தீர்த்து எங்களையெல்லாம் ஆட்கொண்ட மகாதேவியே! இந்தக் காஞ்சி நகரில் நீ என்றும் சாசுவதமாகத் தங்கியிருந்து எங்கள் உள்ளங்களையெல்லாம் பூரிக்கச் செய்ய வேண்டும்!” என்று வணங்கித் துதித்தார்கள். அதற்கு அம்பிகை, “க்ஷீரசமுத்திரத்தில் இருக்கின்ற ஸ்ரீபுரத்தில் எப்படி நான் சாமர்த்திய ரூபிணியாக, சக்தி என்கிற பெயரோடு வீற்றிருக்கின்றேனோ, அதன்படியே இந்தக் காஞ்சியிலும் காமாட்சி என்னும் திருப்பெயரோடு, என்னை நாடி வரும் பக்தர்களுக்குப் புத்திர பாக்கியம்



போன்ற அநேக விதமான வரங்களையும் தந்தருளியவாறே நிரந்தரமாகத் தங்கியிருப்பேன். அதனால் நீங்கள் அனைவரும் என்னை தினசரி தரிசித்து வாருங்கள். ஸ்ரீபுரத்தைக் காட்டிலும், இங்கு என்னுடைய சக்திகளும், மகிமைகளும், அதிகமாகவேதான் இருந்து வரும்!'' என்று கூறியருளினாள். அதைக் கேட்டதும் தேவர்கள் அனைவரும் அளவுகடந்த மகிழ்ச்சியில் திக்கு முக்காடினார்கள். அம்பிகையைத் தோத்திரங்களால் வணங்கி வழிபட்டு, ஆனந்தக் கூத்தாடினார்கள். தேவி அவதாரம் செய்திருக்கும் நாளில் யார் அவளைப் பூஜை செய்து வணங்குகிறார்களோ, அவர்கள் கோடி யக்ஞ பலத்தைப் பெறுவார்கள் என்று அனுக்கிரகம் செய்து அங்கிருந்து அகன்றார்கள்.

அதன் பின்னர் ருத்திர மூர்த்தியானவர் துர்வாச முனிவராகச் சிஷ்ய கோடிகள் புடைசூழ வந்து ஸ்ரீ காமாட்சிதேவியின் சந்நிதியில் பிரவேசித்தார். அவர் தம்மோடு கூட வந்திருந்த விசுவாமித்திரர், கௌதமர், காசிபர், அத்திரி, பரத்துவாசர், அகஸ்தியர் முதலியவர்களையும், அவர்களுடைய மக்கட் செல்வங்களையும், ஸ்ரீகாமாட்சிதேவியின் உத்தரவின்படி விபூதியையும், பவளத்தினால் செய்த மேருவோடு கூடிய தங்க ருத்திராட்சத்தையும், சர்வ மங்களகரமான குங்குமத்தையும் அணிந்து கொள்ளும்படிச் செய்தார். பிறகு அவர்களிடம் பிரும்மகல்ப பரியந்தம் சிந்தாமணி என்னும் மந்திரத்தால் காமாட்சிதேவியைப் பூஜை செய்து வரும்படியாகக் கட்டளையிட்டார். பிறகு அவர், "இந்தக் கிருத யுகத்தில் நான் துர்வாச முனிவரையும், திரேதாயுகத்தில் பரசுராமரையும், துவாபரயுகத்தில் தௌம்மியாசாரியரையும், கலியுகத்தில் மூகாசாரியரையும் தோன்றச் செய்து, முறையே கிருதயுகத்தில் இரண்டாயிரம், திரேதாயுகத்தில் ஆயிரத்தி ஐந்நூறும், துவாபர யுகத்தில் ஆயிரமும், கலியுகத்தில் ஐந்நூறுமாகத் தோத்திரம் செய்து, காமாட்சி ஸ்தவம் என்னும்படியாக உலகத்தில் வழங்கச்

செய்வேன்!" என்று கூறினார். அங்குள்ள முனிசிலர் களுக்கெல்லாம் தாம் தான் துர்வாசர் என்பதைப் புரிந்து கொள்ளும்படிச் செய்து, "நீங்கள் எல்லோரும் என்னையே குருவாகக் கொண்டு எனக்குச் சிடர்களாகவே இருந்து வர வேண்டும்!" என்று ஆக்ஞையிட்டார். பிறகு அவர் காமாட்சிதேவியை ஆத்ம சுத்தியாக வழிபடும் பொருட்டு லிங்க வடிவத்திலேயே அந்தத் தலத்தில் தங்கியிருந்தார். அம்பிகையும் அவருடைய வழிபாட்டை மனமார ஏற்றுக் கொண்டவள் போன்ற ரீதியில் அவருக்கு எதிரே நிரந்தரமாக அமர்ந்து வருகிறாள்.

மகிமை : கோதாவரி நதிக்கரையில் பஞ்சவடி தீரத்தில் கிருஷ்ணவேதியனான ஜயதேவர் என்னும் ஓர் அந்தணன் நீண்ட நாட்களாக வசித்து வந்தான். அவன் ஜமதக்கினி குலத்தில் தோன்றியவன். அவன் முற்பிறவியில் செய்திருக்கும் தீவினைகளின் பயனாக, இப்பிறப்பில் கொடிய .வறுமையால் வாடி வருந்தினான். ஆனால் அவன் செய்திருந்த ஒரு சில பூர்வ ஜன்மப் புண்ணியப் பலன்களினால் தீர்த்த யாத்திரை புறப்பட்டு, ஒவ்வொரு தலமாகச் சென்று வந்தான். அப்படிச் சென்று வரும்போது கடைசியில் காஞ்சி காமகோடி க்ஷேத்திரத்திற்கும் அவன் வந்து சேர்ந்தான். ஸ்ரீ காமாட்சிதேவியின் கடாட்சத்தால் அவனைப் பீடித்திருந்த வறுமை நோய், அவனை விட்டு விரைவில் அகன்று விட்டது. அவன் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று அங்கு சகல சௌபாக்கியங்களோடும் ஆனந்தமாக நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்தான்.



13. பூதபந்த வரலாறு

காமகோட்டம் என்னும் மகாபிலத்தில் அமர்ந்திருக்கும் திரிபுரசுந்தரியாகிய காமாட்சிதேவிக்கு மிகுந்த அருகாமையில் இருக்கும் மேற்குத் திசையில் மகாவிஷ்ணுவானவர் மூன்று விதமான திருஅவதாரங்களில் பிரத்தியட்சமாகி இருக்கிறார்.

பூர்விகத்தில் திரிபுரசுந்தரியாகிய காமாட்சி தேவியானவள், தேவர்களுடைய நன்மையை முன்னிட்டுப் பந்தகாசுரனை வதம் செய்தாள். பிறகு அந்த அசுரனின் பிரேதத்தைப் புதைப்பதற்காக ஒரு குழி தோண்ட வேண்டுமென்று, தன்னுடைய கால் பெருவிரலால் ஓர் இடத்தை தேவர்களுக்குக் குறிப்பாகக் காட்டினாள். அதன்படியே தேவர்களும் அந்த இடத்தில் பள்ளம் தோண்டுவதில் முனைந்தார்கள். அப்போது அந்த இடத்தில் மல்லகன் என்னும் கொடிய அசுரன் ஒருவன் அதியாவேசமாக அமர்ந்து தவம் புரிந்து வருவதைப் பார்த்து, தேவர்கள் அனைவரும் பயந்து பின்வாங்கி ஓடினார்கள். அச்சமயம், அத்தேவர்களிலேயே மிகவும் தைரியசாலியான மகாவிஷ்ணுவானவர் அந்த அசுரன் தவம் புரிகிறான் என்பதை அறிந்து கொள்ளாமல், அவனைக் கொன்றுவிட எண்ணினார். அப்போது அந்த அசுரனுடைய உடலிலிருந்தும் வெளித் தோன்றிய ஒவ்வொரு இரத்தத் துளியிலிருந்தும் கணக்கற்ற அசுரர்கள் ஒரு நொடிப் பொழுதிற்குள் உற்பத்தியாகிப் பெருங் கூட்டமாகத் திரண்டு வந்து போர் செய்யலானார்கள்.

அதைப் பார்த்த மகாவிஷ்ணு சிறிதும் சலிப் படையாமல், அவ்வசுரக் கூட்டங்களோடு போர் செய்வதில் முனைந்தபோது, அவ்வசுரர்களின் உடலிலிருந்து வெளிப்பட்டுச் சிதறிய இரத்தச் சொட்டுகளிலிருந்தும் பெருகி வந்த எண்ணிக்கையற்ற

அசுர வீரர்களைக் கண்டு சற்றுத் திடுக்கிட்டார். அவர் உள்ளம் உடனே ருத்திரப் பெருமானை எண்ணித் தியானித்தது. அப்பெருமான் அந்த வினாடியிலேயே அங்கு பிரசன்னமாகித் தம்முடைய செஞ்சடையை விரித்து நிலத்தில் தட்டினார். உடனே ஆணும் பெண்ணுமாகிய இரண்டு பூதங்கள் அவர் அருளால் உற்பத்தியாகின. அந்த பூதங்களைக் கொண்டு,, வினாடிக்கு வினாடி அதிக எண்ணிக்கையோடு பெருகி வரும் அசுரர்களை, மேலும் உற்பத்தியாக முடியாதபடி, கீழே சிதறும் இரத்தத் துளிகளைப் பருகி விடும்படிச் செய்தார்.

அவருடைய ஆணையின்படியே அவ்விரண்டு பூதங்களும் அசுரர்களின் தேகத்திலிருந்து சிந்திச் சிதறும் இரத்தத் துளிகளை இடைவிடாமல் பருகிக் கொண்டிருந்தன. அதனால் கூடிய சீக்கிரத்திலேயே அசுரக் கூட்டங்கள் அனைத்தும் அடியோடு அழிந்து மடிந்து விட்டன. உடனே அசுர ரத்தங்களைக் குடித்து மதிமயங்கிக் கிடந்த பூதங்களிரண்டும் ஓர் ஆவேச வெறிகொண்டு அசுரத் தன்மையை அடைந்து, மகாவிஷ்ணுவினுடனேயே யுத்தம் புரியலாயின. அதைப் பார்த்த மகாவிஷ்ணு இதுவென்ன ஆச்சரியம் என்று வியந்தவராக, அவ்விரண்டு பூதங்களையும் பிடித்துக் கீழே தள்ளி, அவைகளின் மீது தமது திருப் பாதத்தை ஊன்றி நின்றார். உடனே அந்தப் பூதங்கள் இரண்டும் திருமாலைக் கீழே தள்ளி, அவர்மீது கால்களை ஊன்றி நிற்கலாயின. அதைக் கண்ட மகாவிஷ்ணு அளவுகடந்த கோபாவேசத்தோடு அப்பூதங்களை மறுபடியும் கீழே தள்ளி, அவைகள் தலைதூக்கி எழுந்திருக்காதபடி, அவைகளின் தொடைகளின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார். ஆனால் பூதங்கள் அதற்கு மசியாமல், மகாவிஷ்ணுவைக் கீழே தள்ளிவிட்டு வானுலகம் செல்ல முயன்றன. ஆனால் பரந்தாமனோ, அப்பூதங்களை மூர்க்காவேசத்தோடு கீழே தள்ளித் தமது திருவடிகளால் மிதித்து அவற்றின் மேலேயே சயனித்துக்கொண்டுவிட்டார்.

அதன் பிறகு அப்பூதங்களின் அசுர வெறி அடியோடு அழிந்து போய், நற்குணங்களைத் திரும்பப்பெற்று பழையபடியே சாந்த குணமாக மாறிவிட்டன. அவைகள் பள்ளி கொண்ட பெருமானை நோக்கித் திரும்பி, "மகாவிஷ்ணுவே! நாங்கள் இழைத்துள்ள குற்றங்களை மறந்து மன்னிப்பளிக்க வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டன. அதற்குத் திருமால், "நீங்களிருவரும் அசுரர்களின் ரத்தங்களைக் குடித்ததால், மதம் கொண்டு வெறித்தனமாக என்னோடு யுத்தம் புரியத் தலைப்பட்டீர்கள். உங்களுடைய தீய நடத்தையைப் போக்குவதற்காக நானும் உங்களைக் கீழே தள்ளிக் காலால் மிதித்து நின்றேன். எப்படியும் என்னோடு யுத்தம் புரிய நீங்கள் முன்வந்தது குற்றம்தான். அது போலவே பரமேஸ்வரரின் சடைமுடியிலிருந்து அவதரித்த உங்களை நான் அவமானப் படுத்தியதும் என்னுடைய தவறுதான்!" என்று இதமாகக் கூறினார். பிறகு அவர் திரியம்பகராகவும், உமாநாதராகவும், சங்கரராகவும், பஞ்சானனராகவும் விளங்கி வரும் பரமேஸ்வரரை வணங்கித் தியானித்தார். உடனே செஞ்சடைப் பெருமானும் அவர் முன்னிலையில் பிரத்தியட்சமாகி, தமது சடாமகுடத்திலுள்ள கங்காதேவியை, ஐந்து சடைமுடியிலிருந்தும் பெருகியோடிச் செல்லும்படி உத்தரவிட்டார்.

அதற்கிணங்கக் கங்காதேவியும் அவரது சடைமுடியிலிருந்து பிரவாகமாகப் பெருக்கெடுத்து நதி உருவமாக ஓடிவந்து காமகோட்டத்தில் ஐந்து முகங்களாக வந்து விழுந்தாள். அப்போது பரமேஸ்வரர் மகாவிஷ்ணுவை நோக்கி, "இந்தக் கங்கா தீர்த்தத்தில் இந்தப் பூதங்கள் இரண்டும் நீராடி எழுந்தால், என் உத்தரவை மீறி, உன்னோடு யுத்தம் புரிந்த பாவகாரியத்திலிருந்தும் விடுபட்டு விடும்!" என்று கூறினார். உடனே மகாவிஷ்ணு "ஈசனே என்னை உத்தேசித்துத்தானே தாங்கள் இவ்விரு பூதங்களையும் உற்பத்தி செய்தீர்கள்! அப்படியிருக்கும்

போது இந்தப் பூதங்களை நான் அடித்தும் மிதித்தும் பலவாறாகவும் கொடுமைப்படுத்தி விட்டேன். அந்த சிவ அபாரதத்திலிருந்து விடுபடும்படியாக எனக்கும் ஒருமார்க்கத்தைத் தாங்கள்தான் கூறியருள வேண்டும்!" என்று வேண்டினார். உடனே சிவபெருமான் அவரையும் அந்த கங்காநதியில் மூழ்கி எழுந்திருக்கும்படிச் சொல்லி, அத்தீர்த்தத்தின் அருமை பெருமைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

"திருமாலே! இந்த நதியானது என்னுடைய ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றியிருப்பதால், பஞ்ச தீர்த்தம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. இந்த நதியில் யாராவது நீராடினால், அவன் சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டு மோட்சத்தை அடைவான் என்பது நிச்சயம். தங்கத்தைத் திருடியவன் ஆக்னேய திக்கிலும், மது அருந்துபவன் தட்சிணத்திலும், பிற ஸ்திரீகளை இச்சிப்பவன் மேற்கிலும், பிரும்மஹத்தி தோஷம் செய்தவன் உத்தரத்திலும், இப்படிப் பட்டவர்களின் நண்பன் பூதங்களின் இடையிலும் நீராடி எழுந்தால் அத்தீவினைகளிலிருந்தும் அவர்கள் விடுதலையடைந்து சகல இஷ்ட சித்திகளையும் பூரணமாக அடையப் பெறுவார்கள். இதில் அணுவளவும் சந்தேகமேயில்லை.

"ஆண் பெண் வடிவில் இருக்கும் இந்த இரண்டு பூதங்களையும் இந்த நதியைக் காவல் புரியும் வேலையில் நீ நியமித்து விட வேண்டும். இவைகளை ஈசான திக்கிற்கும், அக்னி திக்கிற்கும் மத்தியில் பிரதிஷ்டை செய்து, அவைகளுக்கு ஸ்ரீ காமாட்சிதேவியின் அபிஷேகத் தீர்த்தக் கிரஹணத்தால் திருப்தியுண்டாகும்படி நியமித்து, இந்தப் பூதங்களின் நடுப்பாகத்திலுள்ள மேலிடத்தில், அவைகளுக்காக நீ முன்பு நின்றும், இருந்தும், கிடந்தும் இருந்தது போல் மூன்ற பேத உருவங்களாகவே காட்சியளித்து, உனக்கு நேர் எதிரே என்னையும் லிங்க வடிவமாகப் பிரதிஷ்டை செய்து அர்ச்சனை

செய்து, அனைவருக்கும் தர்மார்த்த காம மோட்சங்களை கொடுக்கும் தன்மையுள்ளவனாக நீ இருந்து வர வேண்டும். நான் என்றும் உன்னிடம் பிரியம் உள்ளவனாகவே இருந்து வருவேன்!" என்று கூறியருளினார். அம்பிகையான ஸ்ரீ காமாட்சி தேவியும் அவ்வாறே திருவாய் மலர்ந்தருளினார். ஈசன், ஈஸ்வரி ஆகிய அவ்விருவருடைய கட்டளைகளின்படியே மகாவிஷ்ணுவும் பூதங்களைப் பிரதிஷ்டை செய்து, அவைகளுக்கு இடையேயுள்ள இடத்தைத் தன்னிருப்பிடமாகக் கொண்டார். அதற்கு எதிரே மூன்று லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்து, பக்தி சிரத்தையோடு வணங்கி வழிபட்டார். பிறகு அங்குள்ள தேவர்களையும், தவசிரேஷ்டர்களையும் நோக்கி, "இவ்விரு பூதங்களுக்கும் திருப்தியாகும்படியாக வருஷந் தவறாமல் பூதங்களின் நடுவில் உள்ள என்னுடைய சமீபத் தானத்திலிருக்கும் சிகரத்தின் மேல் நின்று கர்ப்பவதியாகிய ஒரு தாசியானவள் இந்த ஐந்து முகத் தீர்த்தத்தில் விழுந்து மூழ்கி விடுவாளானால் அவள் கருவில் இருக்கும் குழந்தை பிழைத்துக் கரையேறிவிடும். அவளும் மேலுலகம் சென்று, அடுத்த பிறவியில் அந்தண குலத்தில் பிறப்பாள். இந்தக் காட்சியைப் பார்க்கும் பேறு பெற்றவர்கள் பிரதிபந்தக பாதகமும், பூதப்ரேத பிசாசு போன்ற கிரக தோஷங்களில் இருந்தும் நீங்கப்பட்டு பரிசுத்தவாதிகளாவார்கள்!" என்று திருவாய் மலர்ந்தார். அப்பூதங்களினுடைய மத்திய ஸ்தானத்தின் மகிமையைக் கேட்டறிந்து கொண்ட அனைவரும், அந்த ஐந்து முகத் தீர்த்தத்தில் நீராடி எழுந்து, மகாவிஷ்ணுவினால் அளிக்கப்பட்ட பலவாறான வரங்களையும் பெற்றுத் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அதனால், இந்தத் தீர்த்தத்தில் எவனொருவன் நீராடி, விஷ்ணு மூர்த்தங்களையும், பூதங்களையும் தரிசனம் செய்கிறானோ, அவன் ஸ்வேதத்வீபத்திலும், திருப்பாற்கடலிலும், வைகுண்டத்திலும் விஷ்ணுசேவை செய்தவர்கள் அடையக் கூடிய பலனைப் பெறுவார்கள்.

மகிமை : கிருஷ்ணா நதி தீரத்தில் இராமாபுரியில் கிரீந்தரர் என்பவர் வசித்து வந்தார். அவர் ஐந்து மனைவியரை ஒருவர்பின் ஒருவராகக் கல்யாணம் செய்துகொண்டும், குழந்தைப் பாக்கியம் கிடைக்காமல் பெரிதும் மனம் வருந்தினார். அவர் காஞ்சித் தலத்திலுள்ள காமகோடியை அடைந்து, அங்குள்ள பஞ்சமுக தீர்த்தத்தில் நீராடி, திரிபுர சுந்தரியையும், மகாவிஷ்ணுவையும் தரிசனம் செய்து வணங்கித் துதித்து, அவருக்குத் தேனையும் காணிக்கையாகக் கொடுத்தார். அதனால் அவர் பாவங்களிலிருந்தும் விடுபட்டவராய், நூறு மக்கட்செல்வங்களைப் பெற்றெடுத்துப் பேரின்பத்துடன் வாழ்க்கை நடத்தி வந்தார். இம்மாதிரியான பெரும் பலன்களை அடைந்திருப்பவர்கள் பல பேர்களாவார்கள்.

14. சுவர்ணகாமாட்சி வர்ணனை

காஞ்சியிலுள்ள காமகோடியில் காமாட்சி தேவியினுடைய ஆலயத்தினுள் இருக்கும் பஞ்ச தீர்த்தத்திற்குக் கிழக்குத்திசையில் கோயில் கொண்டிருக்கும் பராசக்திதேவியினுடைய நெற்றிக் கண்ணிலிருந்தும் பொன்மயமான ஒரு ஜோதி வடிவம் தோன்றியது. அந்த ஜோதி வடிவமானது இரண்டு நேத்திரமும், இரண்டு புஜமும், சியாமள நிறமும், கிளியைப் பிடித்திருக்கும் வலது கரமும், தொங்க விடப்பட்டிருக்கும் இடது கரமும், திரிபங்கியும், குஞ்சிதமாக நிற்கும் வலது பாதமும், வில்லைப் போல் சிறிதளவு வளைந்து காட்சியளிக்கும் திருமேனியும், அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற கருவிழிகளும், பொன்னிற மஞ்சள் வஸ்திரமும், நவரத்தின மாலைகள் போன்ற ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகு பொருந்திய தோற்றத்துடன் காட்சியளித்தது.

இப்படிக் காட்சியளித்த ஜோதி வடிவத்தைக் கண்ணுற்ற நான்முகன், அந்த வடிவத்தைப் போலவே தங்கத்தால் ஒரு விக்கிரகம் செய்தார். அந்த விக்கிரகத்தில் மனோன்மணியாகவும், சூதலிங்க நாயகியாகவும் இருக்கும் பராசக்தியானவள் சாந்நித்தியம் கொண்டு பிரசன்னமானாள்.

வரலாறு : பூர்விகத்தில் பரமேஸ்வரருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட அக்கினியில் மன்மதன் எரிந்து சாம்பலாகிப் போனான் அல்லவா? அவன் தன்னுடைய சுய உருவத்தை முன் போலவே அடைய விரும்பி, காமகோட்டத்தை அடைந்தான். அங்குள்ள திரிபுரசுந்தரியாகிய காமாட்சி தேவியைத் துதித்து, மனதில் இருத்தித் தியானித்துப் பூஜை செய்தான். அதன்பிறகு கடுந்தவத்திலும் ஈடுபட்டான். அவனுடைய தவத்தை மெச்சிய அம்பிகை பிரத்தியட்சமானாள். அவள் பிரத்தியட்சமாகிய அந்த க்ஷணத்திலேயே மன்மதன் அதிஉன்னதமான திவ்விய சர்ரத்தை அடைந்து விட்டான். அவன் அளவுகடந்த ஆனந்தப் பெருக்கோடு தேவியைப் பலவாறாகவும் வணங்கித் தோத்திரம் செய்து, "அம்பிகையே! உன்னுடைய கடைக்கண் வீச்சு பட்ட மாத்திரத்திலேயே நான் திவ்விய உருவத்தைப் பெற்று விட்டேன். இனி என்னுடைய இந்த உருவத்திற்குத் தகுந்த பயனை அடையும்படியாகத் தாங்கள்தான் எனக்கு அருள்புரிய வேண்டும். முன்பொரு சமயம், பார்வதிதேவியின் திருமணத்தை உத்தேசித்துப் பரமசிவனாரின் மேல் நான் விட்ட மன்மத பாணங்கள் பிரயோஜனம் இல்லாமல் போனபடியால், இப்போது அதே பாணங்களை அவர்மீது நான் பிரயோகஞ் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது அவருடைய கோபத்துக்கு ஆளாகி நான் எரிந்துபோக நேர்ந்தால், இப்போது கொடுத்தருளியதுபோல் எனக்குத் தேகத்தை மீண்டும் தாங்கள்தான் தந்தருளவேண்டும். தங்களால் அப்படி அளிக்கப்படும் சரீரம் நரைதிரை மூப்பின்றி அழிவில்லாமல் வாழ்ந்து வரவும், நான் விடப்போகும்,



காமபாணங்களினால் பரமேஸ்வரர் அளவுகடந்த காமவசப்பட்டு, என் தேவி எங்கே? என் தேவி எங்கே என்று தேடியலைய வேண்டும். அப்போது தாங்கள் அவருடைய ஆசைகளுக்கு இணங்கிவிடக் கூடாது. இந்தக் காரியத்திற்கு அவர் என்னிடமே வந்து என் தயவைக்கோர வேண்டும். என்னுடைய உதவியின் மூலமாகவே அவருக்கு மோகதாபங்கள் திரும்படிச் செய்ய வேண்டும்! அதற்கான மார்க்கங்களைத் தாங்கள்தான் எனக்குச் சொல்லியருள வேண்டும்!" என்று வேண்டினான்.

அதற்குக் காமாட்சிதேவி, "மன்மதனே! நீ விரும்பும் வரத்தை உனக்குத் தந்தேன். நான் என் நாயகரின் பக்கமாக இருக்காமல், மறைவாக உன் பக்கமாகவே இருந்து, உனக்கு வேண்டிய உபகாரங்களையெல்லாம் செவ்வனே செய்து தருகிறேன். இனி நீ ஈசனிடம் சென்று, உனக்கு விருப்பமான காரியங்களைச் செய்வதில் ஈடுபடு!'' என்று உத்தரவிட்டாள். மன்மதனும் தேவியை நமஸ்கரித்து விடைபெற்றுக்

கொண்டான். அங்கிருந்து புறப்பட்டுச் சென்று, வெகு சீக்கிரத்திலேயே கைலையங்கிரியை அவன் அடைந்தான். சிவபெருமானின் சந்நிதானத்தை நோக்கிக் குறிபார்த்து, அனலைப் பொழியும் பாணங்களைக் கரும்பு வில்லில் பூட்டிப் பிரயோகித்தான். அப்பாணங்களால் தாக்கப்பெற்ற சர்வேஸ்வரன், "ஓஹோ! இவன் மன்மதனேதான்! தேவியின் ஆசிகளைப் பெற்று, அவளுடைய உத்தரவுப்படிதான் இங்கே வந்திருக்கிறான்!" என்று எண்ணி மனம் பூரித்தார். தேவியின் ஆணைப்படியே தாமும் நடந்து கொள்ள வேண்டும் என்று சித்தத்துடன், தம் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்த்தார். ஆனால் முன்போல் அதன் ஜ்வாலை மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிவிட வில்லை. அதற்கு மாறாக அவனுடைய சிரசில் இரத்தினக்கல் போல் ஜ்வலித்தது. அதனைக் கண்ணுற்ற பரமேஸ்வரன் தம் கையிலிருந்த சூலாயுதத்தை அவன் மீது எறிந்தார். ஆனால் அதுவும் அவனைத் தாக்கி விடவில்லை. மாறாக அது அவனுடைய வெற்றிக் கொடி போல் கம்பீரமாக வந்து நின்றது. உடனே ஈசன் பாசுபதாஸ்திரத்தை அவன் மீது பிரயோகம் செய்தார். அதுவும் அவனுடைய கழுத்தில் வெற்றிச் சின்னம்போல் புஷ்பமாலையாகவே வந்து விழுந்தது. அதைப் பார்த்த பரமேஸ்வரன், நம் தேவி இவனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் நாம் நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்த போதிலும் அது அவனை எரித்து விடவில்லை. இந்த மன்மதன், அவன் எண்ணியபடியெல்லாம் என்னை இப்போது ஆட்டி வைக்க முடியும்! அதற்குத் தேவியும் அவனோடு சேர்ந்து ஒத்துழைப்பாள். அதனால்தான் இவன் அழகு பொருந்திய உடல் வனப்புடனும், அழிவில்லாதவனாகவும், தேக திடத்துடனும் காணப்படுகிறான். நம் சக்திதேவியின் வழிப்படியே நாமும் செல்வதுதான் முறையாகும். அதற்கு மாறாக

நடப்பது சரியல்ல! அதனால் இனியும் அவளுடைய இஷ்டசித்திகளுக்கு மாறாக நாம் என்னதான் செய்துவிட்டாலும், அது பயனின்றித்தான் போகும்!" என்று தம் மனதிற்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தார். உடனே அவர் மன்மத பாணங்களுக்கு இலக்காகி, அளவு கடந்த மோகாவேசம் பொங்கியெழ, அந்த வினாடியிலேயே தமது சிம்மாசனத்தை விட்டிறங்கி, அந்தப்புரம் நோக்கிச் சென்றார். அந்தப்புரத்தை அடைந்ததும், அதன் கதவுகளை மூடிவிட்டு, உள்ளே சென்று தேவியை நோக்கி, ஆவலுடன் தம் விழிகளை ஓடவிட்டார். ஆனால் அங்கே தேவி இல்லாததால், அவர் ஏமாற்றத்தினாலும், விரகதாபத்தினாலும் நிலைகொள்ளாமல் தவிதவித்தார்.

காஞ்சித் தலத்திலுள்ள திரிபுரசுந்தரியாகிய சக்திதேவி, கைலாயம் முதலிய தலங்களிலெல்லாம் இருந்து வரும் தனது அம்சமாகிய கௌரி அம்சத்தின் சக்திகளையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு காமாட்சி என்னும் ஒரே ஒரு சக்தி உருவமாக அமர்ந்து விட்டதனால், கைலையங்கிரியில் தமது அந்தப்புரத்தில் அவளைக் காணாமல் ஈசன் கலங்கினார்.

அதனால் அவர் கைலையங்கிரியை விட்டு நீங்கித் தமது இருப்பிடங்களாகிய ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று அங்கெல்லாம் தேவியைத் தேடினார். ஆனால் அங்கு எங்குமே தேவி தென்படவில்லை. கடைசியில் தேவியின் இராஜஸ்தானமாகிய காஞ்சி காமகோடி பீடத்திலாவது அவள் வீற்றிருக்கிறாளா பார்க்கலாம் என்று கருதி, ஈஸ்வரன் காஞ்சிக்கு வந்தார். அங்கே காமாட்சிதேவியானவள் கௌரியாக வீற்றிருப்பதைப் பார்த்து வியப்படைந்தார். தமது காம இச்சையை அவளிடம் தணித்துக் கொள்ள விரும்பி, அவளை நெருங்கிச் சென்றார்.

அளவற்ற அழகு வாய்ந்த மோகினியைப் போன்ற உருவத்தைக் கொண்டவளும், தவவடிவினளுமாகிய

கௌரிதேவி, தன்னை நெருங்கிப் பரமேஸ்வரர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்து, ஊடல் கொண்டவளைப் போல்,அவர் கையில் சிக்கி விடாமல் பிணங்கினாள். "மோகாவேசப் பெருக்குடன் என்னை நெருங்கி வரும் நீ யார்? நீ எதற்காக என்னை நாடி இங்கு வந்தாய்? நீ ஈஸ்வரனா?" என்று அவள் வினவினாள். அதற்குப் பெருமான் ''கௌரிதேவியே! நீ என்னுடைய பத்தினியாக இருந்தும் எனக்குப் பிடித்தமான தலங்களையெல்லாம் விட்டுவிட்டு இந்தக் காஞ்சித் தலத்திலே பிரும்ம, விஷ்ணு, ருத்திரர்களுக்கு இருப்பிடமாகிய ஆதிசக்தி பீடத்தில் மட்டும் வந்து அமர்ந்திருக்கும் காரணம் என்ன? எனது குடும்பத்தின் தலைவியாகவும், ஆசை மனைவியாகவும் என் காம இச்சைகளைப் பக்குவமாகத் தணிப்பவளாகவும் இருந்து வரும் நீ இப்போது மட்டும் என்மேல் கோபமடைந்திருப்பவள் போல் இருப்பது ஏன்? அதற்குக் காரணம்தான் என்ன? அதை எனக்குக் கூறி விளக்கி, என் காம இச்சையை உடனடியாகத் தணித்து விட வேண்டும்!" என்று வேண்டினார். அதற்குக் காமாட்சிதேவியானவள், "உங்களுடைய உடலில் இப்போது தோன்றியிருக்கும் காம இச்சையைத் தணித்துவிடக் கூடிய கௌரிதேவி நானல்ல. அதற்கு என்னைக் கேட்பதை விட்டுவிட்டு மன்மதனிடம் போய்க் கேளுங்கள். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் காம இச்சையை அவனே தவிர்த்தும் வைப்பான்!" என்று மொழிந்தாள். உடனே சர்வேஸ்வரன், "இவள் மன்மதனுக்கு உதவி செய்வதற்காகவே இப்படிப் பேசுகிறாள்!'' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார். ஆனால் மன்மதனின் தயவை நாடிச் செல்ல விரும்பாதவர் போல் அதற்கு மறுத்துத் தேவியின் திருக்கரத்தைப் பற்ற முயன்றார். அப்போது காமாட்சிதேவியானவள் தமது கடைக்கண் பார்வையிலிருந்து கோடி மன்மதர்களை உற்பத்தி செய்து, அவர்களை ஈசனின் மீது ஏவினாள். அதன்படியே அவர்களும் சர்வேஸ்வரனைச் சூழ்ந்து

கொண்டு அவரோடு யுத்தம் புரியத் தொடங்கினார்கள். உடனே ஈஸ்வரன் ஒரு வினாடிப் பொழுதிற்குள் கோடி ருத்திரர்களைத் தோற்றுவித்து, அவர்களின் மேல் ஏவினார். அதைப் பார்த்ததும், காமக்கடவுளான மன்மதன் ஒரு வினாடி கலங்கினான். ஆனால் தேவியோ, "இந்தப் போரில் ஒருக்கால் அவன் இறந்துவிட நேர்ந்தால் அவனை மறுபடியும் படைக்க வேண்டும்!" என்று அவனுக்குத் தான் அளித்த வரத்தை நினைவுபடுத்திக் கொண்டவளாய், மேலும் கோடி மன்மதர்களை உற்பத்தி செய்தாள். அதைப்போலவே சங்கரரும் கோடி ருத்திர மூர்த்திகளைத் தோற்றுவித்தார். இப்படியாகவே ஈசனும், ஈஸ்வரியும், ருத்திர கோடிகளையும், மன்மத கோடிகளையும் சிருஷ்டி செய்து, இருதரப்பினருக்கும் யுத்தத்தை மூட்டி, அதற்குச் சாட்சியாகத் தாங்களே பார்த்துக் கொண்டிருந்தார்கள். யுத்தம் வினாடிக்கு வினாடி அதிகரித்துக் கொண்டே போயிற்று. அப்போது தேவியின் மனவிருப்பப்படியே மன்மத கோடிகள் ருத்திர கோடிகளை ஜெயித்து விட்டார்கள். அதைக் கண்டதும் மன்மதன் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. அவன் தனது பஞ்ச பாணங்களையும் ருத்திரகோடிகளின் மீது பிரயோகிக்க விரும்பினான். தேவியின் எண்ணமும், அவனுடைய எண்ணமும் ஒன்றாக இருப்பதை அறிந்து கொண்ட ஈஸ்வரன், அவ்விருவர் எண்ணத்திற்கும் இசைந்து கொடுக்க வேண்டும் என்று கருதினார்.

ஆகையால், மன்மதன் தன் விருப்பப்படியே தாமரை, அசோகு, மா, மல்லிகை, நீலோற்பவம் என்னும் ஐந்து விதமான புஷ்பங்களையும் பரமேஸ்வரனின் மீது ஒன்றன்பின் ஒன்றாக ஏவினான். அம்மலர்களை அழிக்க விரும்பாத ஈஸ்வரன், அவற்றில் தாமரையை தமக்கு ஆசனமாகவும், அசோகைத் தமது மேனி லாவண்யத்திற்காகவும், மாந்தளிரைப் பீதாம்பரமாகவும், மல்லிகையை மாலையாகவும், நீலோற்பவத்தை நெற்றிக்

கண்ணுக்குக் குளிர்ச்சி கொடுப்பதாகவும் கொண்டு அமர்ந்திருந்தார். அப்போது மன்மதன், "அன்றொரு நாள் தாருகாவனத்தில் உங்களை மதித்து வணங்காத முனிவர்களின் பத்தினிகளை பெருஞ் சோதனைக்குள்ளாக்கினீர்களே, அப்போது நீங்கள் அடைந்ததுதான் என்ன? இப்போது தேவியிடம் நீங்கள் விரும்பும் சுகத்தைப் பெற்று மகிழலாமே!" என்றான். அதற்கு இசைந்த பெருமானும் தேவியை நெருங்கிச் சென்றார். அவருடைய மனநிலையை உணர்ந்து கொண்ட தேவி, ம்ன்மதனின் மனோபீஷ்டம் பூர்த்தியாகிவிட்டதனால், இனியும் ஈசனைத் தவிக்கவிடுவது நியாயமல்ல என்று எண்ணினாள். அதனால் அவள், "சர்வேஸ்வரனே! இனி நீங்கள் கௌரிதேவியோடு கூடி காமசுகம் பெறுங்கள்!" என்று சொல்லித் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட மன்மதர்களையும், பூரண தேஜஸுடன் அழியா வரம் பெற்ற மன்மதனையும், தன்னுடைய காமகோடி பீடத்திற்கு நேராக வானவெளியில் நட்சத்திர வடிவங்களாகத் தங்கியிருக்கச் செய்து பராசக்தியின் வடிவத்தில் மறைந்து விட்டாள். அதன் பிறகு ஈஸ்வரனும் தம் இஷ்டசித்தியைப் பூர்த்தி செய்து கொண்டு கைலாயத்தை அடைந்தார்.

மன்மதக் கூட்டங்கள் நட்சத்திர வடிவங்களாகக் காமகோடி பீடத்திற்கு மேலே ஆகாயத்தில் வசித்து வருவதனால், சூரியன் முதலான நவக்கிரங்களும் அந்த மன்மத மண்டலத்திற்கு நேராக வரும்போது, அந்த வழியாகப் போகாமல், பிரதட்சிண்மாகப் போகிறார்கள். அந்தக் காரணத்தினால் காஞ்சி நகரம் திசை மயக்குடையது, என்றும், தேவியினால் தோற்றுவிக்கப்பட்ட மன்மதர்களால் ருத்திரகோடிகள் ஜயிக்கப்பட்டார்களாகையால் ருத்திரஜித் க்ஷேத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.

முன்னொரு காலத்தில் பிருமதேவன் பூலோகத்திலுள்ள ஸ்ரீ கைலாயம் முதலான

சிவஸ்தலங்களைப் பார்த்துவர விரும்பித் தம்முடைய இருப்பிடமாகிய சத்தியலோகத்தை விட்டுப் பூலோகத்திற்கு வந்தார். அங்கே சகல சிவஸ்தலங்களைத் தரிசித்தும், அங்கு எந்த இடத்திலும் தேவி இல்லாததைக் கண்டு, "இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே, இதற்குரிய காரணம் என்ன?" என்று தமது ஞானதிருஷ்டியால் கூர்ந்து நோக்கினார். உடனே, இதெல்லாம் காமாட்சிதேவியின் விளையாட்டுகள் என்று தெரிந்து கொண்டார். அந்த வினாடியிலேயே அவர் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். சிவஸ்தலங்களிலெல்லாம் சர்வேஸ்வரன் பிரத்திய்ட்சமாகியிருப்பது போலவே, தேவியும் பிரத்தியட்சமாகி இருக்கவேண்டுமென்று அவர் திரிபுரசுந்தரியைப் பிரார்த்தனை செய்து வணங்கினார். தேவியைப் பலவாறாகவும் வணங்கித் துதித்து, அவருடைய நாமத்தை மனதில் இருத்திப் பன்னிரண்டு வருஷ காலம் கடுந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தை மெச்சி இராஜராஜேஸ்வரிதேவி அவர் முன்னிலையில் காட்சி தந்தருளினாள். "நான்முகனே! மன்மதனின் வேண்டுகோளுக்கு இணங்கியே சர்வேஸ்வரனுக்குப் போகசக்தி வடிவம் தோன்றாமல் இருப்பதற்காகச் சிவஸ்தலங்கள் தோறும் கௌரிதேவியை இல்லாதபடிச் செய்தேன்! உனக்கு அவளைத் தரிசித்து மகிழ வேண்டுமென்றால் க்ஷேத்திரங்கள் அனைத்திற்கும் சென்று கௌரிதேவியை நீயே பிரதிஷ்டை செய்து ஈஸ்வர தரிசனத்துடன், தேவி தரிசனமும் செய்து ஆனந்தப்பட்டுக் கொள்!" என்று அனுக்கிரகித்தாள்.

பிருமதேவன், தேவியின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, "சகலலோக நாயகியே! முதலில் இந்தக் காஞ்சித்தலத்தில் உள்ள சிவாலயங்கள் அனைத்திற்கும் சென்று கௌரியாகிய அம்பிகையைத் தரிசித்த பிறகல்லவோ, மற்றத்தலங்களுக்கும் நான் போய் அம்பிகையைப் பிரதிஷ்டை செய்து வணங்க வேண்டும்! இந்தத்



தலத்தில் தேவியைத் தரிசிப்பது எப்படி?" என்று கேட்டார். அதற்குத் தேவியானவள், "இந்தத் தலத்தில் முன்பொரு சமயம் ருத்திரகோடிகளுக்கும், மன்மத கோடிகளுக்கும் யுத்தம் மூண்டது அல்லவா? அப்போது ஈசன் இங்குள்ள சூத மரத்தின் அடியில் கௌரிதேவி சகிதமாக ஒட்டியாண பீடத்தில் சென்றதனால், ஜோதிலிங்க வடிவினராகத் தோன்றுவார். அப்போது கௌரியானவள் சூதலிங்க சகிதமாக உன் கண்களுக்குக் காட்சியளிப்பாள்!" என்றாள். அதைக் கேட்ட நான்முகன், "இராஜராஜேஸ்வரியே! ஒவ்வொரு வருஷமும் இந்தக் காஞ்சித் தலத்தில் சூதநாதருக்கு விவாக மகோத்ஸவம் நடத்துவது எப்படி? அதற்கு ஒரு மார்க்கத்தையும் தாங்கள்தான் எனக்குச் சொல்லியருள வேண்டும்!" என்றார். அதற்குத் தேவியானவள் ஒரு முகூர்த்த காலம் வரையிலும் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு சொல்லத் தொடங்கினாள்.

"சிருஷ்டிகர்த்தாவே! இந்தத் தலத்திலுள்ள சிவன் கோவில்களில் இருக்கக் கூடிய சக்திகள் அனைவரும்

என்னிடத்திலேயே கலந்திருக்கிறபடியால், அந்தச் சக்திகளெல்லாம் ஒரு சக்தியாக ஒரே ஒரு உருவம் கொண்டு ஏகாம்பிகை என்ற திருப்பெயரோடு என் நெற்றிக்கண்ணிலிருந்து ஒரு நொடிப் பொழுதிற்குள் சித்சோதி வடிவமாக அவதரிக்கப் போகிறாள். அந்த அம்பிகையானவள் பூர்விகத்தில் ஏகாம்பரேசுவரை ஏகாக்கிரக சித்தத்தோடு வணங்கி வழிபடவேண்டும் என்ற எண்ணத்தால், அதியற்புத அழகு பொருந்தியவளாகவும், தவ வடிவினளாகவும் இருந்து கடுந்தவம் புரிந்து, அதன்பிறகு பதியுடன் சேர்ந்து மகிழ்ந்து நித்திய கல்யாணியாகத் திகழ்ந்தவள். ஆகையால் என் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றப் போகிற அந்தச் ஜோதி வடிவமாகிய அம்பிகையைப் போலவே நீ தங்கத்தினால் ஒரு பிம்பம் செய்து, என்னுடைய இந்தக் கோவிலின் உள்ளே, நிலையான ஓர் இடத்தில், நிரந்தரமாகப் பிரதிஷ்டை செய்துவிடு. பிறகு கல்யாண மகோத்ஸவத்திற்கான காலநேரம் வரும்போது அந்த ஏகாம்பர நாதருக்கு அந்த அம்பிகையை திருமணம் செய்து வைத்து விடு! அந்த அம்பிகையைப் போலவே விக்ரகங்கள் செய்து, அவைகளில் ஏகாம்பிகையை ஆவாகித்து, இத்தலத்திலுள்ள சிவன் கோவில்கள் அனைத்திலும் மூல லிங்க சக்திகளாக அமைத்துச் சிவதரிசனத்தோடு அம்பிகையையும் சேர்த்துத் தரிசித்து இன்புறுவாயாக. அந்த விக்கிரக உருவமாய் இருக்கின்ற அம்பிகைகளைத் தவிர வேறு மூல சக்திகள் எதையுமே இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்யக் கூடாது."

"நான்முகனே! சுவர்ணகாமாட்சியை ஏகாம்பரேஸ்வரருக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று கூறினேன் அல்லவா? அது எப்படி என்பதையும் உனக்குச் சொல்லுகிறேன். ஏகாம்பரேஸ்வரருடைய திருமண நாளில் இந்தக் கோவிலில் இருக்கும் சுவர்ணகாமாட்சியை ஏகாம்பரேஸ்வரருடைய ஆலயத்தினுள் அழைத்து வரச் செய்து, சாஸ்திர முறைப்படி அவ்விருவருக்கும்

திருமணத்தை நடத்திவைக்க வேண்டும். அதற்கு மறுநாள் மாலை நேரத்தில் தம்பதிகள் இருவரும் வீதிவலம் வரும்போது திருமணக் கோலத்துடன் திகழும் சுவர்ணகாமாட்சியை என்னுடைய ஆலயத்தினுள் எழுந்தருளச் செய்துவிட்டு, புதுமாப்பிள்ளையான ஏகாம்பரேஸ்வரரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டும். பிறகு சுவர்ணகாமாட்சிக்கு அவளுடைய ஸ்தானமாகிய துருவ ஸ்தானத்தில், விவாகத்தையொட்டி, இரண்டு நாட்கள் பூஜை புனஸ்காரங்கள் எதுவும் நடக்காமல் போனபடியால், அதற்குப் பரிகாரம் செய்யும் விதத்தில், வைதிக தந்திரானுசாரமாகச் சிஷ்யர்களோடு அமர்ந்திருக்கும் துர்வாச மகரிஷி மூலமாகச் சஹஸ்ர கலச அபிஷேகம் முதலான பூஜை வகைகளை அதி சிறப்பாகச் செய்து, அதன்பிறகு தினசரி பூஜையை நிறைவேற்றி நீ விரும்பிய வரங்களைப் பெற்றுக் கொள்வாயாக! அதைப் போலவே ஒவ்வொரு வருஷமும் விவாக மகோத்சவம் நடைபெறுவதற்கான வழிவகைகளையும் ஏற்பாடு செய்து வைத்துவிட்டுப் பிறகு உன் சத்தியலோகத்திற்குப் போய்ச் சேர்வாய்!" என்று கூறி முடித்தாள். பிறகு தேவியானவள் பராசக்தி வடிவத்தில் ஐக்கியமாகித் தம்மிடத்தில் ஐக்கியமாகியிருந்த சகல க்ஷேத்திர வாசினிகளாகிய சர்வ சக்திகளையும் அந்தந்தத் தலங்களிலும் பிரசன்னமாகியிருந்து அனைவருக்கும் தரிசனம் அளிக்கும்படிச் செய்தார். அதைப் போலவே "அந்தச் சக்திகளெல்லாம், அந்தந்த மூல பிம்பங்களில் சேர்ந்து ஜொலித்தன.

சுவர்ணகாமாட்சி ஆவிர்ப்பவம்

சுவர்ணகாமாட்சிக்கும், ஏகாம்பரேஸ்வரருக்கும் செய்ய வேண்டிய திருமண விதிமுறைகளை நான்முகனுக்குக் கூறி முடித்ததும் அம்பிகையின் நெற்றிக் கண்ணிலிருந்து சித்சொரூபிணியாகக் கௌரி என்னும் அம்பிகை ஜோதி வடிவமாகப்

பிரத்தியட்சமானாள். அந்தக் கௌரிதேவியைப் பார்த்ததும் பிருமன் வியந்தவனாக அவளைப் பலவாறாகவும் போற்றி வணங்கித் துதித்தான். தேவியின் உத்தரவுப்படியே அந்தக் கௌரிதேவியைப் போன்ற விக்ரகத்தைப் பொன்னினால் செய்து முடித்தான்.

திருவுருவம்

அன்று மலர்ந்த தாமரைப் புஷ்பம் போன்ற இரு கருவிழிகளைக் கொண்டதாகவும், இரண்டு கைகளை உடையதாகவும், அவற்றில் வலது கரம் கிளியைத் தாங்கிக் கொண்டும், இடது கரம் தொங்கவிட்டிருக்கும் பாவனையிலும், வயிறு மூன்று மடிப்புகளோடு கூடியதாகவும், தென்பாரிசம் வில்போன்ற அமைப்பை உடையதாகவும், இடை மெலிவுற்றும், மற்ற அங்கங்களெல்லாம் அதற்குரிய ஆபரணங்களால் பிரகாசித்துக் கொண்டும், பீதாம்பரதாரிணியாகவும், திரிபுரசுந்தரி தேவியின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய கௌரிதேவி காட்சியளித்தாள்.

ஆவிர்ப்பவித்த காலம்

சுவேதவராக கல்பம், ஏழாவதாகிய உச்சியம் என்கிற மன்வந்தரம், தாமச காலம், கிருத யுகம், ஹயக்கிரீவர் அவதார காலம், ஸ்ரீமுக வருஷம், சூரியன் துலாத்தில் இருக்கும் சமயம், கார்த்திகை மாதம், கிருஷ்ண பட்சம், தசமி திதி, சுக்கிர வார உதயம், பூர்வ பங்குனி நட்சத்திரம், மத்திய பாதம், சூரியோதய காலம். இந்தச் சுபதினத்தில் தான் திரிபுர சுந்தரியின் நெற்றிக் கண்ணிலிருந்து கௌரிஅம்மன் அவதரித்தாள்.

பிரதிஷ்டை செய்த வரலாறு

தன் எதிரே காட்சியளித்த கௌரிதேவியைப் போன்ற பிம்பத்தைப் பொன்னினால் செய்து முடித்த

நான்முகன், அந்த விக்ரகத்தைப் பிலத்துக்குத் தெற்குப் பக்கத்தில் நிலையான ஓரிடத்தில் துருவ ஸ்தானம் என்று ஒரு பெயரிட்டு, அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தார். பிரதிஷ்டை செய்த மாதமாகிய ஐப்பசி மாதம் முதலாக, அதற்கு ஆறாவது மாதமாகிய பங்குனி மாதம் வரையிலும், விசேஷமான பூஜைகளும், மகா அபிஷேக நைவேத்தியங்களும் சிறப்பாக நடத்தி வந்து ஏகாம்பரேஸ்வரருடைய திருமண நாளில் சூதநாதருடைய கோவிலில் எழுந்தருளச் செய்தார். பிறகு சுவர்ணாம்பிகைக்கும், ஏகாம்பரேஸ்வரருக்கும் வேதாகம விதிப்படித் திருக்கல்யாணம் நடத்தி வைத்து, மறுநாள் திருமணக் கோலத்துடன் உற்சவம் நடத்தி, புதுமாப்பிள்ளையை அவருடைய கோவிலில் தங்கியிருக்கும்படியாக அவருடைய பரிவாரங்களுடன் அனுப்பி வைத்தார். பிறகு சுவர்ணகாமாட்சியை அவளுடைய ஆலயமாகிய திருவாலயத்தில் எழுந்தருளச் செய்து, முன்பு கூறியபடியே சாந்தி அபிஷேக அர்ச்சனைகளையும் குறைவரச் செய்து முடித்தார். அதன் பின்னர் ஒரு தாமரைப் புஷ்பத்தை எடுத்து தேவியை வணங்கியபடியே வானவெளியில் அதை வீசியெறிந்தார். அந்தத் தாமரைமலர் வானத்தில் பட்டவுடன், சந்திரனுடைய அம்சமாக ஒரு மகாராஜன் வெளிக்கிளம்பி வந்தான். நான்முகன் அவனை நோக்கி, “இப்போது நான் செய்து முடித்த இந்த விவாக மகோத்சவத்தைப் போலவே ஒவ்வொரு வருஷமும் நடத்தி வரும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். நீ ஆகாசபூபாலன் என்னும் பெயரோடு இந்தத் தலத்தில் வாழ்ந்து வருவாயாக!” என்று கட்டளையிட்டு ஆசிகூறி, அள்ள அள்ளக் குறையாத தன பாத்திரம் ஒன்றையும் அவனிடம் கொடுத்தார். பிறகு அவர் காஞ்சித்தலத்திலும், பூலோகத்திலும் உள்ள சிவன் கோவில்கள் அனைத்திற்கும் சென்று, அந்தக் கோவில்களிலெல்லாம் தேவிகளைப் பிரதிஷ்டை செய்து, ஈசனோடு ஈஸ்வரிகளையும் தரிசனம் செய்து ஆனந்தப்

பரவசமடைந்தார். பிறகு தம்முடைய சத்தியலோகத்திற்கு அவர் புறப்பட்டுச் சென்றார்.

இனி அந்தப் பிருமனுக்குக் கண்களிரண்டும் குருடாகி விட்டபோது, அதற்கு சரஸ்வதிதேவி கூறிய பரிகார முறைகளைப் பற்றிய விவரம் ;

பூலோகத்தில் சகல கோவில்களிலும் ஈசனோடு சக்திதேவிகளையும் பிரதிஷ்டை செய்துவிட்டு நான்முகன் தன் உலகம் போய்ச் சேர்ந்தான் அல்லவா? சத்தியலோகத்திற்குள் அவன் காலடி எடுத்து வைத்ததுமே, அவனுடைய இரு கண்களும் பார்வையை இழந்து விட்டன. தான் குருடாகிப் போய்விட்டதைக் கண்டு மனம் வருந்தினான் பிருமன். அப்போது கலைவாணியாகிய சரஸ்வதிதேவி தன் நாயகரை நோக்கி, ''உங்களுக்கு எதனால் கண்களிரண்டும் குருடாகி விட்டிருக்கிறது என்ற காரணத்தை கூறுகின்றேன்! காஞ்சி காமகோடி பீடத்தில் காயத்திரி மண்டபத்துக்கு அடியில் பிலாகாசம் எதுவரையில் இருக்கிறதோ, அதுவரையிலும் குண்டலினிக் கிரகம் என்னும் பெயரால் பூர்விகத்தில் ஈஸ்வரனால் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. அந்த இடத்தை நீங்கள் காலால் மிதித்து விட்டீர்கள். அதனால்தான் உங்களுக்குக் கண்பார்வை போய்விட்டது. இனி நீங்கள் முன் போலவே அந்த இடத்திற்குச் சென்று ஸ்ரீசக்கரபூஜையை செய்து வருவீர்களானால் உங்களுடைய இழந்த பார்வையை நீங்கள் திரும்பப் பெற்று விடுவீர்கள். அப்படிச் செய்யாவிட்டால், உங்களுடைய குருட்டுத்தனம் மாறவே மாறாது. இதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை!" என்று சொன்னாள். உடனே நான்முகன் அளவுகடந்த ஆச்சரியத்தோடு, "கலைவாணியே! இந்தப் பரிகார முறையை நீ எப்படித் தெரிந்து கொண்டாய்?" என்று கேட்டான். அதற்குக் கலைமகள், "சர்வேஸ்வரன் ஸ்ரீசக்கரப் பிரதிஷ்டை செய்தபோது இந்த ஸ்ரீசக்கர பூஜையை ருத்திரயாமளம் என்னும் தேவி மந்திரத்தால்

சொல்லி, விதிமுறைப்படி வணங்கி வழிபட வேண்டும். இந்த இடத்தை யாராவது மிதித்து விடுவார்களானால், அவர்களுடைய கண்கள் உடனே பார்வையை இழந்து குருடாகி விடும். ஆனால் அதற்குப் பரிகாரமாக மீண்டும் இங்கு வந்து பூஜித்தால், குருட்டுத்தனம் நீங்கிப் பார்வையைப் பெற்று விடுவார்கள்!'' என்று கூறியிருக்கிறார். ஆகையால் அம்முறைப்படியே நீங்கள் நடந்து கொள்வதுதான் நல்லது!" என்று மொழிந்தாள்.

உடனே நான்முகன் தன் பத்தினியோடு புறப்பட்டுக் காமகோட்டத்தை அடைந்தான். அங்கு ஸ்ரீசக்கர பூஜை செய்து இழந்த கண்பார்வையை மீண்டும் பெற்றான். அங்குள்ள சுவர்ணகாமாட்சியைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தான். "இந்தக் காமகோடி பீடத்தில் யாராவது காலை வைத்து மிதித்து, அதனால் பாவங்களுக்கு உட்பட்டால், அவன் இந்தச் சுவர்ணகாமாட்சியைத் தரிசனம் செய்தவுடனேயே அந்தப் பாவத்திலிருந்தும் விடுபட்டு விடுவான்! அப்படியே தேவியின் தரிசனம் அவனுக்குக் கிடைக்காமல் போய்விடுமாயின், ஸ்ரீசக்கர பூஜையை ருத்ரயாமள தந்திரத்தில் கூறியுள்ளபடி அவன் செய்து விட வேண்டும்! அதன்மூலம் அவனுடைய அந்தப் பாவத்திற்குப் பரிகாரம் கிடைத்து விடும்!" என்று வரமளித்தாள்!

இனி சர்வானுக்கிரக மூர்த்தியாக விளங்கும் சுவர்ணாம்பிகைக்கும், தபஸ்காமாட்சிக்கும், பராசக்தியாகிய திரிபுரசுந்தரிக்கும் காரணப் பெயர்களாக உள்ள பஞ்சநாம விவரணங்களைப் பற்றிப் பார்ப்போம்.

தேவிபேத பஞ்சநாம விவரணம்

சுவர்ணாங்கி, சுகஹஸ்தை, சூதலிங்க வல்லபை, காமாட்சிதேவி, தர்மதேவி என்ற இந்த ஐந்து திருப்பெயர்களும் சுவர்ணகாமாட்சிதேவியின் மறுபெயர்களாகும்.

தபஸ்வினி, கனஸ்யாமா (நல்ல பச்சை நிறமுள்ளவள்) சர்வ சைலாலயேஸ்வரி, காமாட்சி, காளி. இந்த ஐந்து திருப்பெயர்களும் தபஸ் காமாட்சிதேவியின் பெயர்களாகும்.

திரிபுரை, இராஜராஜேஸ்வரி, மகாகாமேச வல்லபை, காமாட்சி, காமகோடி. இந்த ஐந்து திருப்பெயர்களும் திரிபுராம்பிகையாகிய பராசக்தியின் பெயர்களாகும்.

இதிலிருந்து அம்பிகையானவள் மூன்று விதமான கோலத்துடன் ஸ்ரீகாமகோடி பீடத்திலுள்ள ஆலயத்தில் பிரசன்னமாகியிருக்கிறாள் என்பது புலனாகிறது.

அந்தப் பராசக்திதேவியாகிய திரிபுராம்பிகையினுடைய அன்புக் காதலராகிய ஜோதி வடிவினரான சூதலிங்க நாதருக்கும், அவர் அம்சமாகிய தழுவக் குழைந்த பெருமானுக்கும் காரணப் பெயர்களாகவுள்ள நாமங்கள் :

சிவபேத பஞ்சநாம விவரணம்

சூத ஜ்யோதி, நிர்க்குணாத்மா, சிவனார், காமேஸ்வரர், ஏகாம்பரநாதர். இந்த ஐந்து திருப்பெயர்களும் சூதலிங்கப் பெருமாளுடைய பெயர்களாகும்.

இரசாதலலிங்கம், ருத்திரகோடி, சதாசிவனார், சுகுணர், ஏகாம்பரநாதர். இந்த ஐந்து திருப் பெயர்களும் தழுவக் குழைந்த பெருமாளுடைய காரணப் பெயர்களாகும்.

இவைகளைத் தவிர அம்பிகையினுடைய அர்த்தாம்சமாகிய வரதராஜருக்கும் காரணப் பெயர்கள் உண்டு.

விஷ்ணு பஞ்சநாம விவரணம்

யஞ்ஞோத்பவர், புண்ணியகோடி, கஜேந்திரவரதர், தேவராஜர், அபீஷ்டவரதர் என்பதாகும்.

காஞ்சித்தலத்தில் பராசக்திதேவி, சக்தி சம்பந்தத்தால் மூன்று விதமான சக்தியாகவும், சிவசம்பந்தத்தால் இரண்டு விதமான சிவலிங்க வடிவமாகவும், விஷ்ணு சம்பந்தத்தால் ஒருவிதமான விஷ்ணு வடிவமாகவும் மொத்தம் ஆறுவிதமாகத் தன்னுடைய லீலாவினோதத்தின் மூலம் அமர்ந்திருக்கிறாள்.

சிவசக்தி ஐக்கியபூஜா விதியின் வரலாறு

சக்திதேவியானவள் சிவசக்தி, ஐக்கிய வடிவினள் ஆகையால், அத்தேவியை நிர்க்குணபரமான சிவபாவனையாகவும், சகுண பரமான சக்தி பாவனையாகவும் வணங்கி, சிவசக்தியாத்மகமாக அர்ச்சனை செய்ய வேண்டும். பெரிய சாஸ்திரங்களிலும், இவ்வாறு அர்ச்சனை செய்வதுதான் சிறந்த முறை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்த முறைதான் லலிதாம்பிகைக்கு மிகவும் பிரியமானது ஆகும். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டு வணங்குபவர்கள் சர்வ மங்களங்களையும் அடைவார்கள். அதை அறிந்து கொள்ளாமல் சிவசக்திகளை தனித்தனி வடிவங்களாகக் கருதி, லலிதாம்பிகையினிடத்தில் சிவஐக்கிய பாவனையை தவிர்த்து, சக்தி பாவனை மாத்திரம் கொண்டு வழிபட்டால் அவர்கள் அமங்கலத்தையே அடைவார்கள்.

தவக் கோலத்திலுள்ள ஸ்ரீகாமாட்சிதேவியும், சிவசக்தி ஐக்கிய பாவமாக இருக்கும் லலிதாதேவியும் திரிபுராம்பிகையினுடைய சகுண வடிவமாகையால் அத்தேவியை சிவசக்தி ஐக்கிய வடிவினளாகவே

வணங்குதல் வேண்டும். அப்படி வழிபடுவதுதான் தேவிக்கும் விருப்பமானதாகும். அதைத் தெரிந்து கொண்டு, அவ்விதமாகவே வணங்கி வழிபடுபவர்கள் தாங்கள் எண்ணிய மனோபீஷ்டங்களையெல்லாம் அடைவார்கள்.

இதிலிருந்து லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையையும், அவளிடத்தில் தோன்றிய தபஸ் காமாட்சியையும், சிவசக்தி ஐக்கிய பாவனையாகவே, தியானித்துப் பூஜை செய்ய வேண்டுமென்றும், அப்படிப் பூஜை செய்வோர்கள் சர்வ மங்களத்தையும், வேண்டிய வரங்கள் அனைத்தையும் அடைவார்கள் என்றும் தெரிய வருகிறது.

நான்முகனால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற மூன்றாவது திருஉருவமான கௌரிதேவியாகிய சுவர்ணகாமாட்சிதேவி, ஏகாம்பரநாதருடைய பத்தினியாக இருந்து, அவருடைய வாமபாகத்தில் ஒன்றாகவே இருக்கக் கூடியவராகையால், இந்த தேவியைச் சிவத்தோடு ஐக்கியமாகவும், அந்தச் சிவ ரூபத்தை இந்தச் சக்திதேவியோடு ஐக்கியமாகவும் பாவித்து, இருவரையும் ஒன்றாகப் பூஜை செய்யக் கூடாது. முதலில் ஏகாம்பரநாதரையும், அதன்பிறகு அம்பிகையையும் வணங்கி வழிபட வேண்டும். இதை உணர்ந்து கொள்ளாமல் கௌரிதேவியிடத்தில் ஈஸ்வரனுடைய பாவனையும், ஈஸ்வரனிடத்தில் கௌரி தேவியின் பாவனையும் செய்து வழிபடுபவர்கள் ஏழேழு ஜன்மங்களிலும் நரகத்திலேயே கிடந்து உழல்வார்கள். இருவரையும் தனித்தனியாக அந்தந்தப் பாவனையாகவே கருதி வணங்குபவர்கள் சர்வ மங்கள சித்திகளையும் அடைந்து மகிழ்வார்கள்.

இதிலிருந்து, சுவர்ணகாமாட்சியாகிய கௌரிதேவியை சிவ ஐக்கியமாகப் பாவித்துப் பூஜை செய்யக் கூடாது என்றும், தனியாகச் சக்தி பாவனை மாத்திரம் செய்து வணங்க வேண்டும் என்றும்,

அப்படி வழிபடுபவர்கள் சர்வ மங்களத்தையும் பெறுவார்கள் என்றும், ஐக்கிய பாவனையால் வணங்குபவர்கள் நரகத்தை அடைவார்களென்றும் தெரிந்து கொள்ளலாம்.

இனி இரண்டு சக்திகளை ஒருவிதமாகவும், ஒரு சக்தியை மற்றொரு விதமாகவும் வணங்குவதற்குரிய காரணங்கள் :-

பூஜா விதிகளிலுள்ள ஆராதனை இருவகைப்படும். அவை நிர்க்குணபரமான ஆராதனை, சகுணபரமான ஆராதனை. இவற்றில் நிர்க்குணபரமான ஆராதனை சிரேஷ்டம் என்றும், சகுணபரமான ஆராதனை கவுணம் என்றும் கூறப்படும். சிவமே நிர்க்குணமாயுள்ளதாகையால், அந்தச் சிவபரமாகவுள்ள சக்தியை சிவசக்தி ஐக்கியமாக ஆராதிப்பது நிர்க்குணஆராதனை என்றும், சகுணமாக உள்ளது சக்தியாகையால் அந்தச் சக்திபரமாகவுள்ள சக்தியை ஆராதிப்பது சகுண ஆராதனை என்றும் சொல்லப்படும். அது எப்படியென்றால், லலிதா தேவியாகிய திரிபுராம்பிகை நிர்க்குண வடிவமாக உள்ள ஜோதிலிங்கத்தோடு ஐக்கியமாக இருப்பவளாகையாலும், தபஸ் காமாட்சிதேவியானவள் நிர்க்குண ஜோதிலிங்க ஐக்கியமாக உள்ள திரிபுராம்பிகையினுடைய நெற்றிக் கண்ணிலிருந்து பிரசன்னமானவளாகையாலும், அந்த இரு சக்திகளும் நிர்க்குண ஜோதிலிங்க பரமாயுள்ளவர்கள், அந்த இரண்டு சக்திகளையும் சிவசக்தி ஐக்கியபாவனையாகிய நிர்க்குண ஆராதனையால் வழிபட வேண்டும். சுவர்ண காமாட்சியின் திருமண மகோத்சவத்திற்கு அருகமாக லலிதாதேவியாகிய நிர்க்குண சக்தியில் இருந்தும் தோன்றிய சகுண உருவினளான காமாட்சியே சுவர்ணகாமாட்சியாக வந்திருப்பவள் ஆகையால், அந்தக் காமாட்சியைச் சகுண ஆராதனையால், வணங்கித் துதிக்க வேண்டும்.

ஸ்ரீ காஞ்சித் தலத்திலுள்ள காமகோடி பீடத்தில் வீற்றிருக்கும் தேவியானவள், இருவகைத் துன்பங்களுக்கு ஆளாகித் தவிக்கும் பக்தகோடிகளுக்கு வேண்டிய போகங்களைக் கொடுத்து, அவர்களுக்கு அவ்விருவினைகளுக்கும் தீர்ப்பு வருவிப்பதற்குப் போக மூர்த்தியாகிய சுவர்ணகாமாட்சியாகவும், இருவினைத்தொடர்பு வாய்ந்த ஆன்மாக்கள் வேண்டிக் கொள்ளும் தவநெறிகளைக் கொடுத்து, அவர்களுக்கு மலபரிபாகம் வருவிப்பதற்கு போகமூர்த்தியாகிய தபஸ்காமாட்சியாகவும், மலபரிபாகம் வந்த ஆத்மாக்கள் வேண்டிக் கொள்ளும் மெய்ஞான முறைகளைக் கொடுத்து, அவர்களுக்குச் சத்திநிபாதம் வருவதற்கு ஞானமூர்த்தியாகிய லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையாகியும் அவதாரம் செய்கிறாள். இப்படியாக ஆத்மாக்களுக்கு ஏற்படவேண்டிய இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் மூன்றும், உலகில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள சகல ஆத்மாக்களுக்கும் ஒரே சமயத்தில் உண்டாக வேண்டுமென்பதால், இருவினையொப்பு வருவதற்கு ஏதுவான் ஆத்மாக்கள் சிலவாகவும், மலபரிபாகம் வருவதற்கு ஏதுவான ஆத்மாக்கள் சிலவாகவும், சத்திநிபாதம் வருவதற்கு ஏதுவான ஆத்மாக்கள் சிலவாகவும் இருக்கின்றன. ஆகையால் எந்த ஆத்மாக்கள், எந்தெந்தக் காலங்களில், எதையெதையெல்லாம் வேண்டுகிறார்களோ, அவற்றையெல்லாம் அவர்களுக்கு வாரி வழங்கிக் கொடுக்கக் கூடிய போக மூர்த்தியாகவும், யோகமூர்த்தியாகவும், ஞான மூர்த்தியாகவும் விளங்குகிறாள். இந்த மூன்று அம்சங்களில் யோகமும், ஞானமும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாக இருப்பதாலும், அதே சமயம் போகமானது இவற்றிலிருந்து வேறாகத் தனித்து நிற்பதாலும், இம்மூன்றினுடைய தன்மைகளைப் போலவே, யோகப் பிரதமாகிய தபஸ் காமாட்சியும், ஞானப் பிரதமாகிய திரிபுராம்பிகையும் ஒரே சம்பந்தம் உள்ளவர்கள் என்றும், போகப் பிரதமாகிய

சுவர்ணகாமாட்சி அவர்களிலிருந்தும் வேறாகத் தனித்து நிற்பவள் என்றும் தெரியவருகிறது. இதைப் போலவே சிவமும் யோகஞான பரமான சக்திகளிடத்தில் பிரிந்து விடாமல் கலந்தும், போகபரமான சக்தியினிடத்தில் சேர்ந்து கலக்காமல், வேறாகவும் இருந்து வருகிறார். அதனால் யோகஞான சக்திகளைச் சிவசக்தி ஐக்கியபரமான நிர்க்குண ஆராதனையால் வணங்க வேண்டுமென்றும், போக சக்தியைச் சிவசக்தி பேதபரமான சகுண ஆராதனையால் வணங்கித் துதிக்க வேண்டுமென்றும் புரிந்து கொள்ளலாம்.

ஆகையால் வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பெரியோர்கள், போக, யோக, ஞானப் பிரதமான மூன்றுவித சக்தி வடிவங்களையும் மேற்கூறிய வகையில், அந்தந்தப் பேதமாகவே வணங்கி வழிபடுவார்கள். எல்லாம் ஒரு சக்திதான் என்று கருதி எல்லா வடிவங்களையும், நிர்க்குணபரமான ஆராதனையாலாவது சகுண பரமான ஆராதனையாலாவது வணங்கி வழிபட மாட்டார்கள்.

இவைகளைத் தவிர பிம்பபேதங்களைப் போலவே, யந்திரபேதங்களும் இருக்கிறது. ஆகையால் அந்தந்தச் சக்திவடிவங்களுக்கும், யந்திரங்களுக்கும் உரிமையாக விதித்திருக்கும் மந்திர பேதங்களையும், தந்திரபேதங்களையும் தெளிவாக அறிந்து கொண்டு பூஜைகளையும், திருவிழாக்களையும் செய்து வரவேண்டும். அப்படிச் செய்து வந்தால் சர்வமங்களங்களும் சித்திக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

மந்திர தந்திர பேதங்களைத் தெரிந்து செய்ய வேண்டியது எப்படி? அதற்கும் ஒரு மார்க்கம் இருக்கிறது. அதாவது பராசக்தியானவள் காஞ்சித் தலத்தில் மூன்று வகையான சக்திரூபங்களாகவும், இரண்டுவிதமான சிவபேதமாகவும், ஒருவிதமான

விஷ்ணுபேதமாகவும், தோன்றப்படும் ஆறுவிதமான வடிவபேதங்களில் ஆறுவிதமான பேதங்களாகவே கலந்திருக்கிறாள். ஆகவே அர்ச்சனை செய்து வணங்கித் துதிக்கும்போது அந்தப் பேதங்களைத் தெரிந்து கொண்டு மந்திர தந்திரங்களைச் செய்து முடிக்க வேண்டும்.

பராசக்தியின் ஆறுவிதத் தோற்றங்கள்

திரிபுராம்பிகையில் ஜோதிவடிவமாக இருக்கும் பூரண சக்தி வடிவமாகவும், தபோரூபிணியாகிய காமாட்சியிடத்தில் கலாரூபமாகவும், கலியாண கௌரியிடத்தில் கல்யாண கோலத்திற்குரிய அங்க ஸ்வரூபிணியாகவும், நிர்க்குண சூத ஜோதி லிங்கத்தில் நிர்க்குணையாய் நிர்க்குண சிவ் ஸ்வரூபிணியாகவும், தழுவக் குழைந்த பெருமானாக வந்த சகுண லிங்கத்தில் சகுணையாய்ச் சகுண வடிவினளாகவும், பிம்பசக்தி வடிவத்தில் அர்த்தாம்ச சொரூபமாக இருக்கும் வரதராஜப்பெருமாளிடத்தில் புருஷரூபமாகவும் பராசக்திதேவி தோற்றமளிக்கிறாள்.

இப்படிப்பட்ட ஆறுவகையான மூர்த்தி பேதங்களிடம் ஆறுவிதமான அம்சங்களாக வீற்றிருக்கும் பூரண அம்சங்களும் ஒருங்கே நிறைந்திருக்கும் பராசக்திதேவியின் காமராஜ பீடமாகிய காமகோடி பீடத்தை எவனொருவன் கண்டு களிக்காமல் போகிறானோ, அவன் ஒன்றுக்கும் உபயோகமற்றவனாய், நரகத்தில் கிடந்து உழலுவான். எவனொருவன் அதைக் கண்குளிரக் கண்டு தரிசிக்கிறானோ, அவன் புண்ணிய சீலனாய் மோட்சத்தை அடைவான். இதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது.

மந்திர தந்திர பேதங்களை உணர்ந்து கொண்டு மூர்த்தி பேதங்களை, வணங்கித் துதிக்க இயலாதவன், கவுளாகமத்தில் கூறியபடி திரிகோணாகாரமாக இருக்கும் ஸ்ரீ சக்கரத்தில் பூர்வ கோணத்தினுடைய

அக்ரத்தில் குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு, பராத்பர குரு என்னும் ஞானவெளிக்காளாகிய ஆசார சிலர்களைப் பாவித்துப் பூஜை செய்தும், மகா காமேஸ்வரி கூடத்தில் ஸ்ரீவித்தையை எண்ணி அஷ்டோத்தர சகஸ்ரநாமம் போன்ற அர்ச்சனைப் பேதங்களால் அர்ச்சனைகள் செய்தும், வாக்பவ கூடத்தில், ஸ்ரீ வித்தியா மந்திரத்தை ஜபித்தும் வருவானானால் அவன் அத்தகைய தருமக் காரியங்களால் அன்னபானாதிகளுக்கு எந்தவிதக் குறைகளும் இல்லாமல் நிறைந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருவான். இம்மாதிரியாகச் சக்கர பூஜையும் செய்ய முடியாதவன், ஸ்ரீகாமாட்சிதேவியின் திருவடித் தாமரைகளை பக்திப் பெருக்கோடு வணங்கித் துதித்துச் சரணமடைய வேண்டும்.

மேற்சொன்ன முறைகளில் ஏதாவது ஒரு முறையின் படி ஒருவன் பிறவியெடுத்து இறப்பதற்குள் காமகோடி பீடத்தில் தேவியை வணங்கித் துதிக்க வேண்டும். அப்படி வழிபட்டால் அவனுக்கு மறு ஜன்மமும், மரணாவஸ்தையும் ஏற்படாது. அப்படி வழிபடாதவன் ஒரு பிரும கற்ப காலம் வரையிலும் புழு பூச்சியாகவே பிறவியெடுப்பான். ஆகையால் செல்வத்திலேயே புரண்டு கொண்டிருக்கும் மன்னாதி மன்னனும் இந்த ஸ்ரீவித்தையின் அர்ச்சனையை கண்டிப்பாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிப்பதற்காகவே ஸ்ரீகாமாட்சிதேவியானவள் காஞ்சித் தலத்திலுள்ள காமகோடி பீடத்தில் கம்பீரமாகவும், அழகுத் தோற்றத்தோடும் நிரந்தரமாக வீற்றிருக்கிறாள்.

பூர்வீகத்தில் காமாட்சிதேவியை வணங்கி வழிபட்டவர்களில், மகாலட்சுமி, ஹயக்கிரீவ முனிவர், மநுச் சக்கரவர்த்தி, தசரத சக்கரவர்த்தி, துண்டீர மகாராஜன், காந்தார மகாராஜன், சோழ மகாராஜன், ருத்திரர், அனந்தன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஸ்ரீ மகாலட்சுமி

பூர்விகத்தில் பாற்கடலிலிருந்து அமிர்தத்தைக் கடைந்தபோது வெண்மை நிறமாக இருந்த திருமால், விஷத்தின் ஜ்வாலையால் நீல நிறமாக மாறிவிட்டார். அப்போது அவர் மார்பில் தங்கி வசித்து வந்த லட்சுமிதேவி, தன் நாயகருடைய கருமை நிறத்தைப் பார்த்ததும் அருவெறுப்புக் கொண்டாள். அவள் தன் பதியை நோக்கி, "பொன்னிற வண்ணத்தில் ஒளிவீசித் திகழும் எனக்கு நீங்கள் இனியும் பிரியநாயகராக இருக்க முடியாது! உங்களுடைய கருநீல நிறம் என் மனதில் வெறுப்பையே மூட்டுகிறது!'' என்று இகழ்ச்சியாகக் கூறினாள். அதைக் கேட்டதும் மகாவிஷ்ணுவுக்கு அடக்க முடியாத கோபம் வந்து விட்டது. அவர் அவளை நோக்கி, "லட்சுமியே! நீ என்ன ரொம்ப அழகானவள் என்று உன் மனதில் நினைப்போ? என்னைக் கருநிறம் என்று அவமதிக்கும் நீ மட்டும் என்ன ரொம்ப சிகப்பு நிறமோ? என்னை நிந்தித்துப் பேசிய நீ இனியும் இந்த அழகு லாவண்யத்துடன் தோற்றமளிக்க முடியாது. இந்த வினாடியிலிருந்தே நீ கருப்பு நிறமாகவும், கிழவியாகவும் மாறக் கடவாய்!" என்று சபித்து விட்டார். அந்தச் சாபத்தின்படியே லட்சுமி தேவியானவள் உடனே கருப்பு நிறமாகவுள்ள ஒரு கிழவியாக உருமாறிவிட்டாள். அதைக் குறித்து மிகவும் மனம் வருந்திய அவள், காஞ்சியிலுள்ள காமகோடி பீடத்திற்கு வந்து சேர்ந்து, மகாதேவிக்கு எதிரில் நின்று பக்தி சிரத்தையோடு வணங்கினாள். அவளை தேவி பார்த்து, "லட்சுமியே! உனக்கு இந்தக் கருமை நிறமும், கிழத்தனமும் எப்படி வந்தது? மகாவிஷ்ணுவின் மார்பிலிருந்து வணங்கப்பட்டதைப் போலவே, இனி எனக்கு இருப்பிடமாக இருக்கிற இந்தக் காயத்திரி மண்டபத்தில் வலது பக்கத்தில் நிரந்தரமாகத் தங்கியிருந்து பக்தர்களைக் காத்து அபயமளிக்கும் தன்மையினளாக இருந்து வருவாயாக! தவிரவும் என்னுடைய இஷ்டதேவியாக இருக்கும் உன்னை பாதம்

முதல் உச்சி வரையில் தொட்டு வணங்கித் தரிசனம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு அஷ்ட ஐஸ்வரியங்களையும் நீ வாரி வ்ழங்க வேண்டும்!" என்று கட்டளையிட்டாள். அந்தக் கட்டளையின்படியே லட்சுமிதேவியானவள் அந்த இடத்திலேயே சிரஞ்சிவியாகத் தங்கி வரலானாள்.

ஹயக்கிரீவர்

பூர்விகத்தில் ஹயக்கிரீவ முனிவர் மகாவிஷ்ணுவின் திருஉருவத்தைப் பெற விரும்பிக் காஞ்சி காமகோட்டத்தை அடைந்தார். அவர் அங்குள்ள காமாட்சிதேவியை வணங்கித் துதித்து தவம் புரியலானார். அச்சமயத்தில் பத்மநாபன் என்னும் அசுரன் ஒருவன் அங்கு வந்து குதிரை முகமாக உள்ள ஹயக்கிரீவ முனிவரை, மனிதரென்று எண்ணாமல் நிஜக்குதிரையென்றே கருதி விட்டான். அந்தக் குதிரையைத் தனக்கு வாகனமாக்கிக் கொள்ள விரும்பி, அம்முனிவரைப் பாதாள லோகத்திற்குத் தூக்கிச் சென்று விட்டான். அந்த அசுரனை திரிபுராம்பிகை கொன்று, முனிவரின் விருப்பப்படி அவருக்குத் திருமாலின் திருமுகத்தைத் தந்தருளினாள். அதற்குப் பிறகு ஹயக்கிரீவர் பாதாளத்தில் வசித்து வந்த இராட்சசர்களையெல்லாம் கொன்று குவித்துச் சுக்கிராச்சாரியரின் வசமிருந்த அமிர்த கலசத்தைக் கிரகித்துக் கொண்டு, காமகோட்டத்திற்கு விரைந்து வந்தார். தான் கிரகித்த அமிர்தத்தினால் திரிபுராம்பிகைக்கு அபிஷேகம் செய்வித்து, பக்திப் பெருக்கோடு அவளை வணங்கித் துதித்தார். பிறகு தேவிக்குத் தட்சிண பாகத்திலேயே அவரும் சாஸ்வதமாகத் தங்கி விட்டார்.

மநுச் சக்கரவர்த்தி

பூர்விகத்தில் எட்டாவதாகிய மநுவுக்குச் சூரியபகவான் பூலோகத்தை அரசாட்சி செய்து வரும்படிக் கொடுத்திருந்தார். ஆனால் உலகத்தை

ஆளுவதற்கு முன்பாக, அதற்குத் தெரிய வேண்டிய பாவ புண்ணியங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டுமென்று மநு விரும்பினான். அதனால் அவன் பூலோக ஆட்சியைச் சுமந்திரன் என்னும் மந்திரியின் வசம் ஒப்படைத்து விட்டு, தனது குருவான வசிஷ்ட முனிவரிடமும் விடைபெற்றுக் கொண்டு காஞ்சியிலுள்ள காமகோட்டத்தை வந்து சேர்ந்தான். அங்கிருந்த துர்வாசமுனிவரிடத்தில் தேவியின் மந்திரோபதேசம் பெற்று, அந்த மந்திர முறைப்படியே தேவியை ஆராதித்து வணங்கி வழிபட்டுக் கடுந்தவம் புரிந்தான். அவனுடைய தவத்தை மெச்சிய காமாட்சிதேவியானவள் கலைவாணியின் வடிவம் கொண்டு ஒரு கும்பத்தில் உலகாணி தீர்த்தமாகிய பஞ்ச தீர்த்தத்தை நிறைத்து, மநுவிற்கு எதிரில் காட்சியளித்தாள். கும்பத்திலுள்ள தீர்த்தத்தை அவனுடைய தலையின் மேல் வார்த்து, அவன் சகலகலைகளையும் உணர்ந்து கொள்ளும்படியாக அனுக்கிரகித்து மறைந்தாள். உடனே மநுச்சக்கரவர்த்தி கலைவாணிக்குச் சமானமாகச் சகல சாஸ்திரங்களிலும் வல்லவனாகத் தன் நகரம் போய்ச் சேர்ந்தான். அதன் பின்னர் அவன் நீதிநெறி தவறாமல் பூலோகத்தை நீண்ட நாட்கள் செவ்வனே அரசாண்டு வந்தான்.

தசரதச் சக்கரவர்த்தி

தசரதச் சக்கரவர்த்தி குழந்தைச் செல்வத்திற்காக வசிஷ்டருடைய கட்டளையின்படி தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். அப்படித் தீர்த்த யாத்திரை செல்லும் போது அவர் காமகோடி பீடத்திற்கு வந்து, திரிபுராம்பிகையை தரிசித்து வணங்கினார். ஒருநாள் வானத்திலிருந்து அசரீரி ஒன்று, "தசரதனே! இன்னும் ஒரு வருஷ காலத்திற்குள் உனக்கு புத்திரப் பாக்கியம் கிட்டும்!" என்று கூறியது. அதைக் கேட்டதும் தசரதச் சக்கரவர்த்தி அளவுகடந்த ஆனந்தப் பெருக்கில் திளைத்தவராய் தன் நகரம் போய்ச் சேர்ந்தார். பிறகு

கூடிய சீக்கிரத்திலேயே அவருக்குப் புத்திரர்கள் பிறந்தார்கள்.

துண்டீர மகாராஜன்

பூர்விகத்தில் நான்முகனால் ஆகாயத்திலிருந்து சந்திரனின் அம்சமாக வருவிக்கப்பட்ட ஆகாய பூபதியான துண்டீர மகாராஜன், தான தருமத்திற்காகச் சேகரிக்கப்பட்டிருந்த பொன் பொருள்களையெல்லாம் திருடியெடுத்துக் கொண்டு, புத்த மதத்தில் புகுந்து, தெய்வபக்தியை அடியோடு இழந்து விட்டான். அந்தப் பாவச் செய்கையின் பயனாக அவனுக்குக் குழந்தை பாக்கியமே கிட்டவில்லை.

பிறகு, பூர்விகத்தில் செய்திருந்த புண்ணிய பலன்களின் சிறப்பால் கோரட்ச சித்தரை அடையப் பெற்று, வேதபாஹ்யமாகிய புத்த கொள்கைகளைக் கைவிட்டு, வேதாகமங்களில் கூறியுள்ள தருமங்களை உபதேசிக்கப் பெற்றான். பிறகு புத்தமதத்தைச் சேர்ந்தவர்களையும், அவர்களுடைய மதகுருக்களையும், தனது நாட்டில் இல்லாதபடி விரட்டி விட்டான். அரசாட்சியை நீதிநெறியோடு செலுத்தி, அம்பிகையின் மந்திரோபதேசங்களையும் பெற்றான். பிறகு காஞ்சித் தலத்திலுள்ள கோவில்கள் அனைத்திற்கும் சென்று ஈசனையும், ஈஸ்வரியையும் தரிசனம் செய்து மகிழ்ந்தான். அவன் காமாட்சி தேவியிடத்தில் அளவு கடந்த அன்புப் பெருக்கும், பக்தியும் செலுத்தி, தேவியின் வழிபாட்டிலேயே தனது வாழ்நாட்களைக் கழித்து வந்தான். அவனுடைய அரசாட்சியில் நீதியும் தருமமும் நிறைந்து விளங்கின. அவனுடைய அரசாட்சியைக் கண்டு மனம் பூரித்த காமாட்சிதேவி, அவனுக்குப் புத்திரச் செல்வத்தை அளிக்கக் கருதினாள். அதனால் அவள் தனது மூத்த மகனாகிய விநாயகரை நோக்கி, “என்னுடைய பக்தனாகிய ஆகாய பூபதிக்குப் புத்திரனாக நீயே செல்லவேண்டும்!” என்று கூறினாள். அதற்குக் கணேசப்பெருமான், “நான்

அனைவராலும் பிள்ளையார், பிள்ளையார் என்றே வணங்கப் பெறுகிறேன். அப்படிப்பட்ட பெயரைக் கொண்டிருக்கிற நான், உனது பக்தனுக்குப் பிள்ளையாக அவதரிப்பதும் நியாயம்தான்! இப்போதே நான் போகிறேன்!'' என்று தாயிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். பிறகு துண்டீர மகாராஜனின் முன்னிலையில் சென்று, "அரசனே! ஸ்ரீ காமாட்சிதேவியின் கருணாகடாட்சத்தினால் நான் உனக்கு மகனாக இருக்க வந்திருக்கிறேன்!' என்று கூறினார். அந்த இனிய வார்த்தைகளைக் கேட்ட அரசன், அளவுகடந்த ஆனந்தப் பெருக்கில் திளைத்தவனாக, தன் மனைவியிடம் அந்தச் செய்தியைக் கூறினான். அவள் பெற்ற தாயினும் பெரிதும் அன்பு கொண்டவளாக கணேசப் பெருமானை வாரியெடுத்து மார்போடு அனைத்துக் கொண்டாள். அப்போது விநாயகமூர்த்தியானவர் அப்போது தான் பிறந்த பச்சைக் குழந்தையைப் போல அவர் மடியில் தவழ்ந்தார். அக்குழந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தையும் அரசன் செய்து முடிக்க விரும்பினான். குழந்தை அவதரித்த அன்றைய தினத்திலிருந்து பதினோரு நாட்கள் வரையிலும் விசேஷமாகச் சடங்குகளைச் செய்து நிறைவேற்றிப் பன்னிரண்டாவது நாளன்று ஜாதகத்தைக் கணிப்பதற்காக, அரசனும் அரசியும் நீராடி, நித்தியக் கடன்களை முடித்துக் கொண்டு, தேவியின் சந்நிதானத்திற்குச் சென்றார்கள். அந்த இடத்தில் நடத்த வேண்டிய பூஜைகள், அர்ச்சனைகள், ஓமங்கள் ஆகிய சகலத்தையும் விதிமுறைப்படி மிகச் சிறப்பாகச் செய்வித்து, பிராமணர்களுக்கு உச்சிப் பொழுதில் இன்னமுதமும் படைத்தார்கள். அப்போது எதிர்பாராதவிதமாக ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பொன்மாரி பொழிந்தது. அந்த அதிசயத்தைக் கண்ட அரசன், அதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியாமல் திகைத்தான். அங்கு வந்திருந்த ஸ்ரீவத்சர் என்னும் முனிவரையும் மற்றும்

உள்ளோரையும் வணங்கி, "இது என்ன அதிசயம்? இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்குரிய காரணத்தைச் சொல்லத் தெரியாமல் முனிவர்கள் அனைவரும் விழித்தார்கள். அப்போது மஞ்சத்தில் பன்னிரண்டு நாள் குழந்தையாகப் படுத்திருந்த விநாயகப்பெருமான், மஞ்சத்தை விட்டுக் கிழே இறங்கித் தவழ்ந்து வந்து, அங்கே உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்த அந்தணப் பெண்மணிகளுக்கு இடையே சென்று, தன் தந்தையாகிய அரசனுடைய முகத்தைப் பார்த்தார். "அப்பா! இப்போது எதனால் பொன்மழை பொழிந்தது என்பதன் காரணத்தை நான் சொல்லுகிறேன். அந்தணர்களுக்கு உணவளிப்பதற்காக நீ சேகரித்து வைத்திருந்த பயிரில் உன் சொத்திலுள்ள பொன்னில் ஒரு பயிரளவு பொன் கலந்து விட்டது. சமையல்காரர்களும் அதை அறிந்து கொள்ளூமல் பயிருடன் அந்தப் பொன்னையும் சேர்த்துச் சமைத்து விட்டார்கள். உன் மனதிற்கிசைந்த தெய்வமாகிய காமாட்சிதேவியானவள், பெண்மணிகளின் சாப்பாட்டுப் பந்தியில் தானும் ஒரு பெண்ணைப் போல் வடிவம் கொண்டு சர்ப்பிட்டு வரும்போது, அவளுடைய வயிற்றினுள் பொன்னைச் சேர்த்துச் சமைத்திருந்த கொழுக்கட்டையொன்று போய்விட்டது. அந்த மகிமையினால்தான் உன்னுடைய நகரமாகிய இந்தக் காஞ்சித் தலத்தில் பொன்மாரி பொழிந்தது. இப்போது அந்தக் காமாட்சிதேவியும் பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். நீயும் அவளைப் பார்க்க முடியும்!" என்றார். அதைக் கேட்டதும் அரசன் அளவுகடந்த மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்து, குழந்தை வடிவத்தில் இருக்கும் விநாயகப்பெருமானை அழைத்துக் கொண்டு, பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பந்தியை நோக்கிச் சென்றான். தேவியின் அருகாமையில் அரசன் சென்றபோது, அம்பிகையானவள் சட்டென்று மறைந்து விட்டாள். உடனே விநாயகப்பெருமான் தேவி

சாப்பிட்டுச் சென்றிருந்த இலையிலிருந்த எச்சில்களை எடுத்து ஆவலோடு புசித்தார். அங்கிருந்த மற்ற பிராமணர்களும், அரசனும், தேவியின் எச்சிலும் விநாயகப்பெருமானின் எச்சிலும் கலந்திருந்த அந்த எச்சில் உணவை சாப்பிட்டு, தேவியின் அன்புக்குப் பாத்திரமானார்கள்.

அதன் பின்னர், அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமான ஆகாயபூபதியின் அருமைப் புதல்வராகிய கணேசமூர்த்திக்குத் 'துண்டீரப் பிரபு' என்னும் திருப் பெயரை அனைவருமாகச் சேர்ந்து சூட்டினார்கள். அவருக்குச் செய்ய வேண்டிய விசேஷங்களையெல்லாம் நிறைவேற்றி, அவருக்கு அப்போதே இராஜ்யப் பட்டாபிஷேகத்தையும் செய்து முடிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். காமகோடி பீடத்தில் ஸ்ரீ காமாட்சிதேவி வீற்றிருக்கும் சந்நிதானத்திற்கு மேற்குப் பக்கமாக விநாயகப் பெருமானாகிய துண்டீரரை எழுந்தருளச் செய்து, இளவரசுப் பட்டாபிஷேகமும் செய்வித்து, காஞ்சி நகரத்தை அவர் வசம் ஒப்படைத்தார்கள்.

துண்டீரராகிய கணேசரின் சந்நிதானத்துக்கு எதிரில் போகும்போது வாய் திறந்து எதுவும் பேசாமல் மௌனமாகவே போக வேண்டும். அதற்குக் காரணம்:

காஞ்சி நகரத்தின் ஏகசக்ரவர்த்தியாய் அரசாட்சி செய்ய வந்த விநாயகப்பெருமான் துண்டீரன் என்னும் பெயரில் இளவரசுக் கோலத்தோடு, காமாட்சி தேவியின் ஆலயத்தில் இரண்டாவது ஆவரணத்தில் தேவியின் கடாட்சத்திற்காகச் சந்நிதானத்தில் வீற்றிருக்கிறார். அவர் கிருதயுகத்தில் சாட்சாத் விநாயகப்பெருமானாகவே இருந்தும், திரேதாயுகத்தில் தேவயோனி சம்பந்தமான அம்சத்தில் கலந்தும், துவாபர யுகத்தில் மநுக்களுடைய அம்சத்தில் கலந்தும், அரசாட்சி செய்து வந்து, கலியுகத்தில் விக்கிரக வடிவமாகப் பிரதிஷ்டை செய்திருக்கும் தனது

உருவத்தில் யாரும் கண்டு கொள்ள முடியாத தேஜோரூபமாகக் கலந்து அம்பாளை வணங்கிக் கொண்டிருக்கிறார். அதனால் அந்த இரண்டாவது ஆவரணத்தில் அவருக்கு எதிராகச் செல்லும்போது, அவரது தியானத்துக்குப் பங்கம் ஏற்படாதவகையில், அரச சபையில் நுழையும்போது எப்படி பயபக்தியாகவும், மௌனமாகவும் போகிறோமோ, அதைப் போலவே செல்ல வேண்டும். அப்படி மௌனமாகப் போகாமல், சளசளவென்று பேசிக் கொண்டே போனால், காமாட்சி அம்மனைத் தரிசனம் செய்த பலனை இழந்து விடுவார்கள். மௌனமாகச் சென்றால், அந்தத் தரிசன பலனையும், இராஜ சமூகத்தினரால் ஆதரவும் பெறுவார்கள்.

சோழராஜன்

பூர்விகத்தில் சோழராஜ்யத்தில் காவேரி நதி திரத்தில், விருஷ வம்சத்தில் தோன்றிய விக்கிரம சோழன் என்பவன் அரசாண்டு வந்தான். அவன் வீரசோழ மகாராஜனின் புத்திரனாவான். ஒரு சமயம் அவனுடைய ராஜ்யத்தை, அவன் சகோதரனான சல்லியாபிதன் என்பவன் அபகரித்துக் கொண்டு விட்டான். அதனால் மனம் வருந்திக் கலங்கிய விக்கிரம சோழன், அரசாட்சியையே வெறுத்துத் தன் மனைவியுடன் ஊர் ஊராகச் சுற்றித் திரியலானான். அப்படிச் சுற்றி வரும்போது, தெய்வ வசமாக அவன் காஞ்சி காமகோட்டத்தை வந்து சேர்ந்தான். அங்கே மலர்ச்சோலைகள் நிறைந்த நந்தவனங்களை அமைத்து, யானை துதிக்கை பெருமானமான அளவுக்கு நறுமணம் வீசும் மலர் மாலைகளைத் தொடுத்துக் கட்டி, காமாட்சிதேவிக்கு அணிவித்து, அத்தேவியைப் பக்தி சிரத்தையோடு தியானித்து வணங்கி வழிபட்டு வந்தான். நாளடைவில் அம்பிகையின் திருவருளால் அத்தம்பதிகளுக்குப் பெண் குழந்தையொன்று பிறந்தது. அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, அழகு கொழிக்கும் இளமைப்

பருவத்தை அடைந்தது. அப்பெண்ணின் அதியற்புத அழகு லாவண்யத்தை யாராலுமே வர்ணித்துக் கூறமுடியாதபடி, அவ்வளவு அற்புத அழகுக் கவர்ச்சியோடு அவள் திகழ்ந்தாள். அப்போது பாண்டிய நாட்டை ஆட்சி செய்து வந்த குலசேகர பாண்டியனுக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்குத் தகுந்த பெண் வேண்டுமென்று அரசன் எல்லா மன்னர்களுக்கும் அறிக்கை விடுத்தான். ஒரு நாள் பாண்டியராஜனின் கனவில் காமாட்சிதேவி தோன்றி, "அரசனே! என்னுடைய காஞ்சித்தலத்தில் விக்கிரம சோழன் என்னும் அரசன் தன் ராஜ்யத்தைத் துறந்து, தன் மனைவியோடு தேச சஞ்சாரம் செய்து, என்னுடைய காமகோட்டத்திற்கு வந்து, என்னை வழிபட்டு வருகிறான். என்னுடைய அருளினால் அவனுக்கு ஒரு பெண் பிறந்திருக்கிறாள். அவளுடைய அழகுக் கவர்ச்சியின் தன்மைகளைப் பற்றி நான் உனக்குச் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது! நீயே அவற்றைப் பார்க்கத்தானே போகிறாய்! ஆகவே அந்தப் பெண்ணை உன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்து விடு. அதுவும் தவிர அந்த விக்கிரம சோழ ராஜனை அவனுடைய நாட்டுக்கு அழைத்துச் சென்று, இராஜ்யப் பட்டாபிஷேகமும் செய்து வைப்பாயாக!" என்று உத்தரவிட்டு விட்டு மறைந்து போனாள். தான் கண்ட கன்வை எண்ணி மனம் பூரித்த அரசன், தனது மந்திரிப் பிரதானிகளோடு காஞ்சித்தலத்திற்கு வந்து விக்கிரமசோழனைச் சந்தித்தான். தேவியின் கடாட்சத்தைப் பெற்றிருக்கும் அவனை பாண்டியராஜன் நமஸ்கரித்து எழுந்து, தனக்கு தேவி இட்ட கட்டளையைப் பற்றிக் கூறினான். அதன்பிறகு அம்பிகைக்குச் செய்ய வேண்டிய பூஜைகளையும், வழிபாடுகளையும் சிறப்பாகச் செய்து, விக்கிரமசோழனை அழைத்துக் கொண்டு போய், அவனுடைய சோழ நாட்டில் முடிசூட்டி வைத்தான். அவனுடைய புத்திரியைத் தன்னுடைய மகனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துத் தன் ஊர் போய்ச்

சேர்ந்தான். குலசேகரபாண்டியன் அங்கிருந்து சென்றபிறகு விக்கிரமசோழ மகாராஜன், தனது இராஜ்ய பரிபாலனத்தைத் தன் மைந்தனிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பவும் காஞ்சித்தலத்திற்கே வந்தான். அப்போது அந்தக் காஞ்சி நகரம் பொட்டல் காடாகப் பாழடைந்து கிடந்தது. அக்காட்டை அழித்து, மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், மலர்கள் நிறைந்த நந்தவனங்களையும் சோழராஜன் உண்டாக்கினான். அங்கே தேவி ஆலயங்களைச் சிறப்பாகக் கட்டி, பசுக்கள், பூமிகள், ஏராளமான பொன்பொருள்கள், ஆபரண வகைகள் பொன்னாடைகள் முதலான சகல செல்வங்களையும் காமாட்சிதேவிக்குச் சமர்ப்பணம் செய்து திடமனதுடன், சிறந்த தவங்களைச் செய்து, அனைவராலும் காடு வெட்டிய சோழன் என்று அழைக்கப்பட்டான். முடிவில் தேவியின் திருவடிகளில் அவன் ஐக்கியமானான்.

பிரும விஷ்ணுக்களாகிய இருவரோடும் ஒருவராக உள்ள ருத்திரமூர்த்தியும், ஆதிசேஷனும், கலியுகத்தில் அம்பிகையை சாஸ்திர முறைப்படி வணங்கி, முடிவில் அழிவற்றதாகிய மோட்சத்தை அடைந்தார்கள்.

இம்மாதிரியாக யுகங்கள் தோறும் தேவர்கள் மட்டும் அல்லாமல், சோமசூரியாக்கினிகள் என்று சொல்லப்படும் மூன்று வம்சத்து அரசர்களும், ஸ்ரீகாமாட்சிதேவியைப் பூஜித்து மோட்சத்தை அடைந்திருக்கிறார்கள்.

இப்படியாகக் காஞ்சியில் காமகோடிபீடவாசினியாகச் சாஸ்வதமாக வீற்றிருக்கும் சுவர்ணகாமாட்சியை ஒரு தடவை தரிசித்தாலே போதும். கோடி கோதான பலன்களை அதன் மூலமாக அடைந்து விடலாம்.

இந்தப் புராணத்தைப் படிப்பதனால் உண்டாகும் பயன்கள்



இந்தக் காமாட்சிதேவியின் லீலாவினோதங்களைப் படிப்பவர்களும், கேட்பவர்களும், சுவர்ணகாமாட்சியைத் தரிசனம் செய்யும் பலனைப் பெறுவார்கள். தவிரவும் இதைப் பங்குனி மாதம் திருக்கல்யாண மகோத்சவ தினமாகிய உத்திர நட்சத்திர நாளிலும், காமாட்சிதேவியின் ஆவிர்ப்பவ நாளாகிய ஐப்பசி மாதம் பூர நட்சத்திரத்திலும், காமாட்சி வடிவினராக விளங்கும் வரதராஜப்பெருமானுடைய அவதார தினமாகிய சித்திரை மாதம் அஸ்த நட்சத்திரத்திலும் ஆசார்ய முகமாய்க் கேட்டு வந்து முடிவு செய்வார்களானால், அவர்கள் அடையக் கூடிய பலனைப் பற்றி அளவிட்டுச் சொல்லவே முடியாது. அன்றைய நாளில் காமாட்சி பிரபாவத்தைக் கூறி வந்தவராகிய அவரைச் சாட்சாத் வியாசமுனிவராகக் கருதி, அவருக்கு வஸ்திராபரணம், சந்தன புஷ்பாட்சதை, மலர் மாலை முதலியவைகளைச் சாத்தி,

தூபதீப நைவேத்தியம் செய்து, தாம்பூலம், மங்களாரத்தி முதலியவைகளையும் நடத்தி, வேதபாராயணக் கோஷங்களோடு, சகல வாத்தியங்களும் இன்னிசை முழக்கம் செய்ய, அவருடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவரைத் தக்கதோர் ஆசனத்தில் அமர்த்தி நமஸ்கரித்து எழ வேண்டும். அவரிடத்திலிருந்து ஆசிர்வாத அட்சதை பெற்று, அதைத் தலையில் தெளித்துக் கொண்டு, தங்கள் இருப்பிடம் போய்ச் சேர வேண்டும்.

கபம்



ஸ்ரீ காமாட்சி துஃக்க நிவாரண அஷ்டகம்
(ஸ்ரீதுர்க்கைச் சித்தர் அருளியது)

மங்கள ரூபிணி மதி அணி சூ'லினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
ச'ங்கரி ஸௌந்தரியே ।
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜய ஜய ச'ங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 1

கான் உறுமலர் எனக்கதிர் ஒளி காட்டிக்
காத்திடவந்திடுவாள்
தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள் ।
மான்உறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜய ஜய ச'ங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 2

ச'ங்கரி ஸௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே ।
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜய ஜய ச'ங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 3

தண தண தந்தண தவில்ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய் ।
பண பண பம்பண பறைஒலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜய ஜய ச'ங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 4

பஞ்சமி, பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே।
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல்
சக்தி எனும் மாயே
ஜய ஜய ச்ங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 5

எண்ணியபடி நீ அருளிட வருவாய்
எம்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்।
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜய ஜய சங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்।
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜய ஜய சங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 7

ஜய ஜய பாலா சாமுண்டீஸ்வரி
ஜய ஜய ஸ்ரீதேவி।
ஜய ஜய துர்க்கா ஸ்ரீ பரமேச்வரி
ஜய ஜய ஸ்ரீதேவி ॥
ஜய ஜய ஜயந்தி மங்களகாளி
ஜய ஜய ஸ்ரீதேவி
ஜய ஜய சங்கரி கௌரி க்ருபாகரி
து:க்க நிவாரணி காமாக்ஷி ॥ 8

ஸ்ரீ காமாட்சி ஸ்தோத்திரம்

காஞ்சீ நூபுர ரத்ன கங்கண லஸத்
கேயூர ஹாரோஜ்வலாம்
காச்'மீராருண கஞ்சுகாஞ்சித குசாம்
கஸ்தூரிகா சர்ச்சிதாம் ।
கல்ஹாராஞ்சித கல்பகோ ஜ்வலமுகீம்
காருண்ய கல்லோலினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 1

காமாராதி மன : ப்ரியாம் கமலபூ
ஸேவ்யாம் ரமாராதிதாம்
கந்தர்பாதிக தர்பகான விலஸத்
ஸௌந்தர்ய தீபாங்குராம் ।
கீராலாப வினோதினீம் பகவதீம்
காம்ய ப்ரதான வ்ரதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 2

காதம்ப ப்ரமதாம் விலாஸ கமனாம்
கல்யாண காஞ்சீ ரவாம்
கல்யாணாசல பாத பத்ம யுகளாம்
காந்த்யா ஸ்மரந்தீம் சு'பாம் ।
கல்யாணாசல கார்முகப்ரியதமாம்
காதம்ப மாலாச்'ரியாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம் ॥ 3

கந்தர்வாமர ஸித்தசாரண வதூம்
த்யாயேத் பதா காஞ்சிதாம்
கௌரீம் குங்கும பங்க பங்கித ருசாம்
த்வந்த்வாபி ராமாம் சு'பாம் ।
கம்பீரஸ்மித விப்ரமாங்கித முகீம்
கங்காதராலிங்கிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 4

விஷ்ணு ப்ரஹ்ம முகாமரேந்த்ர பரிஷத்
கோடீர பீடஸ்த்தலாம்
லாக்ஷா ரஞ்ஜித பாத பத்மயுகளாம்
ராகேந்து பிம்பானனாம் ।
வேதாந்தாகம வேத்ய சிந்த்ய சரிதாம்
வித்வஜ்ஜனைரா வ்ருதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 5

மாகந்த த்ரும மூலதேச' மஹிதே
மாணிக்ய ஸிம்ஹாஸனே
திவ்யாம் தீபித ஹேமகாந்தி நிவஹா
வஸ்த்ரா வ்ருதாம் தாம் சுபாம் ।
திவ்யா கல்பித திவ்யதேஹ பரிதாம்
த்ருஷ்டி ப்ரமோதார்பிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 6

ஆதாராதி ஸமஸ்த சக்ரநிலயாம்
ஆத்யந்த சூ'ன்யாமுமாம்
ஆகாசா'தி ஸமஸ்தபூத நிவஹா
காராம் அசேஷாத் மிகாம் ।
யோகீந்த்ரைரபி யோகினீ சத்கணை
ராராதிதா மம்பிகாம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 7

ஹ்ரீங்கார ப்ரணவாத்மிகாம் ப்ரணமதாம்
ஸ்ரீ வித்யவித்யாமயீம்
ஐம் க்லீம் ஸௌம் ருசி மந்த்ர மூர்த்தி
நிவஹா காரா மசே'ஷாத்மிகாம் ।
ப்ரஹ்மானந்த ரஸானுபூத மஹிதாம்
ப்ரஹ்மப்ரியம்வாதினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம் ॥ 8

ஸித்தானந்த ஜனஸ்ய சின்மய ஸுகா
காரா மஹா யோகிபி :

மாயா விச்'வ விமோஹினீம் மதுமதீம்
 த்யாயேத் சு'பாம் ப்ராஹ்மணீம் ।
த்யேயாம் கின்னர ஸித்தசாரண வதூ
 த்யேயாம் ஸதா யோகிபி :
காமாக்ஷீம் கலயாமி கல்ப லதிகாம்
 காஞ்சீபுரீ தேவதாம் ॥ 9

காமாரிகாமாம் கமலாஸனஸ்த்தாம்
 காம்யப்ரதாம் கங்கண சூடஹஸ்தாம் ।
காஞ்சீ நிவாஸாம் கனக ப்ரபாஸாம்
 காமாக்ஷீதேவீம் கலயாமி சித்தே ॥ 10

ஸ்ரீ விஷ்ணு புராணம்

நடை வளமும், பொருள் வளமும் வசிகரிப்பதுடன் சிந்தனையைத் தூண்டும் சித்திரங்களையும் கொண்டுள்ளது. சமஸ்க்ருத மூலத்தை அனுசரித்து ஆறு அம்சங்களும் எளிய நடையில் அமைந்துள்ளது.
பக்கங்கள் 536 விலை ரூ. 80-00

ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள் (பெரிய புராணம் வசனம்)

தமிழகத்தில் தலைசிறந்த பெருங்கவிஞர்களுள் ஒருவரான சேக்கிழார் பெருமான் பாடியருளிய நூலே பெரியபுராணம். சமயம், வரலாறு, இலக்கியம் நிறைந்த இந்த இனிய நூலை அறுபத்து மூவர் கதைகள் என்னும் தலைப்பில் வசன வடிவில் இனிய எளிய நடையில் இன்றியமையாத அடிக்குறிப்புகளுடன் அழகிய ஓவியங்களும் சேர்க்கப் பட்டிருத்தல் நூலின் சிறப்பினை மிகுதிப்படுத்துகின்றது.
பக்கங்கள் 624 விலை ரூ. 90-00

ஸ்ரீ கருட புராணம்

உலகில் உயிரினங்களுக்குப் பிறப்பும், இறப்பும், எந்தக் காரணத்தால் உண்டாகின்றன? எதனால் முக்தி மோட்சம் கிடைக்கும் என்று நைமிசாரண்ய வாசிகள் கேட்டதற்கு சூதமா முனிவர் கூறிய புராணம். இது வாழ்விற்கு அப்பால் ஜீவன் செல்லும் வழிவகைகளை விளக்கும் நூல்.
பக்கங்கள் 120 விலை ரூ. 18-00

ஸ்ரீ வன்னிய புராணம்

சிவபெருமானின் அருள் பெற்ற வாதாபியின் காலத்தில் வாழ்ந்த வீரவன்னியன் மற்றும் அவனது நான்கு புதல்வர்களின் வெற்றி வரலாற்றையும், வீர சாகஸங்களையும் விளக்கும் அற்புதமான நூல்.
பக்கங்கள் 136 விலை ரூ. 20-00

ஸ்ரீ குருவாயூரப்பன்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீகுருவாயூரப்பனின் தெய்வீக மகிமைகள், ஸ்ரீநாராயணீயம், ஸ்ரீ குருவாயூரப்பனின் லீலைகள், திருவிழாக்கள், ஸ்தோத்திர பாடல்கள் அடங்கியது.
பக்கங்கள் 160 விலை ரூ. 25-00

ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்

பன்னிரு ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர்களுக்கு இறைவன் அருள்புரிந்த சம்பவங்களையும் பக்தி மணம் கமழும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது
பக்கங்கள் 144 விலை ரூ. 22-00

ஸ்ரீ வசவ புராணம்

(நந்தி தேவர் கதைகள்)
பக்கங்கள் 224 விலை ரூ. 28-00

ஸ்ரீ நாரதர் புராணம்

குண சிகிச்சை செய்யும் குணசித்திர சூத்ரதாரி தான் நாரதர். அவர் சிருஷ்டித்த நமக்குச் சிந்தனைத் தேனாக ஞானம் போதிக்கும் கதைகள் தான் எத்தனை? அதில் பொதிந்திருக்கும் தத்துவம் தான் எத்தனை?

பக்கங்கள் 216 விலை ரூ. 40-00

ஸ்ரீ சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ சுவாமி ஐயப்பன் வரலாறு, பூஜை வழிமுறைகள், யாத்திரை விபரங்கள், ஸ்ரீ ஐயப்பன் ஸ்தோத்திரங்கள் ஆகியவைகள் அடங்கிய பக்தி நூல்.

பக்கங்கள் 112 விலை ரூ. 18-00

ஸ்ரீ ஆதிசங்கரர்

பெரியோர் சொல் வாழ்க்கைக்கு ஏற்ற பிரமாணம். அதன்படி நடப்பது நிம்மதியானது. உயர்வானது. இவ்வுண்மையை மனதில் கொண்டே ஆதிசங்கரர் வாழ்க்கை இந்நூலில் படைக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 120 விலை ரூ. 20-00

ஸ்ரீ ராமானுஜர்

முதன்முதலாக ஹரிஜன மக்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்து வைத்த பெருமை ஸ்ரீராமானுஜரைச் சேரும். திருநாராயணபுரம் கோவிலுக்கே அப்பெருமை உடையது. தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்கள் என்ற வேற்றுமையை விலக்கியவர்.

பக்கங்கள் 136 விலை ரூ. 22-00

சித்தர் பாடல்கள்

பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், சிவ வாக்கியர், அகத்தியர் முதலான பதினெண் சித்தர் பாடல்கள் விளக்கக் குறிப்புரைகளுடன் தரப்பட்டுள்ளன.

ஒரே புத்தகம் - பக்கங்கள் 776 விலை ரூ. 100-00

வில்லி பாரதக் கதை (வில்லிப்புத்தூராரின் மகாபாரதம்)

கண்கவர் சித்திரங்களுடன் எளிய தமிழில் வசன வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. ஹார்டு பைண்டிங் செய்யப்பட்டுள்ளது

பக்கங்கள் 780 விலை ரூ. 110-00

ஸ்ரீ காஞ்சி காமகோடி புரா்ணம்

காஞ்சி, காமகோட்ட ஸ்தல வரலாறுகள் மற்றும் ஸ்ரீகாமாட்சி தேவியின் லீலாவினோதங்கள் படிப்பவர்களைப் பக்தி பரவத்தில் ஆழ்த்தும். பக்கங்கள் 144 விலை ரூ. 25-00

கணபதி ஹோமம்

அருள்மிகு கணபதி வேள்வி முறை : பன்னிரு திருமுறைகளிலிருந்து தொகுக்கப்பெற்றது.

பக்கங்கள் 80 விலை ரூ. 15-00

தமிழ்ப்புலவர் ஔவையார்

தமிழகத்தில் தோன்றிய பெண்பாற் புலவர்களுள், தலைசிறந்த அறிஞராக புகழோடு விளங்கி வரும் ஔவையாரின் பிறப்பு, வரலாறு முதலியன பாடல் மேற்கோளுடன் அழகாக கொடுக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 104 விலை ரூ. 15-00

தமிழ்ப்புலவர் கவி காளமேகம்

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ? - சும்மா இருந்தால் இருந்தேன்: எழுந்தேனே ஆயின் பெருங்காள மேகம் பிளாய்!

பக்கங்கள் 112 விலை ரூ. 25-00

கதைகள்

விக்கிரமாதித்தன் கதைகள்	78 00
மதனகாமராஜன் கதைகள்	60 00
மரியாதைராமன் கதைகள்	10 00
வேதாளம் சொன்ன கதைகள்	15 00
திராவிட நாட்டுக் கதைகள்	75 00
ஹாத்திம்தாய்	65 00
குரங்கு மாமுனிவர் கதைகள்	.35 00
போதிசத்துவர் கதைகள்	100 00
கதைக்கடல்	75 00
தெனாலிராமன் கதைகள்	10 00
மங்கம்மா சத்திரத்து மனமோகன கதைகள்	125 00
இராயர் அப்பாஜி கதைகள்	12 00
பீர்பால் கதைகள்	10 00
ஈசாப் கதைகள்	22 00
பாட்டி சொன்ன கதை	80 00
சிந்தைக்கு விருந்தாகும் குட்டி கதைகள்	25 00
பைபிள் கதைகள்	85 00
வீரபாண்டிய கட்டபொம்மன்	75 00

மற்றும் சிந்தனையாளர் வரிசை, பொன்மொழிகள் வரிசை, ஜோதிட நூல் வரிசை, ஆராய்ச்சி நூல் வரிசை, சிறுவர் கதை பெட்டகம், மர்ம நாவல்கள், சமூக, சரித்திர நாவல்கள் ஆகிய விவரங்கள் கொண்ட இலவச விலைப்பட்டியலுக்குத் தொடர்வு கொள்க.

பிரேமா பிரசுரம்

35, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைபேசி : 24800325, 24833180.
Fax : 044-24811755
E-mail : aruram@md2.vsnl.net.inF



வரதராஜபெருமாள் கோவில்



ஏகாம்பரேஸ்வரர் கோவில்



காமாட்சி அம்மன் கோவில்



கைலாச நாதர் கோவில்